Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 11 | சௌமிய | தை 24 | ஜுலகம் 28 | (6-2-70) | வெள்ளிக்கிழமை | இதழ் – 358

காலம் பெறுமதியானது
துரித சலவைக்கு
மில்க்வைற்
சலவைப் பவுடர்
பாவியுங்கள்
வெற்றுறைகளைச் சேகரித்து
அனுப்பி பரிசுகளைப் பெறுங்கள்
மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# மேயர் பதவியை நாகராஜா ராஜினமாச் செய்தார்

## அடுத்த மேயர் யார்? ஆதரவு தேடுவது ஆரம்பம்



யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரமேயர் பதவியை திரு. சி. நாகராஜா நேற்றுப் பிற்பகல் 4-30 மணிக்கு ராஜினமாச்செய்தார். மேயர் பதவியை அவர் ராஜினமாச்செய்துவிட்டதால் அவர்மேல் கொண்டுவரப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது விவாதம் நடைபெறமாட்டாது.

யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தில் சிலகாலம் இருந்தபின் 1968.ம் ஆண்டு இறுதியில் புதிய அங்கத்தவர்களை தெரிவதற்கான தேர்தல் நடைபெற்றது இத்தேர்தலின்பின் 1969–ம் ஆண்டு ஆரம்பத்தில் நடந்த சபையின் முதல் கூட்டத்தில் திரு. சி. நாகராஜா மேயராகத் தெரிவுசெய்யப் பட்டார்.

தமிழ்க்காங்கிரஸ் தமிழரசுக்கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி திரு. நாகராஜா மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். அந்த உடன்பாட்டின்படி இவ்வருட ஆரம்பத்தில் அவர் மேயர் பதவியை ராஜினமாச்செய்திருக்க வேண்டுமென்றும் ஆனல் அந்த உடன்பாட்டுக்குக் காரணமாக இருந்தவர்கள் சிலர் அவரை ராஜினமாச் செய்ய அவசரப்படவேண்டியதில்லையென்றுகூறிவந்ததாகவும் கூறப்பட்டது. திரு நாகராஜா மேயர் பதவியை ராஜினமாச் செய்யத் தவறிவிட்டார் என்பதால் முன்னைய உடன்பாட்டுக்கு ஒப்புக்கொண்டு அதற்குஒத்துழைப்பும் அளித்த சிலரும் மற்றும்சிலருமாகச் சேர்ந்து திரு நாகராஜாமீது நம்பிக்கையில்லாத்தீர்மானமொன்றைக் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர். இப்பிரேரணையை விவாதிப்பதற்கு மாநகர சபை ஆணையாளர் திரு. ஏ. ரி. சுந்தரம் சபையின் விசேஷ கூட்டத்தை இம் மாதம் 9-ந் திகதி கூட்டியிருந்தார்.

திரு. நாகராஜா மேயர் பதவியைராஜினமா செய்துவிட்டதால் அடுத்த மேயர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளதுடன் மாநகரசபை அங்கத்தவர்களுக்குள் ஆதரவுதேடும் முயற்சிகளும்தீவிரமடைந்துள்ளன.

## வித்தியோதய பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, வியாழன்

இன்று வித்தியோதய பல்கலைக்கழகத்தில் சுமார் 2000 மாணவர்கள் (புத்த பிக்குகள் உட்பட) துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பல்கலைக்கழக வளவினுள்கிடந்த ரயர்களிலும், வேறு சில பொருட்களிலும் தீவைத்தமாணவர்கள் தாம் தீக்குளிக்கப்போவதாகப் பயமுறுத்தினர். பொலிஸார் ஸ்தலத்தில் அமைதியை நிலைநாட்டினர். மறுஅறிவித்தல்வரை பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

## ஜோதிபாசு – இந்திராசந்திப்பு

கல்கத்தா. பெப், 5

மேற்கு வங்காள உதவி முதன்மந்திரி திரு ஜோதிபாசுவும் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் இன்று சந்தித்துப் பேசினர். இப்பேச்சு 20 நிமிஷங்கள் நீடித்தது.

## சாவகச்சேரியில் மிகப்பெரிய உப்பளம்

கோட்டை, வியாழன்

இலங்கையில் மிகப்பெரிய உப்பளம் ஒன்று சாவகச்சேரியில் அமைக்கப்படவிருக்கிறது ஆனையிறவு உப்பளத்திலும்பார்க்க நாலுமடங்கு பெரியதாக இவ்வுப்பளம் அமையும். சுமார் 3 கோடி ரூபா செலவில இந்த உப்பளம் அமைககப்படவுள்ளது.

## தந்தையின் பெயரால் தொழிற்பயிற்சி நிலையங்கள்

சென்ற் அந்தோனிஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட்டின் உரிமையாளரும் மற்றும் சில கம்பனிகளின் அதிபருமாகிய திரு. ஏ. வை. எஸ். ஞானம் தனதுதந்தையின் பெயரால் நாட்டில் தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் நிறுவுவதற்குத்தீர்மானித்துள்ளார்.

இலங்கையின் கைத்தொழில் துறையில்பிரசித்தி பெற்றவர்களில் ஒருவரான திரு. ஞானம் தனது இத்தீர்மானத்தை சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமாகக் கருத்துத்தெரிவிக்கையில், எந்தவொரு நாட்டிற்கும் தன்னைபொருளாதாரத் துறையில் முன்னேற்றுவதற்கு தொழில்நுட்பபயிற்சி பெற்ற மனிதசக்திதேவை. இலங்கையில் இத்தகைய பயிற்சி பெற்றவர்களின் தொகை மிகக்குறைவு. இக்குறையை ஓரளவு நீக்குவதற்கு நாட்டில் இரண்டுஅல்லது 3தொழில்நுட்பபயிற்சி நிலையங்களையும் நிறுவி எனது பங்கையும் செலுத்தவுள்ளேன் எனத்தெரிவித்தார்.

தனது தந்தை சாமுவல் ஞானத்தின்பெயரில்நிறுவப்படவிருக்கும் மேற்படி பயிற்சி நிலையங்களை எங்கு நிறுவுவது என அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை ஆனல் யாழ்ப்பாணமும் கொழும்பும் பொருத்தமான இடங்களாக அமையலாம் எனக்குறிப்பிட்டுள்ளார். (சி. பி. ஏ.)

# "இனத்தோடு இனத்தை மோதவிடக் கூடாது"

## நல்லாட்சிக்கு அமைச்சர் கூறும் யோசனை

(உடுப்பிட்டி - புலோலி நிருபர்)

"ஒரு இனத்தை இன்னெரு இனத்தோடு மோதவிடக்கூடாது. மக்களிடையே தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்தாது ஆட்சிசெய்வதன்மூலம்தான் நாட்டில் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தமுடியும்."

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு, ஆர். பிரேமதாசா பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின்போது கூறினர். அமைச்சர் திரு. பிரேமதாசா தொடர்ந்து கூறியதாவது:

அரசாங்கம் பொதுமக்களின் நன்மையைக் கவனிக்காவிட்டால் தீமையே விளையும். இதற்குரிய தண்டனையைப் பொதுமக்கள் தேர்தல் மூலம் அளிப்பார்கள். வகுப்புவாதம், இன, மத துவேஷங்கள்மூலம் அரசாங்கம் அமைக்கமுடியும் என எண்ணுவது தவறுனது. பொதுமக்கள் இதற்கு ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டார்கள்."

"நாம் இதுவரையிலும் அழிவுப் பாதையை நோக்கிச்சென்றுவிட்டோம் இவ்வளவும் போதும். இனிமேல் நாம் வாழவேண்டும் என்ற

(16-ம் பக்கம் பார்கக)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெளளி

நேற்று மாலை இழுககப் பட்ட தேசிய சுவீப் முடிவுகள வருமாறு:

முதல் பரிசு

17 H 0915 ரூ. 76,820

இரண்டாவது பரிசு

21 B 0982 ரூ. 30,728

மூன்ருவது பரிசு

09 U 0910 ரூ. 7,682

தலா ரூ 384—10 பரிசு பெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 14 J 0710 | 29 V 0818 |
| 01 O 0877 | 25 I 0605 |
| 23 F 0417 | 06 T 0913 |
| 26 X 0996 | 16 S 0862 |
| 31 N 0998 | 06 S 0329 |
| 07 P 0935 | 21 G 0114 |

(16-ம் பக்கம் பார்க்க)

# விமான சுரங்க விபத்தில் 26 பேர் பலி!

ரோம், பெப். 5

பிரான்ஸில் நேற்றுநடந்த நிலச்சுரங்க விபத்தொன்றிலும், கோரவிமான விபத்தொன்றிலும் 26பேர் மாண்டனர்.

பிரான்ஸின் வடபகுதியிலுள்ள நிலச்சுரங்கமொன்றில் 30சுரங்கத் தொழிலாளர்கள் வேலைசெய்துகொண்டிருந்தனர். அப்போது ஏற்பட்ட திடீர்விபத்தில் 14 பேர் மாண்டனர். 16பேர் படுகாயமடைந்து சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர். இவர்கள் உயிருடன் போராடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸின் மற்றெரு இடத்தில் நடந்த விமான விபத்தொன்றில் விமானத்திலிருந்த 12 பேரும்கொல்லப்பட்டனர். விமானம் மலையொன்றின்மீதுவிழுந்து நொருங்கியபோதே இவர்கள் கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# யாழ். நகர மேயர் பதவியும் நள்ளிரவு 'நாடகங்களும்'

சென்றவாரத்தில் நமது நாட்டிலும் உலகிலும் பல முக்கிய நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் நடைபெற்றிருந்தாலும் இலங்கையின்இரண்டாவது பெரிய நகரமாகவும் இலங்கைவாழ் தமிழ் மக்களின் தலைநகராகவும் பெருமையுடன் கூறிக்கொள்ளப்படும் யாழ்ப்பாண நகரின் தலைமகன் என்று கருதப்படும்நகரமேயரின் பதவி இறக்கம்பற்றிய செய்தியும் அதுபற்றிய நிகழ்ச்சிகளும் சுவையானவை.

யாழ்ப்பாண மாநகரசபையின் சமீபகால சரித்திரத்தில் மேயராக ஒருவரை ஏற்றிவைப்பதும் அந்தப் பதவியிலிருந்து ஒருவரை இறக்கிவைப்பதும் சாதாரண நிகழ்ச்சிதான். எவர் எவரெல்லாம் சேர்ந்து ஒருவரை மேயராக ஏற்றிவைக்கிறார்களோ அவர்களே அவரைக் காலில் பிடித்து இழுத்துவிடுவார்கள், ஏற்றிவைப்பவர்களே இறக்கிவைக்க முன்வராவிட்டால் தான் ஆச்சரியம்.

சுற்றிவளைப்பானேன். இப்போதையமேயர் நாகராஜாவை மேயராக்கியவர்களில் சிலர்தான் அவரை அப்பதவியிலிருந்து இறக்கவும் முன்னிற்கின்றனர். கனவான்கள் உடன்படிக்கையின்படி திரு. சி. நாகராஜா தமது மேயர்பதவியை ராஜினுமாச் செய்யாததால்அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர நேர்ந்ததாக அவர்கள் கூறுகின்றனர். ராஜினுமாக்கடிதத்தை உரிய சமயத்தில் உடன்பாட்டுக்குக் காரணமாகஇருந்தவரிடம் கொடுத்துவிட்டதாக திரு.நாகராஜா கூறுகிறார்.

மேயர்களை ஏற்றிஇறக்குவதையே முக்கிய கடமையாகக்கொண்டு யாழ்ப்பாண மாநகரசபை சிலகாலம் இயங்கிவந்தபோது சில தினங்களுக்குமட்டுமே ஒருவர் மேயராகப் பதவிவகித்த சம்பவமும் இடம்பெற்றது. இந்த ஏற்றம் இறக்க நாடகங்களினுல் நகரமக்களுக்குஅலுப்பும் சலிப்பும் ஏற்பட்டது. யாழ்ப்பாண நகருக்கும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் அவமானத்தை இந்த மாநகரசபை தேடித் தருகிறதே என்று ஆத்திரமுமடைந்தனர். இதன் விளைவாகஇரவோடிரவாக யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டது. விசேஷ ஆணையாளர்கள் நிர்வாகம் ஏற்பட்டது. மக்களும் அமைதி அடைந்தார்கள். விசேஷ ஆணையாளர் நிர்வாகம் நகருக்குச் சில நல்லசேவைகளையும் செய்தது. ஆனுலும் ஜனநாயக உரிமையை யாழ் நகரமக்களுக்குத் தொடர்ந்துமறுப்பது சரியல்லஎன்று பலரும் எடுத்துக்காட்டினர். பழைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறமாட்டாதெனவும் எதிர்பார்க்கப்பட்டது. யாழ்ப்பாண மாநகரசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காகத் தேர்தல் நடைபெற்றது 17 அங்கத்தவர்களைக் கொண்டிருந்ததால் (கூட்டுத்தொகை எட்டு. எண்கணித சோதிடர்கள் 8 அவ்வளவு நல்லதல்ல என்று சொல்லுவார்கள்)தான் இந்த ஏற்றிஇறக்கும் நாடகங்கள் நடந்தனவென்றுகருதியோ என்னவோ 17 வட்டாரங்கள் 23 வட்டாரங்களாக விஸ்தரிக்கப்பட்டுதேர்தல் நடந்தது. வட்டார விஸ்தரிப்புக்கு மார்ட்டின் கமிஷன்செய்த சிபாரிசை ஏற்கவேண்டுமென்றும் ஏற்கக்கூடாதென்றும் சர்ச்சை நடந்தது வேறுவிஷயம்.

தேர்தல் முடிந்ததும் வழமைபோல் மேயர் பதவிக்கு ஓடினுர்கள்! தமிழ்க் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும் சேர்ந்தாலும் மற்ருெருஅங்கத்தவரின் ஆதரவு கிடைத்தால்தான் இந்த இரு கட்சிகளையும்சேர்ந்த ஒருவர் மேயராக வரமுடியுமென்ற நிலை ஏற்பட்டது. இதேசமயம் அந்த ஒருவரின் ஆதரவைப்பெற்ருல்தான் சுயேச்சையாளர்களான துரையப்பா முதலியோரில் ஒருவர் மேயராக வரமுடியுமென்ற நிலையுமிருந்தது. இருதரப்பினரும் அந்த ஒருவரின் ஆதரவை நாடினர். அந்த ஒருவரின் ஆதரவு தமிழரசு — தமிழ்க்காங்கிரஸ் கூட்டணியிலுள்ள ஒருவருக்குக் கிடைத்தது. தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுத் தலைவர்கள், பிரமுகர்கள் இரவும் பகலுமாகக் கூடிப் பேசினுர்கள். போகாத இடங்களுக்குப் போனுர்கள். மேயர் தெரிவு நடைபெறுவதற்கு முதல்நாள் நள்ளிரவுக்குப் பின்னரும்இந்தப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

## கையெழுத்திட்ட பின் கண்ணீர் விட்டார் ஒருவர்!

யார் மேயராவார் என்பது இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. அடுத்தநாள் அந்த ஒருவரின் ஆதரவைப் பெற்றிருந்த திரு. சி. நாகராஜா மேயராகத் தெரிவு செய்யப் பெற்ருர். கனவான்கள் ஒப்பந்தம் என ஒன்றும் இல்லை என்ருர்கள். உடன்படிக்கையென்ருர்கள்உடன்படிக்கையென்றும் கூட இல்லை. ஓர் உடன்பாடு அவ்வளவுதான் என்றும் சொன்னுர்கள். திரு: நாகராஜா மேயராகத் தெரிவு செய்யப்பட்டதும் சம்பிரதாயப்படி அங்கத்தவர்கள் பலரும் புதிய மேயரைப் பாராட்டிப் பேசினுர்கள், அப்போது ஓர் அங்கத்தவர் பேசுகையில், ''உங்களை இன்று மேயராக்கியவர்களே உங்களை அதிலிருந்து இறக்கவும் முன்வருவார்கள். நாங்கள் உங்களை இறக்கமாட்டோம்'' என்று சொன்னுர். பின்னர் சில தடவைகளிலும்கூட அவர் சொன்னுர். ''தேர்தல் சமயம் வந்ததும் உங்களை இறக்குவதற்கு உங்கள் ஆட்களே முன்வருவார்கள். நாங்கள்அதற்குஒத்துழைக்கமாட்டோம். அவர்களோடு சேர்ந்து உங்களை இறக்க கையெழுத்து வைக்கமாட்டோம்'' என்ருர்.

ஆனுல் திரு. நாகராஜாவை மேயர் பதவியிலிருந்து இறக்குவதற்காக (ஒப்பந்தப்படியோ உடன்பாட்டின்படியோ அவர் தாமாகவே பதவியிலிருந்து இறங்கவில்லையென்பதால்) அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தப் பிரேரணையில் அவர் உட்பட பதினுன்குபேர் கையொப்பமிட்டுள்ளனர். இதுதான் அரசியல்!

திரு. நாகராஜவை மேயராக்குவதற்கு நள்ளிரவுகளுக்குப்பின்னரும் எப்படியெல்லாம் முயற்சிகள் நடைபெற்றனவோ அவரைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வருவதற்கும் நள்ளிரவு நாடகம் நடைபெற்றது.

யூ.டி.சி. என்றழைக்கப்பட்ட காலத்திலிருந்து யாழ்ப்பாணம் மாநகரசபை என்று இப்போதுஅழைக்கப்படும் காலம்வரை அந்தச் சபையின் தலைவராகவும் மேயராகவும் அங்கத்தவராகவும் பதவிவகித்து,சமீப வருடங்களாகத் தேர்தலில் போட்டியிடாமலிருந்தாலும் மாநகரசபையுடன் எப்படியோ ஏதாவது தொடர்பு வைத்துள்ள பெரியவர் ஒருவர் மேயர் தெரிவில் ஆலோசனை கூறி வழிவகுத்துக்கொடுப்பதுண்டு. அந்தப்பெரியவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாநகரசபையின் சில அங்கத்தவர்களைத் தன்னிடம் வருமாறு அழைப்பு விடுத்தார். சிலர் சென்றனர். மேயர்பதவி சம்பந்தமாக அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வருவதைத்தவிர வேறுவழியில்லையென்று முடிவுசெய்யப்பட்டது. திரு. நாகராஜாவைமேயர் பதவியிலிருந்து இறக்குவதென்றும் இதற்காக அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.பிரேரணையும் தயாராகிவிட்டது. இரவுபத்துமணிக்கு மேலாகிவிட்டது. வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாகராஜாவைப் பதவியிலிருந்து இறக்கினுல் பின்னர் யாரை மேயராக்குவது? ''அது பிறகு பார்த்துக்கொள்ளலாம்.'' சரி பிரேரணையில் கையெழுத்துப்போடுவது யார் யார்? ''ஏன் இங்கு உள்ளவர்கள் எல்லோரும் போடுவார்கள்.''

''எல்லோடும் போட்டாலும் போதாது''.

''வெளியே காரில் ஒருவர் இருக்கிருர். அவரும் போடுவார். இன்ெனுருவர்வருவார் அவரும் போடுவார்.''

''இதோ இவர் வந்திருக்கிருர்.''

''என்ன, என்ன''

''ஒன்றுமில்லை. இதில் கையெழுத்துப்போடும்.''

அங்கு நின்ற மாநகரசபை அங்கத்தவரல்லாத ஒருவர் வந்தவரைத் தனியாக அழைத்து ''நீ எங்கேயடாப்பா இங்கே வந்தாய். நாகராஜாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வாருங்கள். நீயும் கையெழுத்துவைக்கப் போறியோ''.

''ஐயோ நான் மாட்டேன்.''

''அப்ப ஏன் வந்த நீ''.

''எனக்குத் தெரியாது. அவன் ஏதோ குழுக்கூட்டம் நடக்குது, வா என்ருன் வந்தனுன். அப்ப என்னை ஒருக்கா காரில் கொண்டு போய்விடுகிறியே''.

''ஐயோ நான் மாட்டன். வந்த உன்னை நான் கூட்டிக் கொண்டுபோனுல் என்னைத் தொலைச்சுப் போடுவாங்கள்.''

''அப்ப என்ன செய்ய?''

''ஏதோ செய்; யோசித்து நடந்துகொள்''.

அவர் யோசிப்பதற்குஇடமிருக்கவில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அவர் கையெழுத்து வைத்துவிட்டார்.

அதன் பிறகுதான் அவர் யோசித்தார். அவருக்கு அழுகைவந்துவிட்டது. குழந்தைப் பிள்ளைபோல்தேம்பித் தேம்பி அழுதார்.

திடீரென்று அவர் சொன்னுர், ''இதைக்கிழித்தெறிய வேண்டும். கிழித்து அதில் ஒரு துண்டை எனக்கும்தர வேணும்''.

இதற்கு யாரும் சட்டை செய்யவில்லை. ஆனுலும் கிழித்துவிட்டாலும் என்று ஒருவர் அஞ்சினுர். அவர் கடைக்குச் சாப்பாட்டுப் பார்சல் எடுத்துவரச் செல்லும்போது கையெழுத்துப் போடப்பட்ட பிரேரணைக் கடதாசியை ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டுச் சென்ருர்.

''மற்றஇரண்டுபேரையும் இன்னும் காணவில்லை.

''அவைவருவினம்; அதிலை பயமில்லை.''

''இந்தா இவர் வந்துவிட்டார்''.

''என்ன! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இந்தாளல்லோ என்னைக்கூட்டிவந்தது.''

''சரி, சரி கையெழுத்தைப்போடும்''.

''நம்பிக்கையில்லாப் பிரேரணையோ நான்மாட்டன்.''

வேறு சிலர் கூடி ஆலோசனை செய்கின்றனர், அந்த ஆளைக் கொண்டு வந்தால், அவர் சொன்னதும் இவர் கையெழுத்துப் போடுவார். அவரை எப்படிக்கொண்டு வாறது.

''நீபோய் அந்த ஆளைக் கொண்டுவாறியோ?''

''இந்த நேரத்தில குடும்பகாறனைப்போய்நான்எழுப்ப மாட்டன்.''

ஒரு கார் பறக்கிறது. சிறிதுநேரத்தில் அந்த ஆள் வந்திறங்குகிருர். அவர் வந்து கையெழுத்துப் போடச் சொன்னதும் முதலில் 'மாட்டேன்' என்று சொன்னவர் சம்மதிக்கிருர்.

பிரேரணை எழுதப்பட்டுக் கையெழுத்திடப்பட்டிருந்த கடதாசியைக் காணேம்.

சலசலப்பு ஏற்படுகிறது.

'நீதான் எடுத்துக் கிழித்துப் போட்டாய்,'

'இதென்ன அநியாயம். சத்தியமாய் நான் எடுக்கவில்லை.'

தேடுதல் நடக்கிறது. அதைக் காணவில்லை.

சரி புதிதாக ஒன்று தயாரிப்போம்.

புதிதாக ஒன்று தயாராகிவிட்டது. கையெழுத்திடுகிருர்கள். பதினெருபேர் கையெழுத்து வைத்துவிட்டார்கள்.

கடைக்குச் சாப்பாடு எடுக்கச் சென்றவர் வந்து சேர்கிருர்.

'என்ன பிறகும் கையெழுத்துப் போடுகிறீர்கள்?'

'முதலில் கையெழுத்துப் போட்டதைக் காணவில்லை.' 'நான் எடுத்து இதுக்குள்ளை வைத்துவிட்டுப் போனனுன்' என்று கூறியபடி அவர் அதை எடுத்துக் கொடுக்கிருர்.

எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி.

கையெழுத்துப் போடாத ஒருவரும் கையெழுத்துப் போட்டார்.

பிரேரணை மாநகரசபை ஆணையாளர் வீட்டை நோக்கிப் போனது, மணி இரவு11-30.

இந்தப் பாடுபட்டுத் தயாரிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது விவாதம் நடைபெறுமா? இப்போதுள்ள நிலையில் அதற்கு அவசியம் ஏற்படாதென்றே தோன்றுகிறது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவரிடம் தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர்கள் சிலர் கேட்டுக்கொண்டபடி திரு. நாகராஜா கொடுத்த ராஜினுமாக் கடிதம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்த பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்துவிட்டதாம். அது ஆணையாளரிடம் போனுலும் போகாவிட்டாலும் புதியதொரு ராஜினுமாக் கடிதமாவது போய்ச்சேருமென எதிர்பார்க்கலாம்.

மேயர் இறங்கிவிட்டால் அல்லது இறக்கப்பட்டுவிட்டால் புதிய மேயர் யார்?

அது வேருெரு நாடகம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டாக்ஸி! டாக்ஸி!! டாக்ஸி!!!


# ‘எங்களுக்கும் மனச்சாட்சி இருக்கிறது!’

“டாக்ஸிக்காரர்களைப் பொதுமக்கள் இன்னமும் நன்றாகப் புரிந்துகொள்ளவில்லை. எங்களையெல்லாம் ஏதோ ஒரு கண்கொண்டு நோக்குகிறார்கள். நாங்களும் பிழைப்பதற்காக இந்தத் தொழிலைச் செய்கிறோம்: நேர்மையாக, நீதியாக, மனச்சாட்சியுடன்தான் கடமை செய்கிறோம். ஆனால்... சந்தர்ப்பசூழ்நிலை எம்மைத் தப்பாக உலகுக்கு எடுத்துக் காட்டிவிடுகிறது. அதற்கு டாக்ஸிக்காரர் என்ன செய்யலாம்?...''



டாக்ஸி தொழிலாளர் சங்கத் தலைவர் ஆர். சுந்தரலிங்கம்.

இப்படிக் கவலையுடன் என்னிடம்கூறினார் யாழ்ப்பாணம் டாக்ஸிக்காரர்



சங்கத் தலைவர் ஆர். சுந்தரலிங்கம்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில்உள்ள டாக்ஸி சாரதிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமக்கென ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டனர். அதன் தலைவரான சுந்தரலிங்கம் சுறுசுறுப்பும், நேர்மையுமுள்ள இளைஞர்; பழகுவதற்கு இனியவரான இவரைச் சந்தித்து, அவர்கள் பிரச்னை குறித்துபேசிக் கொண்டிருந்தேன்.

“டாக்ஸிக்காரர்கள்என்றால் அவர்கள் வேறு யாருமல்ல; அவர்களும்மனிதர்கள்தான். அவர்களும் மனச்சாட்சிக்குக்கட்டுப்பட்டவர்கள்தான். வதந்திகளை வைத்துக் கொண்டு எதையும்நம்பிவிடக்கூடாது.”

## சந்தர்ப்ப சூழ்நிலை சதிசெய்கிறது

“எங்கேயோ போகவேண்டும் என்றுசொல்லி டாக்ஸியில் ஏறிக்கொள்கிறார்கள். அவர்களை எமக்கு முன்பின் தெரியாது. அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதும் தெரியாது. ஆனால் அவர்களை ஏற்றிக்கொண்டுபோய் விடவேண்டியது எமது கடமை. தொழிலே அதுதானே! அப்படி ஏற்றிக்கொண்டுபோன அவர்கள் எமக்குத் தெரியாமலே தப்பான காரியத்தில் ஈடுபட்டு விட்டார்களென்றால் ... ... கடைசியில் ‘அப்பாவி’களான டாக்ஸிக்காரர்களும் மாட்டிக்கொண்டு விடுகிறார்கள். பத்திரிகைகளிலும் ‘இன்ன நம்பர் டாக்ஸிக்கும் ஒரு சம்பவத்துக்கும் சம்பந்தமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்’ என்று கொட்டையெழுத்தில் போடப்பட்டுவிடுகிறது. இப்படித்தான் டாக்ஸிக்காரர்களுக்கு கெட்டபெயர்வந்து சேருகிறது...'' என்று நீண்டதொரு விளக்கத்தைத் தந்தார் டாக்ஸிக்காரர் சங்கத் தலைவர்.

அவர் சொல்வதிலும் உண்மையில்லாமலில்லை.

யாழ்ப்பாணத்தில் சுமார் 100 டாக்ஸிகள் நிற்கின்றன, ஆனாலும் கொழும்பு போன்று இங்கு நல்ல உழைப்பு கிடைப்பதில்லை என்று சுந்தரலிங்கம் சொல்லிவிட்டு அதற்கான காரணத்தையும் கூறினார்.

## கொழும்பு வேறு, யாழ். நகர் வேறு

‘கொழும்பு நகரம் ஒரு ‘பிஸி பிளேஸ்’. பல இடங்களைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டுக்காரர்கள் என்று பலபேர் வழிகள் வந்து போகிறார்கள். அவர்கள் ஒருநிமிடத்தைக்கூடப் பொன்னாகக் கருதுகிறார்கள், ஆகையால் காசைப்பாராமல் நேரத்தைமிச்சப்படுத்திக்கொள்ள டாக்ஸியைப் பிடித்துக் கொள்கிறார்கள், கொழும்பில் 5 மைல் தூரத்துக்கு ஒருவர் டாக்ஸியைப் பிடித்துக்கொண்டு போகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவரை அவ்விடத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டு திரும்பி வரும்போது, வேறு யாராவது ஏறத்தான் செய்வார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் ‘றிட்டேன்’ கயர் கிடைப்பதில்லை. ஒருஇடத்துக்குப் போனால் போனதுதான். வரும்போது யாரும் ஏறுவார்கள் என்று நம்பியிருக்க முடியாது. அப்படியென்றால், பஸ்காசு தருவதாகக்கூறி ஏறுவார்கள்: இப்படியிருக்கிறது யாழ்ப்பாணத்தில் தொழில் நிலைமை...’

கடந்த பதின்மூன்றுவருடகாலமாக டாக்ஸி ஓட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ள கோப்பாயைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சக டாக்ஸிக் காரர்கள்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகள், புகார்கள் எல்லாம் அபாண்டம் என்று கூறினார்.

## நாங்களும் மனிதர்கள்தான்


‘டாக்ஸிக்காரர்கள் என்றால் அவர்கள் வேறுயாருமல்ல; அவர்களும் மனிதர்கள்தான். அவர்களும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டவர்கள். வதந்திகளை வைத்துக் கொண்டு எதையும் நம்பிவிடக் கூடாது'' என்றார்.

சிறிய தூரங்களுக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணத்து டாக்ஸிகாரர்கள் மறுப்பது குறித்து அவரிடம் வினவினேன்.

‘‘டாக்ஸித்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு சின்னத்தூரம், பெரியதூரம் என்று ஒன்று கிடையாது. எவ்வளவு தூரமென்றாலும் போகத்தான் வேண்டும். ஆனால் 50 சதம் தூரத்துக்குப் போவதற்கு ஒருவர் ஏறிக்கொள்கிறார் என்றால், அவர் பெரியபெரியசாமான்களையும் ஏற்றிக்கொண்டால், டாக்ஸிக்கு அது பெரிய தொல்லைதானே! 50 சதத்துக்கு எவ்வளவு நேரம் டிலே’. ஆகையால் ‘டிலே’ சார்ஜும் கொடுக்க வேண்டும். டாக்ஸிக்காரர்களுடைய கஷ்டங்களைப் பொதுமக்கள் உணரவேண்டும்'' என்றார்.

## பஸ்நிலையத்துக்குள் அனுமதிக்க வேண்டும்

‘‘ஒரு நோயாளியோ, வயது சென்றவரோ பஸ் ஒன்றில் போவதற்காக டாக்ஸியில் ஏறிக்கொள்கிறார். அவரை பஸ் நிலையத்துக்குள் கொண்டுசென்று பஸ் நிற்கும் இடத்துக்குப் பக்கத்தில் நிறுத்தி, அவரை பஸ்ஸில் ஏற்றிவிடுவதற்கு பொலிஸார் அனுமதிக்க வேண்டும். ஆனால்இப்போது பஸ் நிலையத்துக்குள் ஒரு டாக்ஸி நின்றால் போதும்... வழக்கு எழுதிவிடுவார்கள்'' என்ற டாக்ஸிதொழிலாளர் சங்கத்தலைவர் தான் சென்னைக்குச் சென்றபோது ஏற்



பட்ட அனுபவத்தைச் சொன்னார்:

‘‘சென்னையிலிருந்து எம். ஜி. ஆரைச் சந்திப்பதற்காக ராமாவரத்துக்கு டாக்ஸியில் போனேன் 8 ரூபாய்தான் சார்ஜ். ஆனால் என்னிடம் [illegible] ‘றிட்டேன்’ ‘கயர்’ இருக்காதாம். ஆகையால்அப்படி எடுத்தார்கள்'' என்றார்.

## யாழ். எம் ஜி ஆர்

புரட்சிநடிகர்எம். ஜி. ஆர். மீது மிகவும் பற்று வைத்திருக்கிறார். அவருடைய நேர்மை, தயாளகுணம், தன்னை அவருடைய தாசனாக்கிவிட்டதாகக் கூறினார். அதனால்தான் என்னவோ இவரது நண்பர்கள் இவரை யாழ். எம். ஜி. ஆர். என்று செல்லமாக அழைக்கிறார்கள்.

பாமா ராஜகோபால்

டாக்ஸிக்கு டாக்ஸி ‘ரேட்’ வித்தியாசம் என்ற சந்தேகம் பொதுமக்களிடம்இருக்கிறது இதனால் டாக்ஸிக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள் என்ற கூடாத எண்ணம் எழுகிறது என்று ‘சாடை’யாக அவரிடம் சொன்னேன்.


## மீட்டர் சார்ஜில் வித்தியாசம் இல்லை

அவர் சிரித்துவிட்டுச் சொன்னார்: ‘உண்மைதான். ஆஸ்பத்திரி வீதியை எடுத்துக்கொள்வோம். ஆஸ்பத்திரிக்கு முன்னால் ஒரு டாக்ஸியை மறித்து ஒருவர் முதல்நாள் ஏறிக்கொண்டு ஓரிடத்துக்குச் செல்கிறார். அடுத்தநாள் பஸ்நிலையத்துக்கு முன்னால் ஒரு டாக்ஸியை மறித்து ஏறிக்கொண்டு முதல்நாள்சென்ற இடத்துக்கே செல்கிறார். முதல்நாள் 80 சதம் சார்ஜ். இரண்டாம்நாள் 90 சதம் சார்ஜ். இரண்டு நாளும் டாக்ஸியில் ஏறியவர் ஆஸ்பத்திரி வீதியில் இருந்தே ஏறியதாக எண்ணுகிறார். ஆனால் இரண்டுநாளும் வெவ்வேறு இடத்தில்நின்று ஏறியதே உண்மை. இது போன்ற விஷயங்களே ‘சார்ஜ்’விஷயத்தில்தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கெல்லாம் நாம் என்ன செய்யலாம்?'' என்று கேட்டார்.

‘‘காலையில் டாக்ஸியை எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டால் இரவு பத்து மணிக்கு மேலாகிறது வீடு போய்ச்சேருவதற்கு! டாக்ஸியில் ஒருவர் பின்ஸீட்டில் ஏறி இறங்கும் போது ஒரு சாமானை விட்டுவிட்டு இறங்கிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் இறங்கிய சில நிமிட நேரத்தில் வேறொரு குடும்பம் பின் ஸீட்டில் சாமான்களுடன் ஏறிக்கொள்கிறது. இறங்கும் போது முதல் ஏறியவர்விட்டுச்சென்ற சாமானையும் கொண்டு சென்றுவிடுகிறார்கள். இதன்பின்னர் சாமானை விட்டுச்சென்றவர் டாக்ஸியில் விட்டுச்சென்றசாமானை எம்மிடம் வந்துகேட்கிறார், இல்லையென்றதும், நாமே எடுத்துவிட்டதாக பழிசுமத்துகிறார்கள். இப்படித்தான் எம்மில் கெட்டபெயர்வந்து சேருகிறது...'' என்றுசொல்லிவிட்டு தனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைச் சொன்னார்:-

## சுவையான அனுபவம்

‘‘எனது டாக்ஸியில் ஒருவர் ஏறி ஆனைக்கோட்டையில் இறங்கினார். பின்னர் இன்னொருவர் சமான்களுடன் ஏறி இன்னோர் இடத்தில் இறங்கினார். சில மணி நேரத்துக்குப் பிறகு ஆனைக்கோட்டையில் எனது டாக்ஸியில் வந்து இறங்கியவர் ஒருவிலையுயர்ந்தசாமான்கள் வைத்த கைப்பையை பின் ஸீட்டில் விட்டுவிட்டதாகக் கூறினார். ஆனால் எனக்கு அந்தச்சாமான்பற்றிஎதுவும் தெரியாது. சாமானைத்தவறவிட்ட அந்த நபரோ பதறுகிறார். விலை உயர்ந்த சாமான்! அவருக்குப்பிறகு டாக்ஸியில் ஏறியவரை நினைவில் கொண்டுவந்தேன். எங்கேஇறங்கினார் என்பதும் நினைவுக்கு வந்தது. அவரை ஏற்றிக்கொண்டு அந்த நபரின் இடத்தில்போய் பின்



ஸீட்டில் இருந்த சாமானும் உங்கள் சாமான்களுடன் வந்துவிட்டதாகக்கூறி தரும்படிகேட்டேன். கைப்பை வந்தது'' என்று சுந்தரலிங்கம் கூறினார்.

‘‘வீதிகளில் பொதுமக்கள் மறிக்கும் இடங்களில் டாக்ஸிகளை நிறுத்துவதில்லை என ஒரு புகார். ஆனால் கண்டபடி டாக்ஸிகளைநிறுத்தினால் வழக்கு. ஒரு டாக்ஸிச் சாரதிகள் ஒரு நாள் சம்பளம் 5 ரூபாய். கண்ட கண்ட இடங்களில் மறிக்கக் கூடாது என்பது முதலாளியின் உத்தரவு. அப்படி மறித்து வழக்கு வந்து தண்டனை 15 ரூபாய் கட்ட வேண்டுமானால் அதுடாக்ஸி சாரதியின் பொக்கட்டிலேயிருந்தே போகிறது. ஒரு நாள் சப்பளம் ரூ 5. ஆனால் அபராதம் ரூ. 15. இப்படி எவ்வளவோ சங்கடநிலை...'' என்று சொன்ன டாக்ஸித் தலைவர் சுந்தரலிங்கம் கடைசியாகக் கூறியவார்த்தைகள்:-

‘பொதுமக்கள் எம்மை உணரவேண்டும்; எமது கஷ்டங்களை உணரவேண்டும் நாங்களும் மனச்சாட்சியுள்ள மனிதர்கள்தான் என்பதைஉணர்ந்தால் அதுவே போதும்.''

## அதிசயவிளக்கு

புத்தகப்பிரியரான நீங்கள் இரவில் வெகுநேரம் வரை விளக்கைப் போட்டுக்கொண்டு படித்து வீட்டிலுள்ள மற்றவர்களைத் தூங்கவிடாமல் செய்கிறீர்களா? கவலைப்பட வேண்டாம். ஜெர்மனியில் கண்களைவிட வேகமாகச் சுழலும் அறுபது ‘வாட’ சக்தியுள்ள புதுமாதிரி விளக்கு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரக்கன்துறை மீன்பிடித்துறை அல்ல

## வீரசைவம் அநாதியானது

'குரக்கன்துறை என்பது மீன்பிடித்துறையே' என்னும் தலைப்பில் திரு. க. ஏரம்பமூர்த்தி அவர்கள் 'ஈழநாடு' வாரமலரில் எழுதிய கட்டுரையில் பல பொருந்தாக் கூற்றுகளுள. 'குருகுலத்தவர்களால் பூசை செய்யப்பட்டுவந்த இக்கோயிலின் பூசையையும் திரு. சின்னத்தம்பி அவர்கள் சங்கமரிடம் (பண்டாரங்கள்) ஒப்புவித்தார்' என அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வசனத்தில் 'பூசையையும்' என வருதலால் அதனுடன் வேறெதையும் ஒப்புவித்திருக்க வேண்டுமென்றே பொருள்படும். ஆனால் அப்படி எதையும் ஒப்புவித்ததாக அக்கட்டுரையிற் கண்டிலம். 'திரு. சின்னத்தம்பி அவர்கள் சங்கமரிடம் ஒப்புவித்தார்' எனில் திரு. சின்னத்தம்பி அவர்கள் சங்கமரா? அல்லது 'சங்கமர்' (பண்டாரங்களிடம்) என வருதலின் சங்கமர்தான் பண்டாரங்கள் என இவர் கொள்கிறார் ஆயின் சங்கமர் பண்டாரங்களல்லரே. சங்கமர் வீரசைவரே: வீரசைவநிலைக்கு எவ்வருணத்தவரும் வரலாம். அந்நிலை ஒரே சமூகத்துக்கே உரியதன்று. பண்டாரம் எனில் சிவாகமக்குரு, பொக்கிஷம், மடாதிபதி என அகராதிகளில் உண்டேயன்றி 'சங்கமர்-பண்டாரம்' என இல்லை, வருணாசிரம நெறி கடந்து ஆலயப்பிரவேசத்துக்கு வழிகாட்டிய இவரது போக்கு பண்டாரங்களென ஒரு சமூகத்தவரைப் பிரித்துக்காட்டிக் குறிப்பதனாற் போலியாமாறு வெள்ளிடைமலை.

''1968-ம் ஆண்டு தை மாதம்- கீரிமலை சிவத்திரு ஐயம்பிள்ளைக்குருக்களும் உரும்பராய் சிவத்திரு நவரத்தினக்குருக்களும் கும்பாபிஷேகத்தை நடாத்தினர்''-

இவ்வசனத்தில்வரும் இருகுருமார்களும் உண்மையில் அக்கும்பாபிஷேகத்தை நடாத்தவில்லை. முன்னவரே நடாத்தினர்; பின்னவர் சேர்ந்து செய்யவில்லை. அவ்வைபவத்திற் கலந்துகொள்ளவுமில்லை. குறிப்பிட்ட குருக்களால் 6-12-43 லும், அதற்குமுன் சிவஸ்ரீ சிதம்பரப்பிள்ளைக்குருக்கள் அவர்களாலும் செய்யப்பட்ட கும்பாபிஷேகங்களை மறைத்துத் தமது கூற்றை நிலைநாட்டுவதற்காக 68-ம் ஆண்டில் நடந்த கும்பாபிஷேகத்தையே தமது கட்டுரையில் கட்டுரையாளர் காட்டியுள்ளார்.

உண்மை இப்படியிருக்க, பஞ்சபாண்டவரின் முற்சந்ததியினராய்க் குறிப்பிடப்படும் 'குரு' வென்னும் அரசனின் குலத்தவரெனத் தம்மை அழைத்துக்கொள்ளும் அக்கட்டுரையாளரின் மேற் குறிப்பிட்ட வசனம் எவ்வளவு பொய்மையுடைத்து. 'ஒருபானை சோற்றுக்கு ஒருசோறே பதம் பார்ப்பது' என்பதுபோல் அவரது கட்டுரையின் இதர வசனங்களும் இவ்வாறே உண்மையற்றவை.

**'ஓடைக்கரை'**

துறைமுகங்களில் ஓடங்கள் வந்து தங்குவதனால் 'ஓடக்கரை' என ஆவது பிழையாகுமா? குளமிருந்தமையாற்றான் 'ஓடைக்கரை' எனவாயிற்றெனக் கரையவேண்டுமா?

காங்கேசன்துறையின் அநாதி நாமம் குரக்கன் துறையென்பதைக் கோவிற்கடவை நூலாசிரியர் ஒப்புக்கொண்டார். இந்நூலிலே குரக்கன் ஏற்றுமதி செய்யப்பட்டதனாலேயே குரக்கன் துறையென்ற நாமம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது இன்று குரக்கன் துறையை மீன்பிடித்துறையென வாதாடுவதை அறிவு படைத்தோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

'ஈழத்துணவுங் காழகத் தாக்கமும்' எனப் பண்டைத் தமிழ் நூல்களிற் குறிப்பிடப்பட்ட ஈழத்துணவு எது? அது எத்துறையில் ஏற்றுமதி செய்யப்பட்டது? மாதோட்டம் என்பாராயின் காவிரிப்பூம்பட்டினத்துக்கு மாதோட்டமா காங்கேசன்துறையா கிட்டியது? பண்டைய பிரயாணம் சுருங்கிய வழியையா நீண்ட வழியையா பின்பற்றியது? மாதோட்டம் சீன, உரோம் முதலிய வெளிநாடுகளுக்கு வியாபாரப் பெருந்துறையாய் இருந்திருக்கலாம்.

ஆனால் காவிரிப்பூம் பட்டினத்துக்குக் காங்கேசன் துறையே கிட்டிய துறை; ஏற்றுமதித்துறை.

'இந்தியாவில் வீரசைவம் உதயமானது கி.பி. 12-ம் நூற்றாண்டிலாகும்.'

இவ்வசனம் பொருந்தாக் கூற்றாகும். சைவம்—சிவசம்பந்தம். சிவம்—லிங்கம்; சம்பந்தம்— கலியாணம், தொடர்பு. தீக்ஷையாகிய விவாகத்தாய் சிவமாகிய பதியை ஆன்மாவாகிய கன்னிப்பெண்ணுக்குப் பதியின் அடையாளமாகிய சாட்சாத் சிவலிங்கமாகிய தாலியைக் கட்டுதலாகும்- சிவசம்பந்தம் சைவமாகும்,

'யதக்ஷரம் பரம் பிரஹ்ம தத்சூத்திர மிதி தாரயேத்'
(பரப்பிரமோப நிடதம்)

'நமோ பிரஹமனே தாரணம்மே அஸ்து நிராகரணம்

தாராயிதா பூயாஸ. கர்ணயோ சுருதம்

மாசோட்வம் மமாமுஷ்ய ஓம். (யசுர்வேதம்)

'குருணதத்த லிங்கந்து சிவ மந்த்ரேண தாரயேத்
(வாதுளாகமம்

'தஸ்மாத் தாரியம் மஹாலிங்கம் பாணி மந்திரதம்.
(இலிங்கபுராணம்)

''தல்லிங்கம் பிரஹ்ம சாசுவதம்
(சித்தாந்தாகமம்)

பிரமம் என்பது இலிங்கம் எனப்படும் தூலதேகத்தில் கண்ணுக்குத் தோன்றவும் சூக்குமதேகத்தில் மனதுக்குத் தோன்றவும் பிரமசூத்திரமாகிய இலிங்கத்தைத் தாரணம் செய்பவனே சைவன் எனப்படுவன்

கையில் மழுவேந்தலாலும் தலைமாலையைத் தரித்தலாலும் சர்ப்பத்தையணிதலாலும் வீரட்டானத்தில் எண்வகை வீரத்தைச் செய்தமையாலும் சிவபெருமானுக்கு வீர என்ற சப்தமுங் கூடி 'வீர சைவன்' என்ற நாமம் சூட்டப்பட்டது.

''தாரகைபோலும் தலைத்தலைமாலைத்தழலரப் பூண்வீர்'' என்கிறது, நீத்தல், விண்ணப்பம். போற்றித் திருவகவலில். [illegible] வீரசைவம் [illegible]லிருந்துவரும் பரம்பரைச் சைவமாம்.

''அநாதி சைவ சம்புத தஸ்ய கணபி'' எனச் சந்திரஜ் ஞானகமமும் 'அநாதி சைவன் சிவபெருமான்' என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களும் கூறுவர். ''விசிட்டம் வீயதேயஸ்மாத் வீரஇத்திய பிதீயதே'' என வாதுளாகமம் கூறும். ''வீ'' சதம்- வித்யா-அறிவு. ''ர'' சப்தம்-இரமித்தல். ஆகவே, சிவ சீவ ஐக்கியம் போதிக்கும் 'வீர' சப்தம் சிவலிங்கத்தில் சீவனை ஐக்கியப்படுத்தும். அங்கலிங்க சாமரஸ்யமுடையவன் வீரன் எனப்படுவன் என்று சித்தாந்த சிகாமணி செப்பும்.

'நாய மாத்மா பலஹீநே நவப்ய:கச்சித்தீரபிரத்ய காத்மா நமைக்ஷத்''
(உபநிடதம்)

''ஜங்கமம் மங்களம் சூத்ரம் லிங்கதாரண மாசுபம் ஜங்கமம் மங்கள சூத்ரம் முக்தி சோபனம்''

இலிங்கதாரணம். நந்தித் தண்டம், காஷாய உடை, ஜடை, ஞானம், சாந்தம், தயை ஈகையாகிய ஞான சாரங்களைப்பேணி தன்னையடைந்த சீடர்களுக்கு இலிங்கதாரணம் ஞானோபதேசஞ்செய்து கொண்டிருப்பவரே ஜங்கமர். ஆகவே ஜங்கமரென்போர் வீரசைவத்துறவிகள். நடமாடுங் கோயில்கள் வீரசைவக்குருமார் இலிங்கி (இலிங்கங் கட்டிக்கொள்ளும் தபஸ்வி) களின் திருக்கூட்டத்தார்.

**சில சான்றுகள்**

வீரசைவத்தின் பழமைகளுக்குச் சில சான்றுகளை இங்கு காண்போம்.

ஜனமேஜய மகாராசன் கேதாரக்ஷேத்திர வீரசைவ உஷாமடாதிபதி ஸ்ரீகோசுவாமி ஆனந்தலிங்கஞானலிங்க சங்கமருக்கு மத்திய பிரதேசத்தை மாதாபிதா சிவலோக பிராப்தியின் பொருட்டுத் தானஞ்செய்ததைக் குறிக்கும் தாமிரசாசனம்,

ii ஸ்ரீஜெயானந்ததேவ மகாராசாவால் கி. மு. 6-ம் நூற்றாண்டில் காசி ஜெகத்குரு வீரசைவ விஸ்வாராத்திரிய பீடாதிபதியான மல்லிகார்ச்சுன ஜங்கமருக்கு எழுதிக்கொடுத்த சாசனம்.

iii சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய 'மாணிக்கவாசகர்காலம்' என்னும் நூலில் வீரசைவம் கி. பி 2-ம் நூற்றாண்டில் வடக்கிலிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்த கன்னட நாட்டாரால் கொண்டுவரப்பட்டது என்னும் வசனம்

iv சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் டி. எம். பி மகாதேவன்எழுதிய 'இந்துசமய தத்துவம்' என்னும் நூலில் உள்ள மிகப் பழமையான காலத்தில் தோன்றிய வீரசைவமானது கி- பி. 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பசவர் என்பவரால் கன்னடப் பகுதியிற் பரப்பப்பட்டுப் பிரபல்யமடைந்திருந்தது.

'மனிதன் காங்கேயன் வந்திறங்கிய காரணத்தால் இலிங்கதாரிகள் வந்திறங்கிய குரக்கன்துறையெனப் பெயர்பெற்றது' எனவும் பின் 'கந்தவெற்பிலிருந்த ... ... எழுந்தருளினார்' என்னும் கும்பாபிடேக மலரில் கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட முதல் வசனம் எமதுதவியால் மலர்ந்தமலரில்லை. இப்படிஇல்லாததைப் படைத்து மொழிதல் ஏனோ? அவ்வசனம்எவ்வளவு பிழையுடைத்து என்பதைக் கட்டுரையாளர் அறிவாரா? அது அவரது ஆக்கமேயாம். அடுத்த இரண்டாம் வசனம் தட்சனைகைலாச புராணத்திலிருந்து எடுக்கப்பட்டது அவ்வசன பொருந்தாதாயின் அப்

(15-ம் பக்கம் பார்க்க)

**வீரகுரு. சிவ. ஐயம்பிள்ளைக்குருக்கள்**

# மிளகாய்ப் பிலாக்கணம்

## அடுக்களையிலிருந்து அஞ்சல்

'ஓ' மிளகாயே! நீ எம்மை அழவைக்கலாமா? ஏ, மாதகல் கறுப்பனே! நீ எங்கே மறைந்துவிட்டாய்? ஆ. மயிலிட்டிச் சிவலையே! நீ எங்கே ஒளிந்துகொண்டாய்; ஓ, தூத்துக்குடியே, வன்னியே! நீங்களெல்லாம் இப்படி எம்மைப் பரிதவிக்க விடலாமா? இதுசரியா? இது முறையா? நியாயம்தானா? காலையில் எழுந்தவுடனே தோசைக்குச் சம்பலாய், இடியப்பத்துக்குப் பச்சடியாய், இட்லிக்குச் சட்னியாய், பாணுக்குச் சீனிச்சம்போலாய் மறைவில் நின்று மகிழ்வித்த நீ, மத்தியானத்தில் கறியிலும், கூட்டிலும், வறுவலிலும், பொரியலிலும், குழம்பிலும் சாம்பாரிலும், சொதியிலும் ரசத்திலும்—எல்லாவற்றிலும் சர்வ வியாபகமாக நின்று எம்மை ஆட்கொண்டுவிட்ட நீ, இன்று ஏன் மாயமாக மறைந்துபோனாய்? உன்னை இனிமேல் காணட்டும் கட்டி வைத்து கண்ணுக்கு மிளகாய்போட்டு விடுவேன், ஆமா?

'நீ திலிதேசத்திலிருந்து ஐரோப்பா வழியாக இங்கு வந்து சேர்ந்ததாகக் கூறுகிறார்கள். அந்த நாட்டவர்கள்எல்லாம் உன்னை 'சீ' யென்று ஒதுக்கிவிட நாங்கள்தான் உன்னை மேளதாளம்போட்டு வரவேற்றோம். இப்போ எங்களை தகிங்கிணதோம் போடவைத்துவிட்டாய், ஏ, நன்றிகெட்ட மிளகாயே, எங்களை நீ இப்படி மறந்துபோனதற்கு நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? உன்னை எவ்வளவு அன்போடும் ஆதரவோடும் வரவேற்றோம். தோட்டம் தோட்டமாக சேனை சேனையாக, ஏக்கர் [illegible]பச்சைப்பசேலென்று நீ வளர்ந்து, முத்துப்போல வெள்ளைப்பூ பூத்து, ரத்தம்போல சிவந்த பழம் பழுத்து ஆடம்பரமாக நிற்பதைக் கண்டு பரவசமானோம். கடகம் கடகமாக உன்னை ஆய்ந்து, பாய்பாயாக உன்னைப் பரப்பி, மலைமலையாகக்குவித்து, சாக்குச் சாக்காக உன்னைச் சுமந்து, சந்தைகள்தோறும் சாவடிதோறும், கடைகள் தோறும், மனைகள்தோறும் உன்னைக் கட்டிக்காத்து வந்தோமே. உலகத்திலேயே அதிகமான மிளகாய் தின்னும்வர்க்கம் என்ற 'றெக்கோர்டை' ஸ்தாபித்தோமே வெள்ளைக்காரர் உன்னைக் கண்டால் கண் கலங்குவார்கள். உன்னைக் காணமல் நாங்கள் கண்ணீர் விடுகிறோமே!

உனக்கு அப்படி என்னதான் நேர்ந்துவிட்டது உனது சகோதரர்கள் வெளிநாடுகளிலிருந்து வருவதை அரசாங்கம் தடை செய்துவிட்டதற்காக பிணங்கிக் கொண்டாயோ? அதற்காக சத்தியாக்கிரகம் பூண்டு உங்கள்ஊரில் விளைவதில்லையென்று மறுகிக்கொண்டாயோ? எங்கள் நிலங்களில் உனக்குப் போதிய போஷாக்கு கிடைக்காமல் போய்விட்டதோ? தோட்டக்காரர் உனக்கு போதிய பசளைத்தீனி கொடுக்காமல் விட்டுவிட்டார்களோ? சுப்பர் பொஸ்பேற்றும் அமோனியம் சல்பேற்றும் அவர்களுக்கு கிடைக்கவில்லையா? கே. ஓ., ரி. ஓ., தபாஸ்கோ என்ற நல்லஇன விதைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லையா? வெளியூர் இறக்குமதியை தடை செய்த அரசாங்கம் இந்த காரமான இனங்களை பயிரிடும்படி தோட்டக்காரரை தூண்டியிருக்குமே? இந்தக் கடமையில் அரசாங்கம் தவறிவிட்டதா?

'அல்லது நல்ல இன விதைகள் கிடைத்தும், நல்லபசளை இட்டும், நல்ல பாசனவசதி கிடைத்தும் கொடியவைரசுகள் உனக்கு காலனாக வந்துவிட்டனவா? ஐயோ, நினைக்க நெஞ்சம் வேகிறதே! மயிர்க்கொட்டிப்பூச்சியின் தாக்குதலைத்தாங்க முடியாமல் நீ தவியாய் தவித்தனையோ! திறிப்ஸ்நோயின் படையெடுப்பால் நீ துயரமுற்றனையோ! அல்லது வேறுஏதாவது கொடிய நாசம் உன்னை சூழ்ந்து கொண்டதுவோ!


'களைகொல்லிகளைப் போட்டு களைகளைக்கட்டுப்படுத்தாமல் மறந்துபோனானே, பாவிக்கமக்காரன்! டைமிட், திரெபிளான், சி. பி. 31393 என்ற களைகொல்லிகள் இருப்பதை அறியானோ அந்தத்துரோகி! அவன் இந்த மாதிரி கேவலம்செய்வான் என்று நான் கனவிலும் கருதவில்லையே! இன்னுமொரு திசையில் பார்க்குமிடத்து அவனைகுறைசொல்லியும் பலனில்லை என்று தோன்றுகிறது. உனக்கெதிராக, உன்னுடன் போட்டியிட்டு, உன்னைவிடக்கூடிய வருமானம் தரக்கூடியவேறு பயிர்கள் அவனுடைய மனதை, தாசிகள்போல், திருப்பிவிட்டனவா? அப்படியும் இருக்கலாம். அப்படியாயின் உன்னைக் குறைகூறுவது சரியல்ல. நமது பிராப்தம்!

'நேற்று பலசரக்குக் கடைக்குப் போயிருந்தேன். அங்கே பெட்டி நிறையக் கிடக்கும் உன்சிவந்த மேனியைக்காணவில்லை. பெட்டி

(15-ம் பக்கம் பார்க்க)

**வி. என். பி.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# எதிர்நீச்சல்

**— எஸ். செல்லச்சாமி —**

'கொலைகாரி... கொலைகாரி...' நான் எங்கு சென்றாலும் இதே பட்டத்தை எல்லோரும் சூட்டிவிடுகிறார்கள். வேதனையில்வெந்து கொண்டிருக்கும் என்னுள்ளத்தை ஈட்டி கொண்டு தாக்குகின்றார்கள் விந்தையான உலகு! எத்தனையோ பேர் எவ்வளவோ தவறுகளைச் செய்கிறார்கள் அகப்பட்டுக் கொள்ளாமலே. ஆனால் மனச்சாட்சியின்படி சரியானதைச்செய்த என்னைக் கண்டதும் ஏளனமாகச் சிரிக்க ஏராளமானோர் இருக்கின்றார்கள்.

அப்பாவிற்கும் அம்மாவிற்கும் ஆசைக்கொரு மகளாகப் பிறந்தேன். செல்லமாக வளர்ந்தேன். பொய் பேசுபவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. சின்னஞ்சிறு வயதிலிருந்தே இப்படி. இது நாள் வரை பொய் பேசியதே இல்லையென்றால் அதுவே ஒரு பொய்- முழுப்பொய் என்பார்கள் இக்காலத்தில். அதற்குமேல் இனியும் பொய்பேசப்போவதில்லை என்று நான் கூறுவகானால் அப்பொழுது அதற்கென்ன சொல்வார்களோ! அதற்குத்தான் கொலைகாரி என்று பட்டம்சூட்டி பரிசளித்திருக்கிறார்களே!

வாலைக்குமரியானேன்.

அழுபவர்கள் என்றும் அழுதுகொண்டிருப்பதில்லை. சிரிப்பவர்கள் என்றும் சிரித்துக்கொண்டிருப்பதில்லை. காலம் மாறும் கவலைகள் தீரும் என்றெண்ணியிருந்தேன். காலமும் மாறவில்லை. கவலையும் தீரவில்லை. நாளும் கவலைக்கடல் பெருகிக்கொண்டே வருகிறது. கவலைக்கடலில் எதிர்நீச்சல் அடித்துக்கொண்டே இருக்கிறேன்.

நான் பிறந்து பதினெட்டாவது வயதில் சம்பவித்த தொரு பெரும் சோதனையின் முடிவு இன்றுவரை எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. நான் உயிரோடு இருக்கும்வரை அது எதிரொலித்துக்கொண்டேதான் இருக்கப்போகிறது. சத்தியம் தவறாமல் நான் வாழ்வதா, இல்லை சவதா அதுதான் சோதனை நான் சாவதாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் உண்மைக் குற்றவாளி தப்பிவிடக்கூடாது. உற்றாரோ பெற்றாரோ அல்லது வேறு யாராயிருந்தாலும் குற்றம் செய்தால் தண்டிக்கப்பட வேண்டியதுதான்.

பஞ்சமாபாதகங்களில் ஒன்றான கொலையை அப்பா செய்தார். ஆம், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை தான் கொலை செய்தார். நான் கண்ணாலே கண்டேன். பொய்ச்சாட்சி சொன்னால் அப்பா விடுதலை பெறுவார் என்பது எனக்குத் தெரியும். ஆனால்... என் மனச்சாட்சியோ பொய்ச்சாட்சி சொல்ல அறவே மறுத்தது. எனது உறவினர்கள் பொய்ச்சாட்சி சொல்லும்படி வற்புறுத்தியபோது அதற்கு நான் இணங்கவே இல்லை. என் தந்தையுடன் கூடப் பிறந்த தங்கை என்னை அணுகி பொய்ச்சாட்சி சொல்லும்படி என்னை வற்புறுத்தினாள். அவளுக்கும் கண்டிப்பாக மறுத்து விட்டேன்.

எனக்கு அத்தான்முறையான என் தந்தையின் தங்கைமகன்; அவர் கூட வந்து 'மல்லிகா, நீ உண்மையை அப்படியே சொன்னாயோ உன் அப்பாவிற்குத் தூக்குத்தண்டனைதான் கிடைக்கும். பெற்ற தந்தையையே தூக்குமேடை ஏற்றியவள் என உலகம் தூற்றும் உலகத்தால் அவ்வாறு தூற்றப்படும் ஒருத்தியை நான் மனைவியாக்கிக் கொள்ளவே முடியாது' என்று சொன்னார். நான் அதிர்ச்சியுற்றேன். இவர்கூடவா இப்படி... நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. எனக்கும் அவருக்கும் திருமணம் செய்து வைக்க எப்பொழுதோ நிச்சயிக்கப்பட்டு விட்டது. அப்பா, தன் உடன்பிறந்த தங்கையின் மகனுக்கு என்னைக் கட்டிக் கொடுப்பதில் பெருமைப் பட்டார். ஒரே ஊரில் இரு குடும்பங்களும் இருந்ததனால் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி அத்தான் சேகர் வந்து போவார். நானும் அவர் வீட்டிற்கு அடிக்கடி போய்வருவேன். 'என்ன பொருத்தம்' என இந்த உலகமே எங்களைப் பார்த்து வியந்தது அப்படிப்பட்ட வாழ்க்கை கிட்டாது போகிறது, அவர் என்னை வெறுத்துவிட்டால் ... என்னால் இந்த உலகில் உயிரோடு இருக்கவே முடியாது. ஆனால் ...

அப்பா, அடிக்கடி சொல்லுவார் 'மகளே பொய் சொல்லாமல் வாழும் வாழ்வைச் சிதைக்க எத்தனையோ சோதனைகள் குறுக்கிடலாம். அரிச்சந்திரன் தன் அரண்மனை, மனைவி, பெற்ற பிள்ளைகள் முதலியனவற்றை ஏன் இழந்தான்? நாடுகாக்கும் மன்னன் அரிச்சந்திரன் பிணக்காட்டின் காவற்காரனாக மாறியது ஏன்? அவன் எத்துயர் உற்றபோதும் நாகோடவில்லை. தன் கொள்கையிலிருந்து விலகவில்லை. எவற்றை இழக்கக்கூடாதோ அவற்றையெல்லாம் இழந்தபோதும் அவன் வாய்மை இழக்கவில்லை. சத்திய சோதனையின் முடிவு மேன்மையே தந்தது. தேவாதி தேவர்களே போற்றிப் புகழ்ந்தார்கள். இந்தக் காலத்தில் உன்சத்தியசோதனையின் முடிவு எப்படி இருக்கப்போகின்றதோ நானறியேன் ... ... எப்படியும் அது எனக்குப் பெருமைதான். சத்தியத்தைக் கடைப்பிடி அது உன்னை ஏமாற்றாது. நீ பொய் சொல்லாமல் வாழ்வதைப் பார்த்து நான் பெருமைப் பட்டுக் கொண்டே சாகவேண்டும். இன்றுமுதல் எனக்கு நீ ஒரு சத்தியேஸ்வரி...''

தந்தையின் இந்த அறிவுரையை என்னால் மறக்கவே முடியவில்லை குற்றம் செய்வோர் எவராயினும் தண்டிக்கப்பட்டுத்தானாகவேண்டும் என்ற என்னுள்ள உணர்வுகளுக்கு நான் துரோகம் செய்ய விரும்பவில்லை. அதனால் அத்தான் எனக்குத் துரோகம்செய்யத் துணிந்துவிட்டார். நான் அத்தானிடம் கூறினேன்:

'அத்தான், உங்கள்பேச்சு நன்றாக இருக்கிறதே! என் இன்பவாழ்விற்காக பொய் சொல்லி, அப்பா விடுதலை பெற்று வெளியே வந்தாலும் வாழ்நாள்முழுக்க அணுவணுவாகச் செத்துக் கொண்டேயிருப்பார். தன் மகள் சத்தியத்திலிருந்து தவறிவிட்டாளே என்ற ஏக்கத்தினால்தான் அவர்நிலை அப்படியாகும். தவறுசெய்தவர்கள் தண்டிக்கப்படாமல் தப்பியபோது மனம் வெதும்புவார் அவர் நீதிமன்றத்திலேதான் கொலைகாரன் என்று அவரே ஒப்புக் கொண்டிருக்கும்போது அதன்மேல் ... ... நான் ஏன் பொய் சொல்லவேண்டும் அத்தான்? என்தந்தை என் வாய்மை குறித்துப் பெருமைப்பட்டுக்கொண்டேசாவதனால் நான் அதுகுறித்து மகிழ்ச்சியடைவேன் என் மகள் சத்தியேஸ்வரி அல்ல. அவள் என் மகளும்ஆகாள், என்மகள் ஒரு தெய்வப் பிறவி என்றெண்ணியதெல்லாம் இன்று அவமாகிவிட்டதே என்று எண்ணி யெண்ணி என்அப்பா சிறுமைப்பட்டுச்சாவதை நான் விரும்பவில்லை. அப்பாவின் சாவில் மகள் சந்தோஷப் படுகிறாள் என்று நீங்கள் எண்ணலாம். என்வாழ்வில் இப்படியானதொரு சத்திய சோதனை ஏற்பட்டதை நினைத்து மனங் கலங்குகின்றேன். அத்தான் மண்ணுலகில் மனிதராகப் பிறந்து விட்டால் ஒருநாள் மாண்டு தானே ஆகவேண்டும். மரணத்திலிருந்து எவருமே தப்பமுடியாது மனிதன் மாண்டாலும் மண்ணுலகில் பிறந்துவிட்ட ஒரேயொரு காரணத்துக்காவது உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்க்கையின் ஒருபொருளை உலகிற்கு உணர்த்தி மறைவது சாலச் சிறந்ததாகும். அரிது... அரிது ... மானிடராக பிறத்தல் அரிது என்று சொல்லப்படும் இந்த மானிடப்பிறவி எடுத்துத்தான் என்ன பலன்? என் வாழ்க்கைக்காக நாள் கொண்ட கொள்கையிலிருந்து விலகப் போவதில்லை. நான் ஒரு கொள்கையாக போலி வேடம் போட்டுத் திரியும் வேடதாரியாக நான் வாழ விரும்பவில்லை. அதைவிடச் சாவதுமேல். சாவதாயினும் தான் கொண்ட இலட்சியத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாமற் சாகிறாள் என்ற அவச் சொல்லுக்கு இடம்வைக்க விரும்பவில்லை. எனவே நான்பொய்ச்சாட்சி சொல்லப்போவதில்லை, அத்தான். என்னை மன்னித்து விடுங்கள். பெற்ற அன்னைதான் பசிநோயால் கொடிய துன்பத்தில் துடித்தபோதிலும் செயற்க சான்றோர் பழிக்கும் வினை என்கிறார் வள்ளுவர்.'' அவ்வளவில் என் பேச்சுக்கே அர்த்தம் புரியாதவராய் அத்தான் என்னை அடித்துத் துன்புறுத்திவிட்டுப் போய்விட்டார். போனவர் போனவர்தான். நானும் அதன் பின் அவரை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

0 0 0

நீதிமன்ற விசாரணையின் போது நான் கண்ணால்கண்டதை பொய்ப்படுத்தாமல் அப்படியே சொன்னேன். குற்றவாளிக்கூண்டில் நின்ற என் தந்தையைப் பார்த்தேன். அவர் முகம் பூரிப்படைந்திருந்தது. நீதிபதி விசாரணை முடிவில் தீர்ப்பளித்தார். அப்பாவிற்கு மரண தண்டனை. அதை நினைத்து அழுதேன். அது சமயம் நீதிபதி அப்பாவை நோக்கி ''ஏதும் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்'' என்றார்.

கடைசி வார்த்தைகளாக என் தந்தை கூறியதாவது:

நீதிபதி அவர்களே! பெற்ற தகப்பனுக்கெதிராகச் சாட்சி சொல்லும் சந்தர்ப்பம் என் அருமை மகளுக்குக் கிட்டியிருக்கக் கூடாது ஆனால்... அவளின் சத்தியசோதனையை நான் காணும் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். குற்றம்செய்யாதவன் தண்டிக்கப்பட்டால் கவலைப் படவேண்டும். நான்கவலைப் படவில்லை. நான் தொட்டுத் தாலிகட்டிய என் மனைவியைக் கொலைசெய்தது உண்மைதான். நான்கொலை செய்வதை என் மகள் காணக்கூடாது என்று எண்ணினேன். அதுதான் நடக்கவில்லை. பத்துமாதம் சுமந்து தன்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய தன் தாயைத் தந்தையே கொலை செய்வதைக்கண்ட என் மகள் என்ன செய்வாளோ என எண்ணினேன் எங்கே என் மகள் பொய்ச்சாட்சி சொல்லிவிடுவாளோ எனக் கவலைப்பட்டேன். ஆனால் அவள் உண்மையே பேசி தன்னை வென்றுவிட்டாள். அதனால் என் கண்களுக்கு அவள் ஒரு தெய்வமாகத் தோன்றுகிறாள். என் உயிர் பிரியுமுன்பாக அவளை ஒரு தடவை தழுவி அன்பு முத்தமிட ஆசைப்படுகிறேன். அதுவே என் இறுதிவேண்டுகோள் நீதிப்பிரபு ''

அதற்குமேல் அப்பா சொன்னது எனக்கு நினைவில்லை. நான் மயங்கி வீழ்ந்துவிட்டேன். இன்று வரை அப்பாவின் ஆத்மா சாந்தியடைய அவரது ஆசி பெற்ற என் சத்தியப்பாதையில் வெற்றி நடைபோட நான் துன்பக்கடலில் எதிர் நீச்சல் அடித்துக் கொண்டுதான் இருக்கிறேன். உலகம் என்னைக் கொலைகாரி என்று தூற்றுகிறது. குலத்தைக் கெடுத்த கோடரிக்காம்பு என்று ஏசுகின்றது. சத்தியம் என்ற பேரொளிக்கே நான் இருக்கும்வரை, நான் எவரைப் பற்றியும், எதைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை.

(யாவும் கற்பனை

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவையொட்டி நடாத்தப் பெற்ற இலக்கியப் போட்டியில் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளில் இதுவுமொன்று.

# யாருக்குச் சிரமம்?

சின்னஞ்சிறுகதை

**இ. நா.**

ஓங்கி உயர்ந்த மலையொன்றை அடுத்துள்ள ஊரிலிருந்து மலையடிவாரத்தை நாடி இருவர் வந்தனர்.

ஒருவன் மலையடிவாரத்தில் தனக்கென ஒரு வீட்டைக் கட்டினான். அப்போது மற்றவன் மலையின் உச்சியில் வீடு கட்டுவதற்காக முயற்சிசெய்து கொண்டிருந்தான். மலையடிவாரத்திலுள்ள காட்டிலிருந்து மரங்களையும், வீடுகட்டுவதற்கான ஏனைய பொருட்களையும் மலையினுச்சிக்கு அவன் சுமந்து சென்றபோது மற்றவன் ''ஏனப்பா இவ்வளவு சிரமப்படுகிறாய்? என் பக்கத்திலே ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளலாமே'' என்று சொன்னான். அதற்கு எவ்விதபதிலும் சொல்லாமல் தன் காரியத்திலேயே இரண்டாம் மனிதன் ஈடுபட்டான் வீடுகள் கட்டிமுடிந்தன. இருவரும் வீடுகளிற்குடியேறினர்.

சில நாட்களின் பின்னர் பெருமழை பொழிந்தது. மலையடிவாரத்திலுள்ள வீடு வெள்ளத்தால் அள்ளுண்டது. மலையின் உச்சியிலுள்ள வீடு அசையாமலிருந்தது. அப்போது மலையடிவாரத்திலிருந்தவன் பலத்த சிரமத்துக்குள்ளானான். மலையின் உச்சியிலுள்ளவன் ''சிரமத்துடன் ஏறிவா இங்கே, என்னுடன் வசிக்கலாம்'' என அழைத்தான்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தீவுகள் இணைந்த இரணைதீவு

## வட்டக்குடிசையில் வாழும் மக்கள் வரலாறு

— காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா —

யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சுற்றி அமைந்துள்ள தீவுகளிலே இரணை தீவுமொன்ருகும். இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து 30 மைல் தூரத்திலும், கத்தோலிக்கரின் புனித க்ஷேத்திரமாய் விளங்கும், பாலைதீவிலிருந்து 15 மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவை இரணைதீவு, இரட்டைத்தீவு, சகோதரர் தீவு எனப் பல நாமங்கொண்டழைப்பர். இத்தீவிற்குச் சூட்டப்பெற்ற அரும் பெரும் நாமத்தின் அர்த்தத்தை அறிதற்கு ஒரு முறை யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து மோட்டார் படகிலோ அல்லது வள்ளங்களிலோ செல்வோமாளுல் அதன் உண்மை நன்கு விளங்கும்.

பாலைதீவைக் கடந்தவுடன் இத்தீவானது தனித்தனியாக அமைந்த இரு பெருந் தீவுகளாகக் கண்ணுக்குப் புலப்படும். இவ்வற்புதக் காட்சியைக் கண்டவுடன் சகலரும் எவ்வித தயக்கமுமின்றி ஒரேவாய்ப்பட புறம்புபுறம்பான தனித்தனித் தீவென்றே முடிவு கட்டுவர். பாலைதீவைக் கடந்து பத்து மைலுக்கப்பால் வந்ததும் இரட்டையாகத் தெரிந்த இத்தீவு நாலு மைல் நீளமுள்ள ஒரு தனித் தீவாகக் காட்சியளிக்கும். இதனிமித்தமே இதன் இயற்கையமைப்பின் அழகை அறிந்து அறிஞர்கள் இதற்கு இரணை தீவென்ற நாமத்தைச் சூட்டினர்.

### ஆதிக் குடிகள்

இத்தீவு மக்கள் சுமார் 500 ஆண்டுகளுக்குமுன் நெடுந்தீவிலிருந்து சாயவேர் எடுக்கும் நோக்கமாக கச்சதீவு, கற்கடதீவு, பாலதீவு, எருமைத்தீவு முதலாம் தீவுகளுக்குச் சென்றவண்ணம் இரணைதீவுக்கும் வந்துள்ளார்களென்றும், காலகதியில் இத்தீவையே தம் தாயகமாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்களென்றும் ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர் இவர்கள் நீர்கொழும்பிலுள்ள குருகுல மக்களென்றும், இலங்கையின் வடபாலுள்ள சாகரத்தை ஊடறுத்து மச்ச வேட்டையாடும்பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டை அடைந்து கல்முனை, கவுதாரிமுனை, பள்ளிக்குடா, எரிக்கந்தமுனை, நாச்சிக்குடா முதலாமிடங்களுக்கு மெல்ல மெல்லக் குடியேறி ஈற்றில் இரணைதீவையே தங்கள் சொந்த இருப்பிடமாக அமைத்துள்ளார்களென்றும் கூறுவர். இவர்கள் சுமார் 370 ஆண்டுகளுக்கு முன் கண்ணுடிப்பாதிரியார் என்றழைக்கப்படும் வண. பேதுறு தே பெற்றன்கோர் சுவாமியாரால் ஞானத் தீட்சை பெற்றுக் கத்தோலிக்கராயினர். இவர்களின் மேற்பார்வையில் ஆறு தேவாலயங்களுள்ளன. பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயமும் இவர்களால் அடியிடப்பட்டதாகும்.

### வாழ்க்கை

இலங்கைத்தீவிலே ஒரே மதமும், ஒரே இனமும், ஒரே சாதியும் அமைந்துள்ள ஒரு நாடோ அல்லது ஒரு தீவோ இருக்குமேயாகில் அது இரணை தீவு மாத்திரமேயன்றி வேறில்லை: இங்கு பொலிஸ் நிலையமோ, நீதிஸ்தலமோ, கச்சேரியோ கிடையாது, வீண் போட்டியும், சண்டைசச்சரவுகளும், அடிபிடிகளும் தலைகாட்டுவது மிகவும் அரிதேயாகும். அங்ஙனம் சில சந்தர்ப்பங்களின் சச்சரவுகளேற்படினும் அதனை அங்குள்ள பெரியோர்கள் பஞ்சாயம் பேசி தீர்த்துவைப்பர். பிற நாட்டு மக்களை ஆதரிப்பதிலும், உதவி புரிவதிலும் பெருங்குணம் படைத்தவர்கள். ஆனால் இவர்கள் பிற நாடு செல்வதற்கோ அல்லது பிறசாதியாரோடு சம்பந்தம் செய்வதற்கோ அணுவளவேனும் ஆசையற்றவர்கள். தாமுண்டு, தம் வீடுண்டு. தம் நாடுண்டென்று சீவிக்கும் பழக்கமுள்ளவர்கள்.

### தொழில்

இவர்கள் பூர்வகாலந்தொட்டுக் கடல் தொழிலே செய்துவந்துள்ளார்கள். ஆண்களும் பெண்களும் சோம்பலின்றி எவ்வித தொழிலும் புரியும் ஆற்றல் படைத்தவர்கள். ஆறுமாத காலம்வரை கடல் தொழிலும். மற்ற ஆறு மாதங்களில் வன்னி நாடுகள் சென்று நெல்லு வெட்டுவதும். காடுகளில் திரிந்து பாலைப்பழங்கள் சேகரித்து ஒருவகைப் பாணி செய்வதுமே இவர்களின் பிரதான முயற்சியாகும். இவர்களால் தயாரிக்கப்படும் பாலைப் பாணி, மேல் நாட்டு 'ஜாம்' வகைகளை ஒத்த சுவையுமுள்ளதும், வெகு நாட்கள்வரை பழுதுபடாமல் பாவிக்கக் கூடிய தன்மையுமுள்ளது.

கடல் தொழிலிலும் இவர்கள் மிகவும் வல்லவர்கள் சிறு சிறு வள்ளங்களைக் கொண்டு பெரும் பெரும் சமுத்திரங்களைத் தாண்டி மச்ச வேட்டையாடுவர். மற்றைய நாட்டு மீனவர்களைப்போல் இவர்கள் வலை போட்டு ஆமைகள் பிடிக்காமல், கடலில் சுழியோடி ஆமைகளின் கால்களிலே கயிற்றுத் தடம் போட்டுப் பிடிக்கும் சாகர வீரர்கள்.

### வட்டக் குடிசையும் மரத்திறவுகோலும்

இரணைதீவு மக்கள் வசித்த குடிசையும், பாவித்த திறவுகோலும் மிகவும் விசித்திரமானது. இக்குடிசைகள் கிணறுகளைப்போன்று வட்ட வடிவமாயமைந்து, அந்த வட்டத்தினுள்ளே சமையல் குசினியும், படுக்கைப்பகுதியும் அமைந்திருக்கும். வட்டத்தைச் சுற்றி சரியாகக் யாகக் கிணற்றுக் கட்டைப் போல் மண்ணினுல் சுவர் எழுப்பிக் கட்டப்பட்டிருக்கும். கூரைகள் மிகவும் அழகாகத் தென்னோலையால் வட்டமாக வேயப்பட்டிருக்கும். இதன் கதவுத் திறவுகோல் மரத்தினுல் செய்யப்பட்டதாகும். இவர்கள் வேற்றிடங்களுக்குச் செல்லும்போது கதவுகளைப் பூட்டி அத்திறவுகோலை வேலிஓரங்களில் நிற்கும் பூவரசமரத்திலே ஒழித்து வைத்துச்செல்வர். இவ்வகையாகவே இவர்களின் குடிசையும் திறவுகோலும் அமைந்திருந்தனவாம். தற்போது இரணைதீவில் வட்ட வடிவு வீடுகளும் மரத்திறவுகோலும் இல்லாதுபோயினும், இக்குடிசையில் வசித்தவர்களும், திறவுகோலைப் பாவித்தவர்களும் சாட்சியம்பகர இன்றும் சீவித்து வருகிருர்கள்.

### வண மோறேச் சுவாமியாரும் தற்கால நிலையும்

இத்தீவு மக்களின் சமயப் பணி புரிவதற்காக யாழ்ப்பாண மேற்றிராணியாரால் வண. மோறேச் சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிருர். இவ்வடிகளார் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக அங்கு தொண்டாற்றிவருகிருர். இவர் இரணைதீவுக்கு வந்த பிற்பாடு அவ்வூர் மக்களுக்கு சமய வழியில்மாத்திரமல்ல, சமூகத்துறையிலும் அநேகம் தொண்டாற்றியுள்ளார். ஆலய விஸ்தரிப்பு, பாடசாலை, அரசினர் வைத்தியசாலை, குடிதண்ணீர், சங்கக் கடை, கிராமச் சங்கம் முதலாம் அரும் பெரும் பணிகள் யாவும் இவரது முயற்சியாலேயே நடைபெற்றிருக்கிறது, அநேக மாணவமாணவிகளை தன் சொந்தப் பொறுப்பில் பிறவூர்களுக்கனுப்பி கல்வி பயிற்றுவித்துள்ளார். இவரது சலுகையாலும் ஊக்கத்தாலும் கல்வி பயின்ற திரு. செபமாலை என்பவர் ஓர் ஆசிரியராகவும், திருமதி சுவாளு என்னும் பெண்மணி இரணைதீவு உப தபால் நிலையப் பொறுப்பாளியாகவும் இன்னுமொரு மாணவன் கண்டிக் குருமடத்தில் குருமாணவனுகவும் திகழுகிருர்கள். இன்னும் தன் சொந்த முயற்சியாலும், ஊக்கத்தாலும் இளவாலை கன்னியர் மடத்தில் கலை பயின்று, தராதரப் பரீட்சையிலும், தையல் கைப்பணியிலும் சித்தி பெற்ற செல்வி அமிர்தம் செல்வராணி அரசாங்க சமூக சேவைப் பகுதியில் இரணைதீவில் கடமையாற்றுகின்ருர். இவ்வுத்தமி தனது ஓய்வு நேரங்களில் தன் தீவின் முன்னேற்றங் கருதி கன்னியர்களை ஒருங்கு சேர்த்து தையலும் கைப்பணிகளும் கற்பித்துவருகின்ருர். இன்னும் இரணைதீவின் முன்னேற்றத்திற்காக நெடுந்தீவு சுப்பிரமணியம் விதானையாரும், அவரது மகன் மார்க்கண்டுவும் அநேகம்தொண்டுகள் புரிந்துவருகின்ருர்கள் இவர்களின் முயற்சியினலேயே சுமார் 25 வருடங்களுக்குமுன் பனைமரங்கள் உண்டாக்கப்பட்டதும், குதிரைகள் வளர்க்கப்பட்டதும், கால்நடைகளுக்காக இரு கேணிகள் தோண்டுவிக்கப்பட்டதுமாம். தற்போது முற்காலத்திலும் பார்க்க இரணைதீவு சொற்ப முன்னேற்றம் பெற்றுள்ளது.

---

# வடகிழக்கில் விவசாயம் வளம்பெற வழி

## திட்டம் வகுத்துச் செயல் செய்யவேண்டும்

— சேவையாளன் —

ஈழத்திருநாடு இயற்கையன்னையின் பாதிப்பிற்கு வருடாவருடம் ஆளாகிவருவது யாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களை எமது தேசிய அரசு தன்னுல் இயன்ற உதவிகளை வழங்கி மீளவும் பழைய நிலைக்கு அப்பிரதேசங்களை புனரமைப்புச் செய்து வருவது பெருமைப் படக்கூடிய விஷயமாகும். இப்பாதிப்பு சாதாரணமானது அல்ல; கடும் மழை, புயற்காற்று இவைகளினுல் வீடுகளுக்கும் வயல் புலங்களுக்கும் ஏற்படும் பெருஞ் சேதமாகும். இதற்கு அயல் நாடுகளும் உதவிகள் வழங்கி மக்களின் கஷ்டநிலைகளை நிவிர்த்திபண்ணி வருகின்றன. இது ஒருபுறம்;

வடமராட்சி கிழக்குவாசிகளின் நிலை வேருகும். வடமராட்சி கிழக்கில் வதியும் 1500க்கு மேற்பட்ட விவசாயிகள் சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டு வருகிருர்கள். இவர்கள் கவலையை நீக்குவார் எவரும் இல்லை. இவர்கள் வேளாண்மையிலேயே முழுமையாகத் தங்கியுள்ளனர். ஆனல் வேளாண்மையோ வருடா வருடம் வெள்ளத்திஞலும் உவர்நீர்க்கலப்பிஞலும் பாதிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் கூலிப்பிழைப்பு கொஞ்சமும் [illegible]து. தோட்டப் [illegible] செய்வதற்கான தரிசு நிலமும் கிடையாது. அம்பன், நாகர்கோவில், குடாரப்பு, செம்பியன்பற்று ஆகிய கிராமங்களில் வதியும் விவசாயிகள் நெல் அறுவடைக் காலம் முடிவுற்றதும் அவ் வயல்களையே தோட்டங்களாக்கி பயிர்செய்து வருகிருர்கள். ஆனல் முக்கியமாக பயன்பெறவேண்டிய காலங்களாகிய ஆனி, ஆடி மாதங்களில் தோட்டந்துரவுகளில் உள்ள நீர் உவர்பெயர்ந்து வற்றிவிடுவதனுல் அதிலும் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. இந்நிலையில் வடமராட்சி கிழக்கு விவசாயிகள் உண்ண உணவின்றி, உறைய நல்வீடின்றி அரசினரின் நன்கொடை இலவச அரிசியையே பெரும்பான்மை உணவாகக் கருதி வாழ்கிருர்கள். இதற்கு முக்கிய காரணமாக இருப்பது தொண்டமானுறு வீரக்கழி ஆருகும்.

வீரக்கழி ஆறு தொண்டமானுறு என்னும் பெயருடன் வடமேற்கில் உள்ள தொண்டமானுறு கடலில் ஆரம்பித்து முப்பத்தியெட்டு மைல்தூரம் வடகிழக்கு நோக்கி நீண்டு வீரக்கழி ஆறு என்னும் பெயருடன் முடிவடைகிறது. இவ் [illegible] தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப்பகுதிக் கிராமங்களும் வடபகுதியில் வடமராட்சி கிழக்குப்பகுதியும் அமைந்துள்ளன. புவியியல் முறைப்படி தொண்டமானுறு வீரக்கழியாற்றின் தென்பகுதி மேடாகவும், வடபகுதி பணிவாகவும் அமைந்துள்ளது, மேலும் கிழக்கும் வடமேற்கும் பணிவாகவும், நடுப்பகுதி திடலாகவும் இருப்பது காணக் கிடக்கிறது. இவ்வாற்றின் மேட்டுப்பகுதியில் அந்தணத் திடலும் வேறும் சிறு சிறு திடல்களும் இருக்கின்றன. இத்திடல்கள் தொண்டமானுறு கடலில் இருந்து பதினைந்துமைல் தூரத்தில் கிழக்குப்பகுதியில் இருக்கின்றன.

### மழைவெள்ளப் பாதிப்பு

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, வடமராட்சி காரியாதிகாரி பிரிவுகளில் உள்ள கிராமங்களின் மழைநீர் வாய்க்கால் வழியாக இந்த ஆற்றை வந்தடைகின்றது. இவ்வாற்றில் வந்து சேரும் கழிவுநீர் வடமேற்குப்பக்கமும், வடகிழக்குப் பக்கமுமாகப் பாய்ந்து செல்கின்றது. வடமேற்கை நோக்கிச்செல்லும் நீர் தொண்டமானுற்றுக் கடலுடன் சங்கமமாகி விடுகிறது. வடகிழக்கை நோக்கிச் செல்லும் நீர் மண்டலாய்க்கழிவரை சென்று, அதன்பின்பு உள்ள நிலம் மேடாக இருப்பதனுல் ஆற்றின் வடக்குக் கரையால் எங்காவது கடலுடன் சேரலாமா என்று கருதி வடகரையில் உள்ள பள்ள நிலங்களின் வயற் புலங்களை பரந்து நிரப்பி அழித்துக்கொண்டு மீளவும் படிப்படியாக நீர்மட்டம் உயர தொண்டமானுற்றுக் கடலை வந்தடைகிறது. இந் நீர் மேடாக உள்ள அந்தணத்திடல், மற்றும் திடல்களை மேவியபின்புதான் கடலுக்குச் செல்லவேண்டியிருக்கிற இந்நீர்வடியத் தடையாக இருப்பவைகளில் குறுக்கு வீதிகளும்ஒரு காரணமாகும். கடலுள் பாயாமல்எஞ்சி இருக்கும் நீர் கடலுடன் கலக்க இடமின்றி தன்னிலையில் நின்று தானகவே வற்ற வேண்டும். இந்நீர் வடிவதற்குள் வடகிழக்குப்பகுதியை அடுத்துள்ள ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நன்செய் நிலங்கள். வருடாவருடம் அழிந்துவருகின்றன இதனுல் இங்குள்ள விவசாயிகள் என்னும் பெயர்மாறி வெள்ள அகதிகள் எனும் பட்ட நாமத்துடன் அரசினரின் வெள்ள நிவாரணத்தை எதிர்நோக்கி இருக்கவேண்டியுள்ளது

### மக்களின் வேண்டுகோள்

இதைப்பற்றி இப்பகுதி விவசாயிகள் தேசிய அரசின் பிரதிநிதிகளுக்கும் கமத்தொழில் இலாகாவினருக்கும் பலமுறை முறையிட்டும், கிழக்குப்பகுதியிலுள்ள நீரை எங்காவது கடலுக்குச் செல்ல வழிவகுத்துத் தமக்கு வாழ்வளிக்கும்படி கெஞ்சி நின்றும் இதுவரை எவ்வித பயனும் கிட்ட

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

## தலைப்புக்கு ஒரு விளக்கம்:

''ஆண்டவனுற் படைக்கப்பட்ட அத்தனை சீவன்களும் வாழ்க்கையென்ற சுவட்டிலே ஓடிச்சென்றுமுடிவிலே ஆண்டவனின் காலடியில் சங்கமிக்கின்றன'' இது சமயதத்துவம்.

ஆனுல் உயர்ந்த மலையில் ஊற்றெடுக்கும் நதிப்பெண் பிறந்த குறிஞ்சி நிலத்தில் ஊர்ந்து முல்லையில் தவழ்ந்து மருதத்தில் நடந்து நெய்தலில் விளங்கும் ஆழியிலே ஐக்கியமாகின்ருள். இது நிதர்சன உண்மை.

கடலும் கங்கையும் கலக்கின்ற இந்த இடத்தினையே சங்கமத்துறையென்பர். காவேரி கடலுடன் கலக்கின்ற பகுதியிலேதான் தமிழன் உயர்ந்த நாகரிகத்தினை உலகத்துக்கே விளக்கிய பண்டையநாளில் காவிரிப்பூம் பட்டினமென்ற பூம்புகார் நகரமிருந்தது.

கடலும் கங்கையும் கலக்கின்ற துறையிலே நீராடுவதனுல் தம் பாவங்களை நீக்கிப் புண்ணியத்தைப்பெறலாம் என்பதும் ஆன்மீகவாதிகளின் நம்பிக்கை. உப்பு நீரும், நன்நீரும் ஒன்றுபடும் துறையிலே குளிப்பதனுல் சருமவியாதிகள் நீங்கிவிடுகின்றன என்பது ஆயுள்வேத வைத்தியர்களின் அனுபவ உண்மை.

இப்படியொரு சங்கமத்துறையை வாசகர்களுக்கு சுட்டிக்காட்டினுல் அவர்களுக்கு புண்ணியம் கிட்டுமென்ருே சருமவியாதி சொஸ்தமாகுமென்ருே யான் கூறப்போவதில்லை சமூகத்தில் இன்று நம்முட் பலர் பாவிகளாகவும், நோயாளிகளுமாக இருப்பதைக் கண்கட்டுவித்தையினுல் மறைக்கமுடியுமா? இல்லை இங்கே நாம் சுட்டிக்காட்டும் சங்கமத்துறையில் நீங்கள் நீராடவேண்டாம். அவசரமாக ஓடிக் கொண்டிருக்கும் நமது புலன்கள் ஏதோ ஒரு துறையில் சங்கமிப்பதன் மூலம் நமக்கு முன்னும், பின்னும் நடைபெறுகின்றன வற்றை உணர்ந்து நிகழ்காலப் பிரச்னைகளிலிருந்து நம்மை ஒருசில நிமிடங்கள் மறந்துவிடலாமல்லவா?

## ஆனைகள் சுதந்திரமாக வீதியில் நடமாடும்:

''ஆனைமுகன் துணை'' யென்ற பதத்துடன் நமக்கு முந்தி வாழ்ந்தவர்கள் கடிதம் எழுதி வந்தார்கள். இந்த வழிகளையெல்லாம் நாம் மறந்து பலகாலமாகிவிட்டது. ஆனுல் இன்றைய அரசியலை உற்றுநோக்கும்போது ஆனைதான் நமக்குத் துணையாகும் என்று நான் சொன்னுல் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதன் கருத்தை ஆழமாகச்சிந்தித்தால் உண்மைபுலனுகும். அதற்கு அடிப்படையாக இந்த ஆனையுடன் தொடர்புடைய ஒரு செய்தியை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அண்மையில் வடக்குப்பகுதிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் ஆர். பிரேமதாசாவை நீங்கள் இதற்குள் மறந்திருக்கமாட்டீர்கள்.

சிரமதான இயக்கத்தின் மூலம் பல்லவராயன்கட்டில் மூன்றுமைல் நீளத்துக்கு வீதியொன்றை அமைத்திருந்தார்கள் அவ்வூர்மக்கள். அமைச்சர் அங்கு பேசிய போது மக்களால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வீதியில் விரைவில் இ. போ. ச. வண்டிகள் ஓடுவதற்கு ஒழுங்கு செய்வேன் என்ருர். அவர் ஒழுங்கு செய்தபின்னருங்கூட வீதியில் வண்டிகள் ஒழுங்காக ஓடுமோ? என்ற கேள்வியை இரகசியமாக வைத்துக்கொள்வோம். ஆயினும் அவ்வீதியில் மக்கள் போக்குவரத்து மட்டும் நடைபெருது. ஆனைகளும் நடமாடும் என்ருர் அமைச்சர். இது சிந்திக்கவேண்டிய ஒருகருத்தாகும்என்பது நம் முடிவு. ஆனைகள் வீதியில் நடமாடும் என்பதை வெறுமனே தனி அர்த்தத்தில் பொருள் கொள்ளமுடியுமா? தேசிய அரசாங்கத்தின் சின்னம் ஆனையல்லவா? அப்படியானுல் வடக்குப்பகுதியில் ஆனைகள் நிம்மதியாக வலம்வரும் என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் இப்படி அமைச்சர் குறிப்பிட்டிருப்பார்என்று ஒருவர் கருத்துத் தெரிவித்ததிலும் அர்த்தமிருக்கும்.

## ''வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் மானிடர் வேற்றுமையில்லை''

கறுப்பன் வெள்ளையன் என்ற வர்ணபேதம் மேற்குத்தேசங்களிலேதான் அடிபடும் சங்கதி. பொதுவாக ஆசியாவில்இந்தவிதபிரச்னை இல்லை. ஆசியக்காரர்களுள் கறுத்தவர், சிவத்தவர் கட்டையர், சப்பைமூக்கர் என்று பலரகத்தினர்உண்டு. ஆனுனும் இவர்கள் அனைவரும் மேற்கு நாட்டவரின் அகராதிப்படி கறுத்தவர் பட்டியலிலேதான் அடங்குவர்.

ஐ.நா.வில் விஜயலட்சுமி பண்டிட் இந்தியப்பிரதிநிதியாக இருந்தபோது மேற்கு நாட்டவர் ஒருவர் ''மேற்குத்தேசத்தவர்கள் யாபேரும் ஒரேமாதிரியாகஇருக்க, ஆசியாவில் வாழுகின்றவர்கள் ஒவ்வொரு தேசத்துக்கு ஒவ்வொரு மாதிரியாக இருக்கிருர்கள்'' என்று கிண்டலாகவே கேட்டார். அப்போது விஜயலட்சுமி பண்டிட் ''குதிரைகள் யாவும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. அவற்றில் பலவிதங்களுண்டு. ஆனுல் கழுதைகள் யாவுமே ஒரேமாதிரியாகவே உள்ளன என்று போடுபோட்டார்.

இப்படி இருக்க மேற்கு நாட்டுக்கே உரியதான நிறபேதம் பற்றிய வாதம் நமது நாட்டு ஆளும்மன்றத்திலும் தலைதூக்கியதை இங்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

இலங்கையில் எதற்கெடுத்தாலும் செத்தபாம்பை திருப்பித்திருப்பியடிப் பதுபோல தமிழர்களைச்சாடிக் கொண்டிருக்கும் தம்பதேனியா பிரதிநிதி திரு.ஆர். ஜி. சேனநாயகா வெள்ளை நிறத்தவர்களுக்கே உரிமையுடையதாக இந்த நாட்டில் நவீன வசதிகளுடைய ஹோட்டல்கள் இருக்கின்றன. அதற்குள் கறுத்தவர்கள் தங்க வசதி இருப்பதில்லை என்ருர். அதிக பணம்கொடுத்து மேற்படி ஹோட்டல்களில் எவருமே தங்கலாம் என்பது கனம் தம்பதேனியா பிரதிநிதிக்கு தெரியாமலில்லை. வெளிநாட்டுச் செலாவணியை வெள்ளையர்கள் மூலம் நாம் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுகின்றதையும், பணமிருந்தால் யாருமே செல்வதற்கு ஹோட்டல் க[illegible]லத்திறந்திருக்கின்றனவென் பதையும் கனம் அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன சுட்டிக்காட்டினுர். மேலும் பணமிருந்தால் நல்லஹொட்டல்களிற் தங்கலாம். இல்லாவிட்டால் தோசைக் கடையில் இருபத்தைந்து சதத்திற்குச் சாப்பிடலாம் என்ருர்

தம்பதேனியா பிரதிநிதி இதற்கு என்னபதில்சொல்ல முடியும்?

தோசைக்கடைகளை நடத்துபவர்கள் பெரும்பான்மையினர் தமிழர்கள்தான் என்பதை ஜே ஆர். உணர்ந்தே பதிலைக்கொடுத்திருக்கிருர்.

நாட்டை நம் கையில் கொடுத்துவிட்டு சிவனே என்று மூட்டை கட்டிக் கொண்டு சென்ற வெள்ளையர்களை வலுச்சண்டைக்கு இழுக்கும் கனம் பிரதிநிதிக்கு எங்கள் பாரதியார் பாடல் ஒன்றை இங்கே சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

''வண்ணங்கள் வேற்று
மைப்பட்டால்-இதில்
மானிடர் வேற்றுமை
யில்லை
எண்ணங்கள் செய்கைகள்
எல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல்
காண்பீர்''

பாவநாசமடைய அரசியல் [illegible] சங்கமத் துறையில் நீராடினுல் என்ன?

—கங்காபுத்திரன்.

# வட கிழக்கில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. ஆனுல் நாடாளுமன்றத்திலும் பகிரங்க மேடைகளிலும்மக்கள்மன்ற உறுப்பினர்கள்இவ்வாற்றின் ஆதிதொடக்கம் அந்தம் வரை ஒரு வாய்க்கால் வெட்டவேண்டுமென்று கோரிக் கோஷம் எழுப்பினர். அதுவும் பழங்கதையாக மாறிவிட்டது. அப்பேற்பட்ட ஒரு வாய்க்கால் தோண்டினுல் இவ்வாற்றில் உள்ள நீர் முழுவதையும் கடலுக்குப்பாய்ச்சிவிடலாம் என்பதில் ஐயமில்லை. இந்தப் பள்ளத்திலுள்ள நீரை மேட்டிற்கு ஊடாய்ச் செலுத்தவேண்டி இருப்பதனுல் பெருந்தொகை பணம் தேவைப்படும். எமதுதேசிய அரசின் நிதிநிலையில் இது நடக்கக்கூடிய காரியமாயில்லை.

இந்நீரை சமத்தொழில் இலாகா நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஒரு வாய்க்கால் தோண்டி கடலுக்குள் பாய்ச்ச வழிவகுக்கவேண்டும். இப்படிச்செய்வதினுல் இப்பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படாது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

பச்சிலைப்பள்ளிக்காரியாதியாகாரி பகுதியில், முள்ளியான் கிராமசேவையாளர் பிரிவில், தாளையடி மருதங்கேணிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி ஐந்துமைல் தூரத்தில் பொன்னன்கட்டு என்னுமோரிடமுண்டு அவ்விடத்தில் இருந்து பெருங்கடல் முக்கால்மைல் தொலைவில் இருக்கிறது. அவ்விடத்திலிருந்து பணிவான பரவல் வாய்க்காலொன்று கடலைநோக்கி சென்று கொண்டிருப்பதை கமத்தொழில் இலாகாவினர் நேரில் பார்வையிட்டால் காணக்கூடியதாகவிருக்கும். இவ்வாய்க்காலை ஆழமாக்கி சொற்பதூரத்திற்கு வடிகாலமைத்து துருசியும் ஒன்று அமைத்துவிட்டால்இவ்வாற்றுநீர் மீண்டும் வடமேற்கு நோக்கி வராமல் கடலுடன் கலந்து சங்கமம் ஆகிவிடும்; அல்லது;

பருத்தித்துறையில் இருந்து தாளையடியைநோக்கிச்செல்லும் பகிரங்கவீதியில் குடாரப்பு என்னும் கிராமத்தில் பதினுலாவது கட்டையிலிருந்து வடக்கு நோக்கி ஒரு வாய்க்கால் உள்ளது. இவ்வாய்க்காலை பல்லாண்டுகட்கு முன்னர் கிராமவாசிகள் சிரமதான முறையில் தோண்டியுள்ளனர். இதையும் அரசினர் பார்வையிட்டு தம்பொறுப்பில் எடுத்து ஒரு திட்டம் தயார்செய்து வாய்க்காலைத் தோண்டிவிட்டால்இப்பகுதி மக்களுக்கு விடிவுகாலம் ஏற்படும் என்பதுபுலனுகும்.

வெள்ளம் பள்ளத்தை நாடும் என்பது ஒரு முதுமொழி. இதற்கிணங்கப் பள்ளத்தை நாடியோடும். நீரை நான் கூறிய இரண்டு வழிகளில் ஒன்றின்மூலம் கடலுக்குள் பாய்ச்சிவிடலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

### நல்லதிட்டம் பயன்தரும்

கமத்தொழில் இலாகாவினரும், நீர்ப்பாசனப்பகுதியினரும் அவ்வப்பகுதி காரியாதிகாரிகளும், மக்கள் மன்ற உறுப்பினர்களும் தங்கள் கவனத்திற்கெடுத்துத் தகுந்தமுறையில் பரிசீலனைசெய்து நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கக்கூடியவிதத்தில் ஒரு திட்டத்தை அமுலாக்கி செயல்படச்செய்வது உகந்ததாகும். இத்திட்டத்தை அமுலாக்கும்போது இதற்கு ஒதுக்கப்படும் நிதியை கமத்தொழில் இலாகாவினர் தம் மேற்பார்வையில் உள்ளூர் வாசிகளைக் கூலிக்கமர்த்தி வாய்க்கால் தோண்டுதல் நன்று. கொந்தருத்து முறையில் கொடுப்பதினுல் பெரும் தொகைப்பணம் செலவாவது மாத்திரமல்ல உகந்த முறையில் வேலையும் நடைபெருது என்பதை அறைந்து கூறவிரும்புகிறேன்.

இத்திட்டம் வெற்றி பெறின் தேசிய அரசின் உணவு உற்பத்தித்திட்டத்தின்ஒரங்க வெற்றியாகஅது அமைவது மாத்திரமல்ல வடகிழக்கில் வாழும் இரண்டாயிரத்துஐநூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகளின் வயல் புலங்கள் நல்விளைவு பெறவும் தோட்டந்துரவுநீர்கள் நன்னீராகி உபஉணவுப் பயிர்கள் செய்வதற்கும் வசதி ஏற்படும். சுருங்கக் கூறின் வடமராட்சி கிழக்கில் விவசாயம் வளம்பெற வழிவகுக்கும்.

# சிந்திப்பு

## பலாமரங்கள் பகவானைப் பற்றின

400 ஆண்டுகளுக்குமுன்னர் வாழ்ந்த பூந்தானம் என்ற பக்தர் தினமும் பகவத் பாராயணஞ் செய்பவர். அவர் வீட்டு முற்றத்தில் இரு பலாமரங்கள் நின்றன.

ஒருநாள் வைகுந்த வர்ணனையைப் படித்துக்கொண்டிருந்த அடியார் அதனுள் ஐக்கியப்பட்டு இறைவனைக்காண ஆசை கொண்டார் ஆண்டவன் அருளால் அவரது தூலஉடல் பூமியிற்கிடக்க சூக்கும உடலுடன் ஏகினுர். வைகுந்தவாசலில் காவலாளர்கள் போன்றிருந்த இருவர் பூந்தானத்தை இறைவனின் சந்நிதிக்கு அழைத்துப்போகவே தாம் காத்திருப்பதாகக் கூறினர். அவர்களின் வரவேற்பு அடியாருக்கு ஆச்சரியமாக இருந்தது. காவலர்களிடம் தன்னைக் காத்திருக்கும் விஷயம் யாதென வினவினர். அப்போது அவர்கள் நாங்கள் இருவரும் உங்கள் இல்லத்தின் வாசலில் இரு பலாமரங்களாக நின்ருேம். தினமும் உங்கள் பாகவத பாராயணத்தைக் கேட்டதன் பேருக வைகுந்தம் வர அருள் கிடைத்தது. இரவு பெய்த மழையினுலும் காற்றினுலும் நாம் இன்று சாய்ந்து இங்கெய்தினேம். தங்கள் அருளாலேயே பகவானுக்குப் பணிசெய்யும் பாக்கியம் கிடைத்தது' என்றனர். பூந்தானத்தின் கண்கள் பனித்தன வைகுந்தத்தைப் பார்வையிட்டு மீண்டும் பூவுலகில் தூல உடலை அடைந்தார். அவர் வாசலில்நின்ற இருபலா மரங்களும் மழையினுல் சாய்ந்து கிடப்பதைக் கண்டார்.

(மூலம்: யோகவாழ்க்கைமுறை)

### யார் திருடன

''நீ ஒருவனைச் சுட்டுவிரலால் திருடன் என்று சுட்டிக்காட்டுகிறபோது ஏனைய உனது கைகளின் நான்கு விரல்களும் உன்னைத் திருடன் என்று சொல்லாமற் சொல்லுவதை உற்றுணர்ந்துபார்!''

பொன்மொழி

### திருக்குறளுக்கும் ஒரு மனிதன்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னர் வாழ்ந்த வள்ளுவன் மனிதகுலத்தை உய்விக்கச்செய்த ஒரு மணிவாக்கு. இக்குறளின் தாற்பரியத்துக்குச் சரியாக இருபதாம் நூற்ருண்டில் ஒருமனிதன் வாழ்ந்தான். மக்களுக்காகச் சேவைசெய்த அம்மனிதன் மக்களுள் அமரனுனுன். அந்த மனிதனே மகாத்மா காந்திஜீ அவரது நூற்ருண்டுவிழாவில் அவரை நினைத்தால் வள்ளுவன் காட்டிய இலட்சியம் எமக்குப் புலனுகும்.

# நீரில் நீந்தும் பஸ்

15 அடி நீளம், 9 அடி அகலத்திற்குச் சாதாரண பஸ்போன்ற ஒரு வாகனம் ஆறு, ஏரிகளில் படகுபோல பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக வீதிகளில் போய்க்கொண்டிருக்கும் இந்த வாகனம் ஆறு, ஏரி குறுக்கிடும் போது நீந்தத் தொடங்குகிறது. தரையில் 45 மைல் வேகத்திலும் தண்ணீரில் 35 மைல் வேகத்திலும் ஓடும் இந்த 'ஹோவர் கிராப்ட்' மின்ரகவாகனம் பிரிட்டனில் உருவாக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நைல் நதியில் 4000 மைல்கள் இதன் மூலம் திருப்தியாகப்பயணம் செய்திருக்கின்றனர்.

இப்போது அமெரிக்கா, ஒல்லாந்து, சுவீடன், மெச்சிக்கோ, கிழக்கு ஜெர்மனி, கென்யா ஆகிய நாடுகளில் இது உபயோகமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலாப் பயணம் போவோம்!

—"பாண்டியூரன்"—

வெண்ணிலாப் பயணம் போவோம்
வெளிக்கிடு பாட்டி; இன்று
விண்ணர்கள் விஞ்ஞா னத்தின்
விந்தைகள் புரிகின் ருர்கள்!
கண்ணெடு காண்பா யந்தக்
காட்சிகள்! கலிகா லத்தில்
புண்ணியம் செய்துள் ளாய்நீ
புதுமைகள் காண்ப தற்கே.

வெற்றிலைக் கொழுந்து கிள்ளும்
வேளையிற் பொடிச்சி நீயோர்
பற்றையுட் பயந்து ஒட்டப்
பறந்ததோர் கப்ப லென்பாய்!
ஒற்றைவால் வாணம் போல
உள்ளது கப்ப லின்று!
முற்றிலும் புதிய வேகம்
மூவரே யமர்தல் கூடும்!

வெற்றிலை பாக்கு வேண்டில்
வெட்டிவை; விருந்தங் கில்லை!
இற்றைநாள் தொடங்கியின்னும்
எட்டுநாட் பயணம்! பாட்டி
மற்றவர் கவலை யெல்லாம்
மறந்திடு, வடிவா யிந்தச்
சுற்றுலா வுடையைப் போடு
'சுவிச்சுகள்' கவனம் கைகால்,

வல்லுகம் இரண்டு மூன்று
மறந்திடா தெடுத்துக் கொள்ளு;
நல்லகல் மண்ணைக் கண்டால்
நாமதைக் கொணர்தல் வேண்டும்.
வெல்லையின் கீழ் மட் பாண்டம்
மினுக்கிடும் சின்னப்பிள்ளை............
செல்லம்மா..."' அனைவ ருக்கும்
சேர்த்திடிற் பயனுண் டாகும்.

சோக்குத்தான் பயணமென்று
சொல்கிறுர் சென்று வந்தோர்!
மூக்கணை குத்தி யுள்ள
முத்தரின் காளைபோலப்
போக்கிலும் வரவிலும் நாம்
பொறுப்புடன் நடக்கவேண்டும்!
ஊக்கமே உயர்ச்சி யென்பாய்
ஓமோமோம் ஒப்பு கின்றேன்!

கடவுளின் வயதைக் கூடக்
கணித்திடும் வல்லு நர்கள்
குடதிசைக் காரர், நம்மைக்
கொல்வரோ...? பரிகா ரிக்கு
சுடலையைப் பற்றி யென்ன
சொப்பனம்? சொன்னுற் போல
அட! நிலாப் பொங்கல் செய்வோம்
அரிசியும் அளந்து கட்டு.

தேயுமுன் நிலவைக் காலால்
தீண்டுதல் பெருமை; பாரில்
போயறி யாத மூலை...
பிறகு நாம் பிறந்து காண்போம்,
நாயெனச் சுட்டு வீழ்ந்த
நல்லவர் கெனடி லிங்கன்
தாயென உலகம் போற்றத்
தக்கவர் நிலவில் இல்லை!

நிலவினைக் காட்டியூட்ட
நீகதை சொல்வாய் அந்த
நிலவிலே அமெரிக் காவின்
நீள்கொடி நிற்கக் காண்பாய்!
உலகமோர் உருண்டை யென்ற
உண்மையை வயிரர் ஒப்பார்
பலகதை வேண்டாம் பாட்டி
பயணத்தைத் தொடங்கு போவோம்.

ஆக்கினை இல்லைப் பாட்டி
அறிவியல்; அடுத்த வீட்டுப்
பாக்கியன் 'இங்கு நின்றே
பார்க்கட்டும் பணமில்லாதான்.
'வேக்கரி' பண்டாகூட
வெளிக்கிடார்; வெளிக்கிட் டாலோ
நாக்குவாய் காய்ந்து நாலு
நாளிலே கடைகள் மூடும்!

ஊரவர் உண்டா லென்ன
உறங்கினு லென்ன வீணிற்
காரணம் கேட்டால் நம்ம
கற்பனை கதியென் ருகும்
ஆர்பணம் நட்டம்? யாவும்
அன்னியர் ஆதா யந்தான்!
பூரண தெம்பி ேனுடும்
புறப்படு பொழுதா யிற்றே.

## சந்திரப் பயணம்-6

# அப்பலோ இவ்வாறுதான் புறப்படும்



சட்டர்ன்—5

36 மாடிகளைக்கொண்ட ஒரு கோபுரம் போன்ற 3,000 டன் பாரமுள்ள பறக்கும் வாகனம் செங்குத்தாக நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதுதான் அப்பலோ கலமும் அதனை விண்ணுலகுக்கு எடுத்துச் செல்லும் சட்டர்ன் 5 கணையும்.

இதன் உச்சிமுடியில் பொருத்தப்பட்டிருக்கும் பகுதி பிரயாணத்தின் ஆரம்பக் கட்டத்தில் சங்கடம் ஏற்பட்டால் வீரர்கள் பத்திரமாகத் தப்பி பூமிக்குத் திரும்புவதற்கான தற்காப்புக்கூடம் இதில் பென்சில் போன்ற அமைப்பைக் கொண்ட 'ரொக்கட்' பொருத்தப்பட்டிருக்கின்றது. அப்பலோ கலம் செலுத்தப்பட்ட ஆரம்பக்கட்டத்தில் ஆபத்து ஏற்படுமானுல் இந்த ரொக்கட் இயங்கி வீரர்களுடன் கூடிய கட்டளைக்கலத்தை மற்றப் பகுதியிலிருந்து பிரித்துக் கொண்டு முன்னேக்கிப் பாய்ந்துவிடும். அதன்பின் வீரர்கள் 'பாரசூட்' குடைகள்மூலம் பூமியில் இறங்குவார்கள். ஆனல் இதுவரை இம்மாதிரி சம்பவம் இடம் பெற்றதில்லை.

"சந்திரனை ஆராயும் இந்த மாபெரும் தீரமிக்க பணியில் எங்களோடு சேர்ந்துகொள்ளும்படி உங்களையும் அழைக்கிறேன்" என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் உலகமக்களை அறைகூவி அழைத்தார்.

ஆம் அந்தத் தீரச்செயலை புரிந்தவர்கள் அமெரிக்கர்கள்தான், என்ருலும் உலகமக்கள் அனைவருக்குமே அதில் பங்குண்டு; பெருமையுண்டு. இந்த நூற்றுண்டில் வாழக்கொடுத்து வைத்தமைக்காக ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் பாராட்டிக்கொள்ளலாம்.

— பேரு

அடுத்த மூன்று பகுதிகளும் கட்டளைக்கலம், (Command Module) சேவைக் கலம்(Service Module) சந்திரக்கலம் (Lunar Module) என்பவைகளைக் கொண்டவையாகும்.

## ஆரம்பக் கட்டத்தில் ஆபத்து நேர்ந்தால்?

**கட்டளைக்கலம்**

இங்குதான் வீரர்கள் பிரயாணத்தின்போது தங்கியிருந்து தமக்குரிய பணிகளைச் செய்வார்கள்.

**சேவைக்கலம்**

இங்குகலத்தைசெலுத்தும் கருவிகளும் மின்சக்தி, செயற்கை வெட்பதட்ப சூழ்நிலைகளை உருவாக்கும் பகுதிகளும் அடங்கியிருக்கும்.

**சந்திரக்கலம்**

இதுதான் நிலாவாகனம் கட்டளைக்கலத்திலிருக்கும் மூன்று பிரயாணிகளில் இருவர் சந்திரத்தரைக்கு இந்த கலத்தில் ஏறிச்செல்வார்கள்.

அடுத்துள்ள நான்கு பகுதிகளும் கலத்தை விண்ணில் செலுத்தும் கருவிகளையும் சாதனங்களையும் உள்ளடக்கியவை.

அப்பலோ கலத்தில் எட்டுப்பகுதிகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒன்றன்மீது ஒன்ருக இணைத்துப் பொருத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளும் அவைகளில் உள்ள ஆயிரக்கணக்கான சிறு அம்சங்களும் கலம் செலுத்தப்படுவதற்குமுன் மாதக்கணக்காக மீண்டும் மீண்டும் பரிசோதிக்கப்படுகின்றன.

இனி அப்பலோ எங்ஙனம் புறப்படுகிறது என்பதைக் கவனிப்பாம்:

கலம் கடைசி நிமிடத்திலும் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டபின்னர் தானே இயங்கும் கருவியொன்றும் அதனை மிகக் கவனமாகப் பரிசோதிக்கின்றது. இந்தச் சோதனைகள் எல்லாம் முடிந்து வீரர்கள் மூவரும் கலத்தின் கட்டளைப்பேழைக்குள் புகுந்து பிரயாணத்திற்குத் தயாரானதும் கலத்தின் அடியிலுள்ள முதல் கட்ட ஐந்து எஞ்சின்களும் எரியத்தொடங்குகின்றன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருவிகளில் மிகவும் சக்திமிக்கவையென்று கருதப்படும் இவை 3,400,000 கிலோகிராம் உதைப்புச்சக்தியைப் பெறுகிறது.

எஞ்சின்கள் எரியத்தொடங்கி மூச்செடுக்கும் நேரத்துக்குள் 'ரொக்கட்' நெருப்பு ஜுவாலையைக் கக்கிக் கொண்டு மேலே கிளம்புகிறது. 2,900,000 கிலோகிராமுக்கும் அதிக எடையுள்ள கலம் மேலே கிளம்பிய பத்து வினடிக்குள் 136,000 கிலோகிராம் எடை குறைந்துவிடுன்றது பிரமாண்டமான அந்த எஞ்சின்கள் வினடிக்கு 13,600 கிலோகிராம் வீதம் எரிபொருளை பயன்படுத்துவதே இதற்குக் காரணம். ஒவ்வொரு வினடியும் எடையைக் குறைத்தபடியே காற்றின் வேகத்தையும் மிஞ்சி கலம் பறக்கத் தொடங்கி விடுகின்றது. அதுவரை வீரர்களின் காதுகளைத் துளைப்பதாகவிருந்த எஞ்சின்களின் இரைச்சல் அடங்கி அமைதி ஏற்படுகின்றது.

இரண்டரை நிமிடங்களில் கலத்தை சுமார் 64 கிலோ மீட்டர் உயரத்துக்குத்தள்ளி அதன் வேகத்தையும் மணிக்கு 8,850 கிலோமீட்டராக அதிகரிக்கச் செய்தபின் எரிந்துகொண்டிருந்த பிற்பகுதி (முதல் கட்டம்) கலத்திலிருந்து பிரிந்து அட்லாண்டிக் கடலில் வீழ்ந்துவிடுகின்றது.

இதனல் ஏவுதளத்தில் இருந்த பாரத்தில் 160 வினடிகளில் முக்கால்பகுதியை கலம் இழந்துவிடுகின்றது

**இரண்டாம் கட்டம்**

முதல் கட்டம் பிரிந்ததும் இரண்டாம் கட்ட எஞ்சின்கள் ஐந்தும் எரியத்தொடங்குகின்றன. இவை 500,000 கிலோகிராம் உதைப்புச் சக்தியைப் பெற்று கலத்தை அட்லாந்திக் சமுத்திரத்தின் மேலாக ஆபிரிக்காவின் திசையில் பவ்வியமாகத் திருப்பிச் செலுத்துகின்றன. இந்தக் கட்டத்தில் கலத்தில் உள்ள கருவிகள் கலம் எந்த இடத்தில் எந்தத் திசையில் இக்கின்றது என்பதை அனுமானிக்கின்றன. திசையில் திருத்தம் தேவையெனில் மின்விசையொன்று இயங்கி எரியும் ஐந்து எஞ்சின்களில் எதன் உதைப்புச் சக்தியையாவது மாற்றி பாதையைச் சரிசெய்துவிடுகின்றது. கலம் 96 கிலோமீட்டர் உயரத்தைக் கடக்கும்பொழுது உச்சியிலுள்ள தற்காப்பு கூடம் இனி தேவைப்படாதென்பதால் ஒருவிசை இயக்கி அதனைக் கலத்திலின்று பிரித்துவிடுகிறது.

ஆறு நிமிடங்களுக்கு மேல் 2-ம் கட்ட எஞ்சின்கள் எரிந்து கலத்தை சுமார் 183 கிலோமீட்டர் உயரத்துக்கு கொண்டுசென்றுவிடுகின்றன. இரண்டாம் கட்டத்தின் பணிமுடிந்ததும் அது பிரிந்து பூமியை நோக்கிவிழுந்து விடுகின்றது.

**மூன்ரும் கட்டம்**

மூன்ரும் கட்ட எஞ்சின்கள் இயங்கத் தொடங்கி பூமியைச் சுற்றிய பாதையில் கலத்தைச் செலுத்துகின்றன. இந்த எஞ்சின்கள் சுமார் இரண்டு நிமிடங்களும் 45 வினடிகளும் எரிகின்றன. இதேசமயம் வழிகாட்டும் கருவிகள் இயங்கி பூமியைச் சுற்றிய சரியான பாதையில் (ஊசியின் காதில் நூலைச் செலுத்துவதுபோல) கலத்தை செலுத்திவிட்டு, எரியும் எஞ்சின்களையும் அணைத்துவிடுகின்றன. முன்

னைய கட்டங்களைப்
மூன்ரும்கட்ட எஞ்
கழன்று விழுந்துவிடு
அதன் ஒருபகுதி ம
எரியும். அதற்கு வே
கிய பணியொன்றும்
பதால் சக்தியைக்
காமல் தணிந்துகொ
றன.

இந்த நிலைமையில்
எஞ்சின் எ
இயங்காமலே பூமியை
வருகின்றது. இப்
அதன் வேகம் ஏ
மணிக்கு 28,000 கி
டர்; இதுவரை 1
டங்களே கழிந்தி
இந்த 12 நிமிடங்
வெறும் பிரயாணிக
இருந்த விண்வெளி
தமக்குரிய பணிகளை
வதற்கு ஆரம்பிக்கி
கலத்தில் எல்லாக் க
யும் சாதனங்களையும்
த்து அண்டவெளியில்
றிப் பாய்வதற்கு ஆ
செய்கிருர்கள். இவ
செய்யும் சோதனைக
க்கைகள்மூலம் ஹ
லுள்ள விஞ்ஞா
ஆராய்கிருர்கள்.
பலபாகங் களிலு
ஆய்வு நிலையங்களி
கலத்தின் பாதையை
மானித்துக்கொண்டி
விஞ்ஞானிகளும் ஹ
மத்திய நிலையத்துக்கு
கிரகித்த தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

புகிருர்கள். இந்த பரிசோதனைக்காக கலம் பூமியைச்சுற்றிவந்துகொண்டு இருகின்றது.

அதன்பின் சந்திரனைநோக்கிய பாதையில் கலத்தைச் செலுத்துவதற்கு ஆயத்தம் செய்யபபடுகின்றது இதற்கு மூன்று அம்சங்கள முக்கியம். ஒன்று, கலத்தின் வேகம் கூட வேணடும், இரணடு, கலம் சரியான கோணத்தில் கிள

## தான்

ம்பவேண்டும். மூன்று, இந்த இரண்டு அம்சங்களும் குறிக்கபபட்ட வினடிக்குள் நிகழ்ந்துமுடியவேண்டும்.

— வளரும்

ட்டங்களைப் போல்
கட்ட எஞ்சின்கள்
விழுந்துவிடுவதில்லை;
ஒருபகுதி மட்டுமே
அதற்கு வேறு முக்
னியொன்றும் இருப்
சக்தியைக் குறைக்
தணிந்துகொள்கின்

நிலைமையில் கலம்
ன் எதுவும்
மலே பூமியைவலம்
றது. இப்பொழுது
வேகம் ஏறத்தாழ
28,000 கிலோமீட்
இதுவரை 12 நிமி
கழிந்திருக்கும்.
12 நிமிடங்களிலும்
பிரயாணிகளாகவே
விண்வெளிவீரர்கள்
ய பணிகளைச் செய்
ஆரம்பிக்கிருர்கள்.
எல்லாக் கருவிகளை
தனங்களையும் சோதி
ண்டவெளியில் எகி
ய்வதற்கு ஆயத்தம்
ர்கள். இவர்கள்
சோதனைகளை சமி
மூலம் ஹுஸ்டனி
விஞ்ஞானிகளும்
ருர்கள். உலகின்
ங்களிலுமுள்ள
நிலையங்களிலிருந்து
பாதையை அனு
துக்கொண்டிருக்கும்
னிகளும் ஹுஸ்டன்
நிலையத்துக்கு தூாம்
ககவலகளை அனுப்

## குட்டைப் பாவாடைகள் மறைகின்றன

'மினி-ஸ்கர்ட்' என்று அழைக்கப்படும் குட்டைப் பாவாடைகள் இப்பொழுது மறையத்தொடங்கி விட்டன. அவற்றுக்குப் பதிலாக நீளப் பாவாடைகளின் ஃபாஷன் துவங்கிவிட்டது. இன்றையநீளப்பாவாடைகள் எவ்வளவுதூரம் தரையைத்தொடும் அல்லது பெருக்கித்தள்ளும்' என்று கூறமுடியவில்லை. ஆனல் அவை ரஷ்யச்சக்கரவர்த்தினி இரண்டாம் எகதரிஞவின் பாவாடைகளை மிஞ்சமுடியாது. அந்த அம்மையார் தனது முடிசூட்டு விழாவின் போது அணிந்திருந்த பாவாடையில் 75 மீட்டர் வால் இருந்தது. இதை 50வேலைக்காரர் சுமந்து சென்றனர்.

இன்றைய 'புதுமைப் பெண்' இந்தச் 'சாதனை'யைத் தோற்கடிக்க முயலலாம். ஆனல், இந்த அணுயுகத்தில் 50 வேலைக்காரர்கள் கிடைப்பார்களா என்பதைப்பற்றி அவர் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.


# ஆழ் கடலில் ஓர் அதிசய மாளிகை

இதுதான் பிரிட்டனின் புதிய கப்பலான ''குயின் எலிசபெத் 2.'' இது உலகத்திலேயே அதிநவீன கப்பல் எனும் புகழைச் சம்பாதித்துள்ளது. அலை அடிக்கும் ஆழ் கடலில் ஆடாது, அசையாது மிதந்துசெலலக்கூடியது.

பிரபல பிரிட்டிஷ் கப்பல் நிர்மாணிக்கும்நிறுவனமான 'கொஞட' கம்பனியாரின் இக்கப்பல் உட்புறம் அழகு ததும்பும் அலங்கார ஜோடனைகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் உடற்பகுதி அலுமினியத்திஞலானது. இதன்மூலம் கப்பலின் எடையைக் குறைத்து கப்பலின் மேற்பகுதியிலும் அறைகளை அமைத்திருக்கிருர்கள். இக்கப்பலிலுள்ள வசதிகள்போன்றுவேறெந்த நாட்டுக் கப்பல்களிலும் காணமுடியாது என இதன் உற்பத்தியாளர்கள் கூறுகிருர்கள்.

இக்கப்பல் ஒரு பெரிய மாளிகை போன்ற தோற்றமுடையது. இதில் 13 அடுக்கு மாடிகள் இருக்கின்றன. கீழுள்ள 5 அடுக்களில் கப்பல் இயக்குவதற்கான சாதனங்கள், மாலுமிகள், மற்றும் சிப்பந்திகள் தங்குவதற்கான அறைகள் உண்டு. அதற்கடுத்த ஐந்து அடுக்குகள் பிரயாணிகளுக்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ராட்ச கப்பல் 963 அடி நீளமும், 105 அடி அகலமும், 65,000 தொன் எடையுமுடையது. 25,000,000 பவுண்டுகள் பெறுமதியான இக்கப்பல் செளகரியமான, உல்லாசமானபிரயாணத்தை அளிக்க வல்லது. இதில் 2,025 பிரயாணிகள் வசதியாக பிரயாணம் செய்யலாம். 1968 டிசம்பர் 10-ம் திகதி பரிசோதனைப் பிரயாணத்தை மேற்கொண்ட இக்கப்பல் 1967 ஜனவரி 10-ம் திகதி அத்திலாந்திச் சமுத்திரத்திஞடாக தனது கன்னிப் பிரயாணத்தை ஆரம்பித்தது.




நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும்
அறவே ஒழிக்க உபயோகியுங்கள்


'என்றெக்ஸ்' 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்




நெற் பயிரைத்தாக்கும் கிருமிப் பீடைகள் பல உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை கிருமி நாசினி உயர்ந்த விலைகளில் கிடைக்கின்றது. இவையனைத்தும் இவ்வுயர் விலைகளில் தனித் தனியாகச் செய்ய வல்லதை ஒரே முறையில் சிக்கனமாகச் செய்ய வல்லதே ''என்றெக்ஸ் 20'' ''என்றெக்ஸ் 20'' இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல்வேறு பாகங்களிலும் வெற்றிகரமாகப் பாவிக்கப் படுகிறது. தற்பொழுது, நெற்கிருமிப் பீடைகளுக்கு மட்டுமின்றி, புகையிலை, பருத்தி, காய்கறி வகைகளைத் தாக்கும் கிருமிப் பீடைகளையும் உடன் அழிக்கக் கைதேர்ந்ததென நிருபிக்கப்பட்டு, உங்களுக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. நெற்பயிர் 10-14 நாளய பருவத்திலிருக்கையில் முதன் முறையாகத் தெளிப்பின் பயிர்கள் முழுப்பாதுகாப்பு பெறும். பின்னர் மாதத்திற்கொருறை பாவிப்பின் பீடையற்ற செழிப்பான பயிர் பெறுவீர்கள். நெற்பயிர், புகையிலை, பருத்தி, காய்கறிவகையின் கிருமிப் பீடையழிப்பிற்கு 1 திரவ அவுன்ஸ் ''என்றெக்ஸ் 20''. உடன் 2 கலன் நீர் கலந்து 32-40 கலன் கொண்ட இத்திரவத்தை ஒவ்வொரு ஏக்கருக்கும் பாவிக்க.

பெறவும் பீடையற்ற நற்தாவரங்களுக்கும் ஏக்கருக்கு ரூ. 9/- சிக்கனமான 'என்றெக்ஸ் 20' மட்டுமே.




ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நடிகர்திலகம்' 'வீரதிலக'மாகிருர்!

## விளையாட்டுப்பிள்ளை படத்தில் வீரசாகசம்!!

'பிறவி நடிகர்' நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 'வீரதிலக'மாகிருர்! ஜெமினியின் ஈஸ்ட்மன் கலர் 'விளையாட்டுப்பிள்ளை' படத்தில் நடிகர்திலகம் சிவாஜி கணேசன் முத்தையா என்னும் புஜபல பராக்கிரமம் பொருந்திய வீரனுக நடிக்கிருர்.

அவர் காளையோடு சண்டைசெய்து வெற்றி கொள்ளும் காட்சி சமீபத்தில் ஜெமினி ஸ்ருடியோவில் படமாக்கப்பட்டது. அத்துடன் வெகுண்ட யானையை அவர் அடக்கும் மயிர்சிலிர்க்கும் காட்சியும் படமாக்கப்பட்டது.

மருதூர்மன்னருக்கு மாலையிடுவதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட அந்த யானை, விழாவில், கூட்டத்தை கண்டு, வெகுண்டு ஓடும் பொழுது அதைக்கண்ணுற்ற சிவாஜி ஓடிச்சென்று அந்த யானையை அடக்குகிருர். இந்த வீரசாதனையைப் பாராட்டி மன்னர் 'வீரதிலகம்' என்னும் பட்டத்தைக் கொடுக்கிருர்.

மருதூர் மன்னனுக 'பழுத்த நடிகர்' டி. எஸ். பாலையாவும், அவரது மகளாக காஞ்சனுவும் நடிக்கின்றனர்.

சிவாஜி மனைவியாக நடிப்புச்செல்வி பத்மினி நடிக்கிருக.

கொத்தமங்கலம்சுப்புவின் ''ராவ்பகதூர் சிங்காரம்'' என்ற நாவலைத் தழுவி எடுக்கப்படும் இப்படத்திற்கான கதையை காலஞ்சென்ற ஜெமினி வாசன் எழுதியுள்ளார்.



வசனம், டைரக்ஷன் ஏ. பி. நாகராஜன். இசை கே. வி. மகாதேவனுடையது.

### நான் தமிழன்

''என்னை எல்லோரும் தெலுங்கு நடிகர் என்று நினைக்கிருர்களே, நான் பச்சைத்தமிழன். பிறந்தது பெரியகுளம். தாய்மொழி தமிழ். கொஞ்சநாள் விஜயவாடாவில் வளர்ந்தேன். அதைவைத்து என்னை தெலுங்குநடிகர் என்று முடிவு கட்டவேண்டாம்'' என்று வருத்தத்துடன் கூறுகிருர். வில்லவன் நடிகர் எஸ். வி. ராமதாஸ்.

### 'ஐடியா' திலகம்

கவிஞர் வாலிக்கு அவரது மனைவி (முன்னுள் நடிகை) ரமணதிலகம், கணவர் கவிதை புனைகையில் சில நேரங்களில் அருமையான ஐடியாக் கொடுப்பது உண்டாம்! அத்தகைய பாடல்கள் பிரமாதமாக 'ஹிட்' ஆகி அப்ளாஸை அள்ளியுள்ளதாம்.

## ''எம். ஜி. ஆர். பண்பாளர்; கொள்கைக்காக வாழ்பவர்''



நடிகர் எம். ஜி. ஆரை நேரில் சந்தித்து அவரது நல்ல பண்புகளை அறிந்த அவரது ஈழத்து அபிமானி ஒருவர் மிகவும் கவலையுடன் இதனை என்னிடம் கூறினுர்.

மலேஷியா நடிகர்ஒருவரை தனது சத்தியா ஸ்ருடியோவுக்குள்ளிலிருந்து வெளியே போகும்படி விரட்டியதாக அடிபடும் செய்தியைக்குறிப்பிட்டு அந்தச்செய்தியில் ஒரு சிறிதளவாவது உண்மையிருக்கமாட்டாதென்றும் அவரைநன்கு உணர்ந்து புரிந்துகொண்டவர்கள் இதனையுணருவார்கள் என்றும் கூறினுர்.

''ஏழைகளென்ருல் ஆயிரம் ஆயிரமாக பணத்தை அள்ளி வழங்கும் இருபதாம் நூற்ருண்டு பாரிவள்ளல் அவர்; கொள்கைக்காக வாழும் லட்சியவாதி அவர்; அவர் இன்னெருநடிகரை தன் நண்பராக மதிப்பவர். அவரைப்பற்றி. அந்தப்பண்பாளனைப் பற்றி தவருக யாரோ கதைகட்டிவிட்டார்கள்'' என்று அந்த எம். ஜி. ஆர். அன்பர் சொன்னுர்.

''நடிகர்களில் எம். ஜி. ஆர். போன்ற தங்கமானவர்கள் யாரும் கிடையாது. அவர் குணத்தில் குன்று. ஆனுல் அவரைப்பற்றி தவருன அபிப்பிராயத்தை சிலர் கிளப்பிவிடப்பார்க்கிருர்கள். வெளிநாட்டுக்காரர்களென்ருல் வேண்டிய உதவிகளைச்செய்து அனுப்புவார். அவரது ஸ்ருடியோவுக்குள் சென்ருல் அன்பாகப்பேசி அரவணைத்து, ஸ்ருடியோவைச் சுற்றிக் காட்ட வைத்தே அனுப்புவார். அவர் ஒரு பண்பாளர்.''

—'பாமி'

## பலதும் பத்தும்

### தெய்வமகன் தெலுங்கில்

ஒஸ்கார்விருதுக்காகஇந்தியாவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவாஜி கணேசன் நடித்த ''தெய்வமகன்'' படத்தை தெலுங்கில் தயாரிக்கிருர்கள். நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக பிரபல தெலுங்குப் பட நடிகரும் ஆட்சிமன்ற உறுப்பினருமான ஜக்கய்யா குரல் கொடுக்கிருர்.

### பாட்டில் பதில்சொல்லும் மனோரமா

எதற்கெடுத்தாலும் பாட்டுப்பாடியே பதில் சொல்லுகிருர் மனோரமா. இதனைல் அவர்கணவன் (சோ) மனமுடைந்து கடலில் விழுந்து தற்கொலைசெய்யப் போகிருர். இச்சுவையான காட்சி செந்தூர் பிலிம்சாரின் ''தரிசனம்'' படத்தில் இடம்பெறுகிறது.

### ஜெயலலிதாவுக்கு தாயார் யோசனை

ஜெயலலிதா வீட்டுக்கு வேலை கேட்டுவரும் வாலிபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருக்கிறது. இதனுல் 'வேலை காலி இல்லை' என்ற அறிவிப்பு பலகையைத் தொங்கவிடலாமா என்று ஜெயலலிதாவின் அம்மா. ஒரு காலத்துக் கவர்ச்சி நடிகையான சந்தியா யோசித்துவருகிருர்.



## திருவையாறு உற்சவத்தில் நம்மவர் பாடினுர்

பொன்னலையைச் சேர்ந்த செல்வி. பிரேமாவதிவைரவநாதன் திருவையாற்றில் நடந்த தியாகராஜ உற்சவத்தில் (27-1-70) சங்கீதக் கச்சேரி நிகழ்த்தி, பலரது பாராட்டையும் பெற்ருர். இவர் சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரியில் 'டிப்பிளோமா' வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிருர்.

இவர் இலங்கையில் பொன்னலை சங்கீதபூஷணம் க. கணபதிப்பிள்ளையிடம் சில வருடங்கள் சங்கீதம் பயின்றபின் இந்தியா சென்று தஞ்சாவூர் எம். தியாகராஜன் அவர்களின் சிஷ்யையாகவிருந்து கல்வி பயில்கிருர். செல்வி பிரேமாவதி சென்ற வருடம் இலங்கை தியாகராஜசமாசத்தினுல் கொழும்பில் நடாத்தப்பெற்ற சங்கீதப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

''பா''





# மனோகருக்கு 'நாடகக்காவலர்'!

## எம். ஜி. ஆர். பட்டம் சூட்டினுர்

இலங்கேஸ்வரன் மனோகருக்கு 'நாடகக் காவலர்' என்ற பட்டத்தை புரட்சி நடிகர் எம். ஆர். சூட்டினுர்.

திருவல்லிக்கேணி எம். கே. தியாகராஜ பாகவதர் கலாமன்றத்தில் தமிழ் நாடக மறுமலர்ச்சி விழா நடைபெற்றது இதையொட்டி நடிகர் மனோகரின் 'இலங்கேஸ்வரன்', 'சாணக்கிய சபதம்', 'துரோணர்', 'ஆட்சிபீடம்' முதலிய நாடகங்கள் ஏழுநாட்கள் நடந்தன. இறுதிநாள் விழாவில் மனோகருக்கு பாராட்டு விழா நடந்தது.

எம். ஜி. ஆர். விழாவுக்கு தலைமை தாங்கினுர். மனோகருக்கு எம். ஜி. ஆர். பொன்னுடை போர்த்தி 'நாடகக்காவலர்' என்றபட்டத்தைச் சூட்டினுர்.



சித்தன்கேணி கலைநகர் நேருஜி நாடக மன்றத்தினரின் 18வது தயாரிப்பான 'பரிசு' என்னும் நாடகத்தில் ஆசிரியர் திரு. நா. க. தங்கரத்தினமும் கலாரஞ்சனி செல்வி லலிதா இராசையாவும் தோன்றும் ஒரு காதற் காட்சி.

### 'சூடான ரச' ஜானகி!

சௌகார் ஜானகி நடிப்பில்மட்டுமல்ல, சமையலிலும் சூரப்புலி! அவர் சூடான ரசம் வைத்துக் கொடுத்தால் சப்பு கொட்டி குடிக்காத வாய் இல்லை எனலாம்!

### சுவையான பேட்டி

கைதடி பழனிமலையின் சுவையான பேட்டி அடுத்த வார 'கலையரங்க'த்தில் வெளியாகும்.



### 'தேவி'க்குப் பிடித்த இருவர்!

கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி யாரைமறந்தாலும் பட உலகில் இருவரை எப்போதும், எங்குபோனுலும் மறப்பதில்லை. ஒருவர்: விஜயகுமாரி; இன்னெருவர் 'சரோ'வின் மனசுக்குப் பிடித்த 'குட்டி' பத்மினி! (இப்போது குமாரியாகிவிட்டார்.)

### நாகேஷ் எமனுனுர்!

நாகேஷிடம் சச்சுவின் தாயார் அடிக்கடி பணம் கேட்பார். அவருடைய தொல்லையிலிருந்து தப்புவதற்காக புது வழியொன்றை நாகேஷ் கண்டுபிடித்தார்.

ஒரு நாள் இரவு—

'எமன்' மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு சச்சுவின் வீட்டுக்கு நாகேஷ் சென்ருர். அவருடைய 'எமன்' வேஷத்தைக் கண்டு சச்சுவின் தாயார் நடுங்கினுர்! பயத்தால் அலறினுர்.

இப்படியொரு காட்சி 'பொய் சொல்லாதே' படத்துக்காக சாரதா ஸ்ருடியோவில் படமாக்கப்பட்டது. இப்படத்தை பாலு டைரக்ட் செய்கிருர்.

### ஏ. வி. எம்முடன் பத்மினி

நடிப்புச்சுடர் ஏ. வி. எம். ராஜனுடன் இணைந்து நடிக்கிருர் பத்மினி. புதுமையான கதை; படத்தின் தலைப்பு:'பாபு''. எம். வி. ராமனுடைய இப்படம் சினிமா ரசிகர்களுக்கு நல்ல தொரு விருந்தாக அமையப் போகிறது என்று சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு ஜெர்மனியிலிருந்து எஸ். விஜயானந்தன் எழுதுகிறார்

# ஏழு நூற்றாண்டு காலத்துக்கு முன் சிருஷ்டிக்கப்பட்ட நகரம்



கட்டுரையாளர்

கலையின் செழுமை ஊறி நிற்கும் சிற்பங்களும், ஓங்கி வளர்ந்து நிற்கும் உயர்ந்த கட்டடங்களும், அழகும் புதுமையும் நவீனமும் கலந்து ஆங்காங்கே பாதை வகுத்து நிற்கும் பாலங்களும், பசுமை சிரிக்கும் பூங்காக்களும் கொண்ட கிழக்கு ஜெர்மனியிலுள்ள 'ட்றெஸ்டன்' நகரைப்பற்றியும், 'எக்சிபேரியா' என்ற கிராமத்து வாழ்க்கையையும் சுவைபட எழுதுகிறார்: கந்தரோடையிலிருந்து சென்று கிழக்கு ஜெர்மனியில் உயர் கல்வி பயின்று வரும் எஸ். விஜயானந்தன்.

கிழக்கு ஜெர்மனியில் அழகு சொட்டும் அருமையான இடங்களைப் பார்த்தேன் கலைக்குஇங்குள்ள மக்கள் கொடுத்திருக்கும் இடத்தை இந்த இடங்களிலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது. தங்கத்திலும், இரும்பிலும், கற்களிலும் கைதேர்ந்த சிற்பிகள் தமது கைவண்ணங்களைக் காட்டி பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துகிறார்கள். சிற்பிகள் கலையைப் பேசவைக்கிறார்கள். காலவெள்ளத்தால் சிறிதும் அழிக்கப்படாது பண்டைய சிறப்பின்பெருமையை ஆங்காங்கே எடுத்துக் கூறுகின்றன.

'எல்பி' ஆறும் அதன் சுற்றுப்புறங்களும் கலைப் பயிர்கள் வளர்க்கப்பட்ட இடங்கள். 'ட்றெஸ்டன்' நகரம் இந்த ஆற்றின் அழகைச் சேமித்து வைத்திருக்கிறது. இந்த நகரின் அழகுக்கதை கூறும் நகரசபை மண்டபத்தின் உச்சியில் தங்கத்தால் செய்யப்பட்ட மனிதஉருவம் அரை நூற்றாண்டு காலத்துக்குமேலாக அசையாது நிற்பது கலை எவ்விதம் இங்குள்ள மக்களால் போற்றிப்பாதுகாக்கப்படுகிறதுஎன்பதற்கு ஒருநல்ல எடுத்துக்காட்டு.

### கலையின் பிறப்பிடம்

ட்றெஸ்டன் நகரம் அழகுக்குப் பெயர்பெற்றது. இதனைக் கலையின் பிறப்பிடமென்றே பார்த்தவர்கள் எல்லோரும் மெய்மறந்து வர்ணிக்கிறார்கள். கைதேர்ந்த கலைவிற்பன்னர்களாலும், சிற்பக் கலைஞர்களின் திறமையாலும் ஏழு நூற்றாண்டு காலத்துக்கு முன்பாக சிருஷ்டிக்கப்பட்ட இந்த நகரம் 1945-ம் வருடம் பெப்ரவரி 13-ந் திகதி, 14-ந் திகதிகளில் இரண்டாம்போரின் தாக்குதலுக்குள்ளாகி, சீர்குலைக்கப்பட்டாலும் மீண்டும் செப்பனிடப்பட்டு சீர்திருத்தப்பட்டு பழைய மெருகுடன் காட்சியளிக்கிறது. மக்களின் கலையார்வத்தையும், கிழக்கு ஜெர்மனியின் கலைச் செழிப்பையும் ட்றெஸ்டன் நகரம்பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. கவிஞர்களின் வர்ணனைக்குஏற்ற ஒரு இடமாக இந்த நகரம் மிளிர்கிறது. சீர்திருத்தப்பட்ட 'ட்றெஸ்டன்' நகரத்தைப் பார்த்து 'ட்றெஸ்டன் நகரத்தைப் பாருங்கள் அது மீண்டும் அழகாகச் சிரிக்கிறது' என்கிறார் ஒரு பிரபல கவிஞர்.

### புதுமை, அழகு பசுமை, நவீனம்

ஓங்கி வளர்ந்து நிற்கும் உயர்ந்த கட்டடங்களும், கலையின் செழுமை ஊறிநிற்கும் சிற்பங்களும் புதுமையும் அழகும், நவீனமுங் கலந்து ஆங்காங்கே பாதைவகுத்து நிற்கும் பாலங்களும், பசுமை சிரிக்கும் அழகான பூங்காக்களும் வெளிநாட்டவர்பலரை இங்கு இழுத்துக்கொண்டிருக்கிறது. இங்கு எத்தனையோ அற்புதக் காட்சிகளைக் காணலாம்என்றுநம்பி வரும் வெளிநாட்டுக்காரர்களை 'ட்றெஸ்டன்' நகரம் ஏமாற்றாமல் வரவேற்கிறது,

சீரழிந்த பழைய கட்டங்கள்சில ஒருபுறமும், விஞ்ஞான வளர்ச்சியில் வேரூன்றிநிற்கும் கட்டடங்கள் பல ஒருபுறமும் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றன.

## நேற்றைய வாழ்வைப் பற்றி நினைக்க அவர்களுக்கு நேரமில்லை

சரித்திரத்தின் வரலாற்றைச் சான்றுகளுடன் விளக்கிக்கூறும் நூதனச்சாலை ஆர்வமிக்கச் சரித்திர மாணவர்களுக்கு நல்ல புதுப் பாடங்களைக் கொடுக்கின்றது.

### அழகுக் காவியம்

ஆற்றின் அருகே அமைந்திருக்கும் இந்த அழகு நகரம் இயற்கையில் இன்பம் காண்பவர்களுக்கு நல்ல விருந்து படைக்கிறது: வானளாவ உயர்ந்துநிற்கும் நுண்கலைக் கட்டடங்கள், ஆங்காங்கே அசைந்துகொண்டு செல்லும் நவீன வாகனங்கள், ஒளிபாயும் வண்ண விளக்குகள், ஆற்றினூடாகச் செல்லும் அழகான பாலம் அழகுக்காவியமாகவே தென்படும்.

இரவைப்பகலாக்கி ஒளி வெள்ளம் மனதை நிறைக்கிறது. திரும்பும் இடங்களிலெல்லாம் சிற்பிகளின் சிந்தனைகள் செயலாக்கப்பட்டு நமக்குப் பல இனிமைக்காவியம் கிடைக்கின்றன. வில்லேந்திநிற்கும் வீரனின் காட்சிமுதல் 'எல்பி' ஆற்றுப் பள்ளத்தாக்கில் செதுக்கப்பட்டுஇருக்கும் சிற்பங்களெல்லாம் நேரம் மறந்து நம்மை ரசிக்க வைக்கின்றன.

### சிறுவர்களுக்கு ...

சிறுவர்களுக்கு 'ட்றெஸ்டன்' நகரம் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. சிறுவர் நலனுக்கென்று பாலர் பாடசாலைகளும், சுகாதார நிலையங்களும் பேணிக்காக்கும் பராமரிப்பு நிலையங்களும் ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ளன எதிர்காலத்தில் அவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், உயர்ந்த கல்விமான்களாகவும் ஆக்குவதற்கு பலமுள்ள நல்லஅத்திபாரம் போடப்பட்டுள்ளது. பெரியவர்கள் ரசிப்பதற்கு மட்டும் கலைஞர்கள் தமது ஆற்றலைப் பயன்படுத்தவில்லை. பிஞ்சுமொழிபேசும் கொஞ்சு உள்ளங்களும் அள்ளிப்பருகி ஆனந்திக்க அழகானசிற்பக்கலைகளை அமைத்திருக்கிறார்கள். 'ட்றெஸ்ட்'டன் நகரத்தின் ஒருபகுதியும் குழந்தைகள் விளையாடுவதற்கென அமைக்கப்பட்டிருக்கும்யானைக்குட்டியைப் பார்ப்பவர்கள் இதனை ஒப்புக்கொள்வார்கள், படுத்திருக்கும் நிலையிலுள்ள இந்த யானைக்குட்டியின் முதுகில் ஏறி பயமின்றி குழந்தைகள்விளையாடும் காட்சி உள்ளத்தில் மகிழ்ச்சியைத் துள்ளி விளையாடச்செய்யும் ஒரு ஆனந்தக்காட்சி.

இரு கரடிகள் விளையாடுவதுபோல், ஆரம்ப பாடசாலை ஒன்றின் பக்கத்தே அமைக்கப்பட்ட சிற்பவேலைப்பாடும் குறிப்பிடத்தக்கது. மிருகக்காட்சிச்சாலையிலும் 'சிம்பான்ஸி' என்ற மனிதக் குரங்கும்குழந்தைகளைக்குதூகலிக்கவைக்கவென்றேபாதுகாக்கப்பட்டு வருகின்றது.

### தொழில்துறை

தொழில்நுட்பத்துறையிலும் 'ட்றெஸ்டன்' நகரம் துரிதமாக முன்னேறி வருகிறது. 'காமிரா'க்கள் தயாரிப்பு வைத்தியத் துறைக் கருவிகள்தயாரிப்பு போன்ற இவற்றுக்கான தொழிற்சாலைகள்முதல் பல்வேறு தொழிற்சாலைகள் இங்கிருக்கின்றன. மாணவர்களை எதிர்காலத்தில் உயர்ந்த விஞ்ஞானிகளாக்கவும் தொழில் மேதைகளாக்கவும் நல்ல உயர்கல்விக்கூடங்களும், உயர்ந்த தரத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உல்லாசப் பிரயாணிகளை ஈர்ப்பதற்கும், கவனிப்பதற்கும் நல்ல கண்காட்சிசாலைகள் மட்டுமல்ல, சிற்பச்கலைகள் மட்டுமல்ல, விரும்பிய விதத்தில் சௌகரியமாகத் தங்குவதற்கும் வயிறார உண்பதற்கும் ஏற்ற அருமையான ஹோட்டல்களும் இங்கு உண்டு.

சுறுசுறுப்பான ட்டெஸ்டாவில் அடுத்தநாள்பற்றிய சிந்தனையே ஒவ்வொரு உள்ளத்திலும் ஊறிகொண்டிருக்கிறது நேற்றைய வாழ்வைப் பற்றி நினைக்க அவர்களுக்கு நேரமில்லை.

### கிராம வாழ்க்கை

எக்சிபேரியா மலைப்பகுதிக்குச் சென்று திரும்பினோம். பதினான்குநாடகள்அங்குதங்கியிருந்தோம். பலவிதமான புதுமையான அனுபவங்களைப்பெற்றுக்கொண்டோம்.

கிழக்கு ஜெர்மனியின் கிராமப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களின் வாழ்க்கைமுறையை நேரடியாக எம்மை அறியவைப்பதற்காகவே பதினான்கு நாட்களும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடும்பத்தினருடனும் தங்கினோம். நான் 'தங்கியிருந்த குடும்பத்தில் தகப்பன், தாய் 2 ஆண்பிள்ளைகள்; தகப்பன் வயது 35; தாயார் 39; மூத்தமகன் 15; மற்றவர் 9; தகப்பனார் நீர்ப்பாசனப் பொறியியலாளர். மனைவி துணி ஆலையில் மின்தறி வேலை செய்கிறார்.

அவர் வேலைசெய்யும் மின்தறி தொழிற்சாலைக்குச் சென்றேன். அந்தக் குடும்பத்தினருடைய உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச சென்றேன். ஒவ்வொரு வீட்டு வரவேற்பும் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. அவருடைய பெற்றோர்கள் நாம் இருந்த இடத்திலிருந்து 4மைல்களுக்கப்பால் வசிக்கிறார்கள். விவசாயம் செய்கிறார்கள். கூட்டுறவு முறையிலேயே விவசாயம் செய்யப்படுகிறது. அவர்கள் பால் மாடு, குதிரைகள் முதலியவற்றைத் தனிப்பட்ட முறையில் வளர்க்கிறார்கள். பஸ்ஸில்தான் சென்றோம்: திரும்பும்போது குதிரைவண்டியில் வந்தோம்

### புதியஜெர்மனி பற்றி பெரியவர்

பெரியவரிடம் புதியஜெர்மனியைப்பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டேன். நன்றாகவே சொல்கிறார்.

'இப்போது என்ஜினியர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள் எல்லாரும் சாதாரண தொழிலாளியினுடைய பிள்ளைகள்தான்! ஆனால் முன்னர் இப்படியான நிலைமை இருக்கவில்லை.'

கழுத்தில் சிலுவை அணிந்திருக்கிறார்,

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் வெசாக் கொண்டாட்டத்தை ஒத்திருந்தது டிசம்பர் 31-ந்திகதி நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு எல்லா மாதா கோவில்களிலும்மணியோசை கேட்டது.

இதன் அர்த்தம், புதிய வருடத்தை அன்போடு வரவேற்பதாகக் கூறப்பட்டது! சகலருக்கும் பலவிதமான பரிசில்கள் கொடுக்கிறார்கள்

### மதம் வாழ்கிறது

கிழக்கு ஜெர்மன் அரசைப் பொறுத்தவரையில் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களை மனிதாபிமானத்துடனேயே நடத்துகின்றது. சமயத்துக்கென 6 இடங்கள் உண்டு. ஆயினும் சமயநம்பிக்கை இங்கு இப்போது குறைந்து கொண்டே வருகிறது

மலைப்பகுதியில் பலகாட்சிகளைக் காணமுடிந்தது. எங்கும் ஒரே பனிப்படலம். இக்காலத்தில் எங்கும் 'சறுக்கீஸ்', விளையாட்டுத்தான்! எல்லோரும் சந்தோசமாகப் பங்குபற்றுகின்றனர். அதற்கேற்ற உபகரணங்கள் உண்டு.

பெர்லின் எல்லை சுவருக்குள் இரண்டுமுறை சென்றேன். இரு பக்கத்திலும் போர்வீரர்கள் நிற்கிறார்கள். கிழக்குப் பக்கத்துப் போர் வீரர்களுடன் நீண்ட நேரம் பேசினேன். பல விஷயங்கள் குறித்து மனந்திறந்து என்னிடம் கூறினார்கள், அவர்களுடைய பெருந்தன்மையான நடவடிக்கைகள், தாய்நாட்டின்மீது உள்ள பற்று எனக்கு அவர்கள்மீது ஓர் அசையாத பற்றை ஏற்படுத்தி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரத்திருவமுது

# விசாரசருமர் சண்டேசுரர் பதவி பெற்ற திருக்கலய நல்லூர்

**காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர்**

இண்டைமலர் கொண்டு
மணல் இலிங்கமதி
யற்றி
இனத்தாவின் பாலாட்ட
இடறியதா
தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி
அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப்
பணிகொண்ட
விடங்கனதூர்
வினவில்
மண்டபமுங் கோபுரமு
மாளிகைசூ ளிகையும்
மறையொலியும் விழவொ
[லியும்
மறுகுநிறை வெய்தித்
கண்டவர்கண் மனங்கவரும்
புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்
[தாடுங்
கலயநல்லூர் காணே

திருச் சேய்ஞ்ஞாரில், விசாரசருமர் என்னும் அந்தணசிறுவர்பசுக்களின் தெய்வீகப் புனிதத் தன்மையை உணர்ந்து அவ்வூரார் பசுக்களை அன்புடன் மேய்த்து வருவாராயினர். விளையாட்டுப் பருவத்தினரான அச்சிறுவரை நண்பகலில் ஓய்வு பெறும் பசுக்கள் சூழ்ந்து நின்று அவரிடத்தே தாங்கொண்ட பெருமகிழ்ச்சியினால் தாமாகவே நமது மடியினின்றும் பாலைச் சொரிந்து சுரந்தன. அதைக்கண்டார் அச்சிறுவர். முன்னைவினைத் தொடர்பு அவரைத் தூண்ட, மரநிழலிலே விளையாட்டாகவே மண்ணினால் சிவலிங்கம் பிடித்துவைத்து பசுக்கள்சொரியும்பாலைக் குடங்களிலேந்தி அச்சிவலிங்கப் பிரானுக்கு அபிஷேகஞ் செய்து இவ்வாறு பூஜை விளையாட்டைச் செய்வாராயினர். நாள்தோறும் இது நடந்தபோதும், பசுக்கள் தத்தம் மனைகளிற் சுரக்கும் பாலின் அளவு குறையாமல் பெருகியே வந்தது. ஆயினும் வினைவசத்தால் இச்செயலைக் கண்டஎவரோ குறையாக மதித்து, அச்சிறுவரது தந்தை எச்சதத்தரிடம் கூறினர். உண்மையை அறிய விரும்பிய அத்தந்தை, ஒருநாள் ஆனிரைமேயும் புறநிலத்தே வந்து ஒளித்திருந்தார். அன்றும் வழமைபோல விசாரசருமர் சிவபூஜை விளையாட்டைச் செய்தார். அதனை நேரே கண்ட தந்தையார் வெளிப்படவந்து அவர்செயலைத்தடுத்தார். சிவபூஜையிலே சிந்தை திளைத்திருந்த விசாரசருமர் அதனை உணரவில்லை. சினங்கொண்ட தந்தைஉடனேஅவர் வைத்த பாற்குடங்களைக் காலினால் இடறினார். சிவாபராதமாகிய அக்கொடுஞ் செயலைக் கண்ட சிறுவர் மனம் பொறுதுசினங்கொண்டார். அவ்வாறு பிழைசெய்தவர் தமது தந்தையே என்பதையும் அவர் உணரவில்லை. சிவாபராதம் செய்தவர் எவராயிருந்தாலும் தண்ட

— க. வை. ஆ. சர்மா —

பெறவேண்டும் என்பது ஒன்றே இச்சிறுவரது மனத்தில் எழுந்தது. அயலிலே கிடந்த ஒருகோலை விசாரசருமர் கையிலெடுத்தார். சிவனருளால் அது மழுவாக மாறியது. பாற்குடத்தை இடறிய தந்தையின் கால்களை அந்த மழுவினால் உடனே வெட்டினார், அதன்பின் தொடங்கிய பூஜையை முற்றுவித்தார். பரம்பொருளாம் இறைவன் அம்மையப்பராக வெளிப்படத் தோன்றி விசாரசருமருக்குப் பூரணஅருள்புரிந்து தேவரும் தொழும்படியான சண்டேசுரர் பதவியை அவருக்கு ஈந்தார். அவ்வாறு சுயம்புமூர்த்தியாகத் தோற்றியருளிய சிவபிரானார் கோயில்கொண்டு எழுந்தருளும் ஊர் யாது எனில்-

மண்டபங்கள், கோபுரங்கள், பெரிய மாளிகைகள், செய்குன்றங்கள் வீதிகள் முதலான இடங்கள் எல்லாம் வேதபாராயண ஓசையும், விழாக்கள் நடைபெறுவதனால் எழும் ஓசையும் நிறைந்து விளங்குவதும், கண்டவர்களது கண்ணையும் மனத்தையும் கவரும்படியான செந்தாமரைத் தடாகங்களில் மகளிர் குடைந்து நீராடும் சிறப்பு வாய்ந்த திருக்கலிய நல்லூராம். (3)

**கணமுகில்போன்ற அணிகிளறும் கலய நல்லூர்**

மலைமடந்தை விளையாடி
வளையாடு கரந்தான்
மகிழ்ந்தவள்கண்
புதைத்தலுமே
வல்லிருளா யெல்லா
உலகுடன்றான் மூடவிருள்
ஓடும்வகை நெற்றி
யொற்றைக்கண்
படைத்துகந்த
உத்தமனூர் வினவில்
அலையடைந்த புனல்
பெருகி யானைமருப்
பிடறி
அகிலொடுசந் துந்தி
வரும் அரிசிலின்றென்
கரைமேல்
கலையடைந்த கலிகடியந்
தணரோமப் புகையாற்
கணமுகில் போன்றணி
கிளரும் கலய நல்லூர்
காணே.

அகில உயிர்களுக்கும் அன்னையாம்பார்வதியம்மையார் ஒருபோது யாதோ திருவிளையாடல் காரணமாக இறைவன் கைலாசபதியின் பின்புறமாக வந்து வளைகள் பொருந்திய தமது இரு கரங்களினாலும் சிவபிரானரது இரு கண்களையும் பொத்திவிட்டார். இறைவனது வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனுமன்றோ! உலகுக்கெல்லாம் ஒளியைத்தரும் சூரிய சந்திரர்களாகிய சோதிகள் சிவசக்தியினால் மறைக்கப்பட்டது. இறைவருக்கு ஒரு கணப்பொழுது மாத்திரமேயாகும். ஆயினும் ஆன்மகோடிகளோ, அகிலப் பிரபஞ்சமுமே தடித்த இருட்படலத்தில் மூழ்கித் தவித்தன. இறைவரோ தமது கண்களை விடுவிக்கும்படி தேவியை இரக்கவில்லை பலவந்தமாக விடுவிக்க முயலவும் இல்லை. சக்தியின் பேராற்றல் சிவத்தினுள் அடக்கம் என்பதை உலகுக்கு உணர்த்தும் திருவிளையாட்டாகவே சிவபிரான் அதனைக் கொண்டு தமது நெற்றிக் கண்ணைத் திறந்தருளினார். சிவபிரானரது நெற்றிக்கண் அக்கினியன்றோ! அதனால், ஒளியிழந்து வருந்திய ஆன்மவர்க்கம் யாவும் அக்கினியின் சோதியை கண்டு துன்பம் நீக்கி, இன்புற்றன. இவ்வாறு அருள்புரியும் சிவபிரானார் சாந்நித்தியமாகக் கோவில்கொண்டு எழுந்தருளியுள்ள ஊர் யாது? எனில்—

காவிரியாற்றின் கிளைகளுள் ஒன்று அரிசில்நதி என வழங்கப்படுகிறது. விஷ்ணுவினாற் சொல்லப்பட்டுப் பெருகிய காரணத்தால் அரிசொல் நதி எனப்படுவது மருவி அரிசில் நதி எனப்படுகிறது. யானைத் தந்தம், அகிலங்கட்டைகள் சந்தன மரங்கள் என்பனவற்றையெல்லாம் தனது அலைகளால் வாரிக்கொண்டு வந்து ஒதுக்கும் அரிசில் நதியின் தென்கரையிலே சகல கலைகளிலும் வன்மை படைத்தவர்களாய அந்தணர்கள் தாம் செய்யும் நித்திய நைமித்திக காமியங்களானஅனுட்டானச்செயல்களால் உலகிலே எவரும் பஞ்சமின்றி இதமாகவாழும் பொருட்டு வளர்க்கும்ஓமாக்கினியிலிருந்து எழும்புகையான கூட்டங்கூட்டமாக வானத்திலே முகிற் கூட்டம் போலப் பரவிச் செல்லும் காட்சிமலிந்த திருக்கலய நல்லூர் ஆகும். (4)

# ஹோமியோபதி வைத்தியம் எங்ஙனம் தோன்றியது?

[ஹோமியோபதி இலங்கையில் அங்கிகாரம் செய்யப்பட்ட மருத்துவ முறையாக அமுல் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் சென்ற வாரம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.]

இன்று உலகில் அலோபதி; ஹோமியோபதி ஆயுர்வேதம், சித்தம், யூனனி என ஐந்துபிரிவான மருத்துவ முறைகள் தேசங்களின் சுவாத்திய நிலைகளுக்கேற்றவாறு கையாளப்படுகின்றது இவற்றுள் 'ஹோமியோபதி' வைத்தியம் தோன்றியவிதத்தையும், மருந்துகளின் குணவிசேடங்களையும் ஆராய்வோம்.

## ஜெர்மனியில் ஆரம்பம்

ஹோமியோபதி வைத்திய முறை முதலில் ஜெர்மனியில் ஆரம்பமாகியது. பிரசித்திபெற்ற ஜெர்மன் டாக்டரான சாமுவல் கனிமன் தமது நீண்டநாள் ஆராய்ச்சியின் பயனாக இந்த நவீன வைத்திய முறையை 1807-ம் ஆண்டு 'ஆர்க்கனன்' என்னும் வைத்திய நூலின் மூலமாக மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார், அப்போது கனிமனுக்கு ஏற்பட்ட தொல்லைகள் சொல்லுந்தரமன்று. ஆஸ்பத்திரிகளிலும் பொது வைத்திய சாலைகளிலுமுள்ள அலோபதி வைத்தியர்கள் எல்லோரும் எதிர்த்தார்கள். அதன் பயனாக அவர் ஜெர்மனியினின்றும் துரத்தப்பட்டு கடைசியில் பாரிஸ் நகரம் சென்று தமது வைத்தியத் திறனால் லட்சக்கணக்கான நோயாளரைக் குணமாக்கி புகழ் பெற்ற ஹோமியோபதி டாக்டரென பல விருதுகள் பெற்று தமது 89-ம் வயதில் 1843-ம் ஆண்டு இவ்வுலகை நீத்தார். இவ்வுத்தம டாக்டர் உயிர் நீத்து நூற்று இருபத்தாறு வருடங்களாகின்றன. அவர் மறைந்தபின் அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஹோமியோபதி வைத்திய முறையை அமெரிக்கா தொடக்கம், ஆசியாவரை ஏன் நமது இலங்கையிலும் கூட ஆயிரக்கணக்கானபேர் கற்றுத்தேறி புகழ்பெற்ற டாக்டர்களாகத் திகழ்கின்றார்கள்.

## சிறப்போ சிறப்பு

ஒருகாலத்தில் மகிமை மிகக வின்ட்சர் மகாபிரபுவும், அமெரிக்க ஜனதிபதியும், ஹோமியோபதி சிகிச்சையில் தேர்ந்த டாக்டர்களைத் தங்கள் குடும்பவைத்தியர்களாக நியமித்துக் கொண்டனர். 1931-ம் வருடம் ரோமாபுரியில் கூடிய ஹோமியோபதி மகாசங்கத்தினர் யாவரையும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான மகிமை மிக்க பரிசுத்த போப்பாண்டவரும் வாழ்த்தி ஆசிகூறியுள்ளாரென்றால் இவ்வைத்தியத்தின் சிறப்பை இன்னும் விவரிக்கவேண்டியதில்லை.

எழுதியவர்
**டாக்டர் வேலாயுதர் கந்தசாமி**

## அற்புதமாக நோய் நீர்க்கும்

இவ்வைத்திய முறைகளும், ஔடதங்களின் அற்புதமான நோய் நீக்கும் தன்மைகளும் நமது இலங்கையைத் தவிர்ந்து வெளிநாட்டிலுள்ள கற்றறிந்த ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் கூடத் தெரியும். அவர்கள்

(14-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தின் பண்பை நாட்ட ஈழநாடு
தமிழக தனத்தை ஈட்ட தம்பி அன் கோ.

"சிறுதுளி பெருவெள்ளம்" "நூற்றுக்கு மேல் ஊற்று"

**தம்பி அன் கோ.,**

நவீன சேமிப்பில்
ரூபா நூறு நூறுகச் சேர்த்து
ரூபா ஆயிரம் ஆயிரமாக எடுக்கலாம்.

மாதம ரூபா 100 வீதம்

| | | | |
|---|---|---|---|
| 12 மாதம் | ரூபா 1200/- | கட்டினுல் ரூ. 1280/- | வாங்கலாம் |
| 24 ,, | ரூபா 2400/- | ,, ரூ. 2670/- | ,, |
| 36 ,, | ரூபா 3600/- | ,, ரூ. 4200/- | ,, |
| 48 ,, | ரூபா 4800/- | ,, ரூ. 5950/- | ,, |
| 60 ,, | ரூபா 6000/- | ,, ரூ. 7600/- | ,, |
| 72 ,, | ரூபா 7200 | ,, ரூ. 9500/- | ,, |
| 75 ,, | ரூபா 7500 | ,, ரூ. 10000/- | ,, |

**தம்பி அன் கோ.**

திருநெல்வேலி, வண்ணர்பண்ணை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவைமிகு கனிகள் சத்து மிகுந்தவை

நம் நாட்டில் வாழும் மக்கள் அரிசி உணவுக்கே அதிகம் மதிப்பளித்து அதையே மூன்றுவேளையும் உண்டு வருகிறார்கள். சத்து உணவை உண்பது குறைவு இது உடலுக்குமட்டுமன்றி நாட்டின் உணவுற்பத்தித் திட்டத்திற்கும் நன்மையளிக்காது எனக் கடந்த வருடம் கல்வி, கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். இரியகொல்லை ஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். இது உண்மையே எனலாம். நம் நாட்டு மக்கள் சத்துள்ள



உணவுகளைத்தேடி உண்பது குறைவு. வயிறுநிறைய உண்டா போதும் என்ற எண்ணம் அநேகருக்கு உண்டு. குறிப்பாக நாம் மற்றத் தேசங்களில் உள்ள மக்களிலும் பார்க்க அன்றாட உணவில் பழவகைகளைச் சேர்த்துக்கொள்வது மிகக் குறைவு பழங்கள் சுவை தருபவை மட்டுமன்றி உடம்புக்குப் போஷாக்களிப்பவை. சத்து மிகுந்தவை. பழங்களை அன்றாட உணவில் ஒன்றாகச்சேர்த்துக் கொளவதால் சத்துக்குறைவால் உடம்புக்கு வரும் சில நோய்களைத் தடுக்கலாம்.

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், பப்பாப்பழம், எலுமிச்சம் பழம், லெமன், கொய்யாப்பழம், தோடம்பழம் நமது நாட்டில் மிக மலிவாக அநேகமாக வருடம் பூராவும் கிடைக்கக்கூடியவை. இவற்றில்:-

**வாழைப்பழம்**

சூடும் குளிர்ச்சியும் உடையது இதில் பல இனம் உண்டு. எல்லா இன வாழைப் பழங்களிலும் எல்லாவித சத்துக்களும் உள்ளன. ஒருவேளை உணவாகச் சில வாழைப்பழங்களும் சிறிதளவு பாலும் சாப்பிட்டால் அதுவே போதுமானது. ஏனையவில் தேவை

—'ராஜி'—

யான எல்லாச் சத்துக்களும் அவற்றில் அடங்கியுள்ளன. எல்லாக்காலங்களிலும் மிக மலிவாகக் கிடைக்கக்கூடிய இப்பழத்தைத் தினமும் சாப்பிடுவதால் நன்மை பயக்கும்.

**பலாப்பழம்**

இப்பழத்தில் விட்டமின் 'ஏ' சத்து அதிகமாகக் காணப்படும். இது மூளைசம்பந்தமான சகல பகுதிகளுக்கும் வலுவூட்டுவதாகும். இதை உண்பதால் சிலருக்கு வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுவதுமுண்டு. இதைத் தவிர்ப்பதற்கு இப்பழத்தைத் தேனோடு கலந்து சாப்பிடுதல் நன்று.

**மாம்பழம்**

'ஏ', 'பி', 'சி' உயிர்ச்சத்துக்கள் நிறைந்த இப்பழம் மிகவும் சூட்டுத் தன்மை உடையது. மூளையின் சக்தியை அதிகரிக்கவும், இருதய பலத்திற்கு இப்பழம் சிறந்தது என வைத்தியர் கூறுவர். தூக்கமில்லாதவர்களுக்கு தூக்கமாத்திரை தேவையில்லை. தூக்கமின்றித் துன்பப்படுபவர்கள் இரவில் மாம்பழம் சாப்பிட்டால் தூக்கம் இலகுவில் வந்துவிடும்.

**பப்பாப்பழம்**

இந்தப்பழத்தைச் சிறு குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள்வரை பயமின்றிச் சாப்பிடலாம். இதுவும் வாழைப்பழம்போன்று பல உயிர்ச்சத்துக்களைக் கொண்டது. மலச்சிக்கலைப் போக்குவதற்கு இதைவிடச் சிறந்த பழம் இல்லை என்பர் வைத்தியர்.

**எலுமிச்சம்பழம்**

தாகத்தைத் தணிக்கவல்ல இப்பழம் பித்தத்தையும் வாதத்தையும தணிக்கவல்லது. தொண்டை சம்பந்தமான வியாதிகள் வராமல் தடுக்கவும், வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்தவும் சிறந்தது. இப்பழம் இந்தவகையைச் சேர்ந்த 'லெமன்' என்னும் பழமும் இத்தகைய தன்மை வாய்ந்தவை, தாகத்தைத் தீர்க்க இப்பழங்களைப் பானமாகத் தயாரித்துப் பருகலாம். 'சி' உயிர்ச்சத்து மிகுதியாக இப் பழங்களில் உண்டு.

**தோடம்பழம்**

மற்றப்பழங்களிலும் பார்க்க அதிக 'சி' உயிர்ச்சத்தைக் கொண்டுள்ள இப்பழத்தை வைத்தியர்கள் அநேகமாக நோயாளிகளுக்குச் சிபார்சு செய்யத் தவறுவதில்லை. சரும வியாதிகளைப் போக்குவதற்கு இதைப் போன்ற வேறு சிறந்த பழவகையில்லை என்றே கூறிவிடலாம்.

**கொய்யாப்பழம்**

சிறிய பழம்தானே என இதை எண்ணிவிடக்கூடாது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதல்லவா? மலச்சிக்கலைப் போக்கும் சக்தியும், பசியை அதிகரிக்கும் வல்லமையும், விக்கலை நிறுத்தும் தன்மையும் இப்பழத்திற்கு உண்டு. அதிக அளவில் 'சி' உயிர்ச்சத்தைக் கொண்டுள்ள தோடம்பழத்தைவிட 12 மடங்கு அதிகமான 'சி' உயிர்ச்சத்து உடையது எனக் கூறப்படும். இப்பழம் குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது.

இவற்றைவிட 'பியேர்ஸ்' மாதுளை, மங்குஸ்தான், டுறியாஸ் போன்ற அதிகவிலையுள்ள பல இனப்பழங்களும் நம் நாட்டில் கிடைக்கக் கூடியதாக உள்ளன. ஆனல் மேற்கூறிய பழங்கள் மிக மலிவாகக் கிடைக்கக் கூடியவை. அரிசி உணவுக்குச் செலவளிப்பதில் ஒருபகுதி பணத்தை இப்பழவகைகளுக்குச் செலவளித்து அவற்றை வாங்கி உண்டால் திடகாத்திரமுள்ளவர்களாகவும் ஆரோக்கியமுள்ளவர்களாகவும் திகழலாம்.

## பலப்பழ சலட


தேவையான பொருட்கள்:-

நன்றாகக் கனிந்த பலாப்பழத் துண்டுகள் -1ருத்
சீனி -1/2ருத்தல்
சவ்வரிசி -1மேசைக்கரண்டி

செய்யும்முறை:

ஒரு பாத்திரத்தில் பலாப்பழம் சவ்வரிசி இரண்டையும் போட்டு சிறிது நீரும்விட்டு வேகவிட வேண்டும். சிறிது அவிந்ததும் சீனியையும் கலந்து இறுக்கமான பதத்திற்கு வந்ததும் இறக்கிவிடவும். பின்னர் ஐஸ்கிறீம் கோப்பைகளில் இதை ஊற்றி அதன்மேல் ஜெலி வைத்து விருந்தின் போது பரிமாறலாம்

# தளிர்விரல் கரங்கள் தண்ணொளி பெற-



வளர வளர வெட்டியெறியும் நகம்தானே எனப் பலர் தங்கள் நகங்களில் கூடிய கவனம் செலுத்துவதில்லை. தளிர் விரல்களுக்கு இயற்கையாகவே அமைந்த பாதுகாப்பான இந்த நகங்கள் சிலருக்கு நன்றாகத் தேய்ந்து நகத்தசைக்கு கேடு விளைவிக்கத் தக்க வகையில் இருக்கும். சிலர் கவனமாக வெட்டிவிடாததால் அளவுக்குமிஞ்சி வளர்ந்து அலங்கோலமாகக் காட்சியளிக்கும். இதனல் விரல்கள் அழகின்றிக் காட்சியளிப்பதோடு நகங்களும் பழுதடைகின்றன.

**நகநோய்**

நகத்தின் அடியில் உள்ள அதன் வேரும் கீழ் அடுக்குகளும் உயிர் உள்ளவை. அதுமட்டுமன்றி இச்சிறு நகம் உடம்பின் ஒரு பகுதியாக உள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே நகமும்நோய்வாய்ப் படையக்கூடும். 'ஆலப்பிஷியா ஒரியாட்டா' என்ற நோயால் நகங்கள் பெரும் பாலும் பாதிக்கின்றன. இந்தநோய் ஏற்பட்டால் தலைமுடி உதிர்வதைப் போல விரல் நகங்களும் விழுந்துவிடும் இந்த நோய் வராமலும் நகம் விழுவதுண்டு. அதாவது நகத்தில் அடிபட்டாலோ அல்லது நகம் நசுங்கும்நிலை சம்பவித்தாலோ அவை விழக்கூடும். இந்தச் சந்தர்ப்பங்களில் கவலையீனமாகவிராது வைத்தியரிடம் காட்டித் தகுந்த மருந்துகளைப்போட்டுக்கவனித்தால்தான் நகம் திரும்பவும் நன்றாக வளரும்

**நகத்தின் வளர்ச்சி**

சாதாரணமாக ஒருவாரத்திற்கு ஒரு மில்லிமீட்டர் வீதம் நகம் வளரும். சில சமயம் அளவுக்குமீறி வளர்ந்து கொம்பு போலக் காட்சியளிக்கும். இவ்வாறு காட்சியளிக்கவிடாது வாரத்துக்கொருதடவை நகங்களை அழகாக வெட்டிவிடவேண்டும். சிலருக்கு நகங்கள் நுனியில் வளைந்து காணப்படும். கைகால்களில் ரத்த ஓட்டம் குறைந்து உடல் பலவீனமடைவதாலேயே இத்தன்மை ஏற்படுகிறது என வைத்தியர் கூறுவர். சில

(15-ம் பக்கம் பார்க்க)

## மல்லிகை மலரே!

—அ. திவ்யபூரணம்—

மல்லிகை மலரே மரத்தில் நீ
மணங் கமழ மலர்கின்றாய்
துல்லிய மான தென்றலுடன்
தூய மணம் பரப்புகின்றாய்.

மங்கையரின் கூந்தலிலே
மதி யெனவே தவழ்கின்றாய்
பொங்கு மவரின் இதயத்திற்கு
புத்தின்பமளித்து மகிழ்கின்றாய்.

இறைவன் சந்நி தானத்திலே
இயற்கைத் தாயின் சேயெனவே
குறைவே இன்றி இருந்திடுமுன்
கொள்ளை யழகு கோ., ய,ன்றோ?

நாளு முந்தன் சேவை தனை
நானிலத்தா ரனு பவிக்க
வாழும் உன்னை வாழ்த்துகிறேன்
வையகத்தின் நறு மலரே.




முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில் பாடாத பூம்பொழில்

'திரைவழியாகவோ, கடல் வழியாகவோ அல்லது ஆகாயமார்க்கமாகவோ இலங்கையை நீங்கள் அணுகும்போது ரம்மியமான காற்றை உட்கொள்வதை நீங்கள் உணர்வீர்கள். அது காற்றில் மிதந்து வரும் இலவங்கப் பட்டையின் மணம் என்று ஐரோப்பியர்

## பசுந்துளிர்

சத்தியம் செய்கிருர்கள். இந்த அதிசய நறுமணம் மிகுந்த காற்று எப்படித் தோன்றுகிறது என்பதைக் கண்டுபிடிப்பது இலங்கையில் பிறந்தவருக்குக் கடினமானது. ஆனால் அந்தக் காற்று அங்கு இருக்கத்தான் செய்கிறது. அது ஒரு வெப்பப்பிரதேசக் காற்று. அதில் இலவங்கப்பட்டையின் மணமும் மல்லிகை மலர் வாசனையும் கற்பனை அழகும் அற்புதமாகக் கலந்திருக்கின்றன...

இவ்வாறு இலங்கைத்தீவு என்ற பெயருடன் இந்தியாவில் வெளியான தொரு நூலில் அதன் ஆசிரியர் ஜே. விஜயதுங்கா எழுதுகிருர். இலங்கைத்தீவின் சிறப்புகளையும் அதன் முழுவரலாற்றையும் ஆதியோடந்தமாக திரட்டிச்சுருக்கி வெளிநாட்டவருக்கு அறியத்தரும் நோக்கமாக ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட இந்நூல் இந்திய தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் பிரசுரமாகியிருக்கிறது.

யார் இந்த விஜயதுங்கா? அதனைப்பிறகு சொல்லுகிறேன். அதற்கு முதல் நூலின் மற்ருரு பகுதியில் சிங்கள சங்கீதம்பற்றிக் கூறியிருப்பதை தெரிந்துகொள்வோம்.

'இலங்கைக்கு வளமளித்த இயற்கை, சிங்களமக்களுக்கு இசையை ரசிக்கும் திறமையையளிக்கத்தவறிவிட்டது. இலங்கையில் சிங்கள இசை என்றும் இந்திய இசை என்றும் வழங்கப்படுவது வெறும் போலிகள். இந்துஸ்தானி இசைக்கலைப்பள்ளியின் தலைவரான ரத்னசங்கரை ஒரு சமயம் இலங்கை அரசாங்கம்வரவழைத்துசிங்கள இசை, அதன்வாழ்வுவலி பாப்புத்தரம் குறித்து அறிக்கை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டது. அவருடைய அறிக்கை வருந்தத்தக்கதாக இருந்தாலும், பயனுடைத்து. அவர் மிக்க அனுதாபம் காட்டியபோதிலும் அறிக்கையில் கீழ்க் கண்டவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

''கொழும்பு நகரில் சிங்கள சங்கீதம் என்பதாக ஒன்றுமில்லை சிங்கள சங்கீதம் என்று நாம் கேள்விப்படுவதெல்லாம் பூபாளி, சர்பர்தா, கமாஸ், பீலு, தனி, பைரவி போன்ற சுமார் ஒருடஜன் இந்திய ராகங்களுடன் பிஹாக், மலகோன்ஸ், பீபளாசி, தென் தர்பாரி, கன்னடா இசைகளைப் பண்படாத மேற்கத்திய முறையில் அல்லது பயிற்சியற்ற பண்படாத இந்திய முறையில் இயற்றியதாகும். சிங்கள இலகு சங்கீதம் என்றிருப்பதில் பூர்வாங்கசோதனை நிகழ்த்தப்பட்டபோது பெரும்பாலும் தற்கால இந்திய சினிமா மெட்டுகளும் சிலவற்றில் சிறிதே தற்கால வங்காள சங்கீதமும் காணப்பட்டது. இதற்கும் இந்திய லகு சங்கீதத்துக்கும் வெகுதூரம். இதில் முறையான படிப்பு பயிற்சியின் அறிகுறியே இல்லை. அனைத்தும் வழியில் கிடைத்ததைப் பொறுக்கி வைத்துக்கொண்டதைப் போல் தோன்றின. சொற்களைத்தவிர இந்த இசையில் சிங்களஇசை என்று சொல்வதற்கு வேருென்றுமே இல்லை ... ஆனல் இலங்கையில் நல்ல குரலுக்கும் நல்ல இசைத்திறமைக்கும் பஞ்சமில்லை. ஒருசில நிகழ்ச்சிகளைத்தவிர, முறையானஒழுங்கான இசைப் பயிற்சியின் அறிகுறிஇல்லை. தங்களுடைய சிங்களஇசை என்று கூறிக்கொள்ளத்தகுந்த ஓர் இசைமுறையைக்காண என் சிங்கள நண்பர்கள் விரும்புவதை நான் புரிந்துகொண்டு பாராட்டமுடியும். அது ஒரு சரியான குறிக்கோள். இலங்கையில் சுதேசி சங்கீத தடயங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று தேடிப் பார்த்தேன். ஆனல் என் முயற்சியில் தோல்வியே ஏற்பட்டது. அறிவாற்றலுக்கும் புத்த இலக்கியத்துக்கும் புகழ்பெற்ற மடராவில் அத்தீவின் கிராமியப்பாட்டுகளையும் கிராமிய நடனங்களையும் கேட்டேன், கண்டேன். அவை நிச்சயமாக அந்நிய அம்சங்களால் களங்கப்படவில்லை. எந்த நாட்டிலும் சரி சாஸ்திரிய அல்லதுஇலகு இசையின் தொடக்கம், அந்நாட்டின் கிராமிய இசையில் தானிருக்கும். தற்கால இந்துஸ்தானி, கர்னுடகம், ரக்தரி, துன் ஆகிய இசைகள் இந்தியாவின் தேசியக் கலைகளாக அந்நாட்டில் வளர்ச்சியடைந்ததுபோல இலங்கையில் கிராமிய இசை வளரவில்லை. இலங்கையின் வேடர்களும் காட்டுவாசிகளுமான வெட்டர்களுக்கு இயல்பான நடனங்களும் இசையும் இசைக்கருவிகளும் இருப்பதாக நான் அறிகி

## மணிப்புறவம்

றேன். உண்மையான சிங்கள சங்கீதம் என்ற பிரச்னை இலங்கை தேசிய கலாசாரத்தின் வேருக்குச் செல்கிறது. புத்தருக்கு முந்திய காலத்தில் இலங்கையின் நாகரிகம் எவ்வாறு இருந்தது ... ...'

இலங்கையிலுள்ள இசையின்நிலைபற்றிஇந்திய நிபுணரின் கருத்துக்களைக்குறிப்பிடுவது நல்லது என்று நினைத்தேன். ஏனென்ருல் அவை அநுதாபமுள்ள, முன்னேற்றத்துக்குப் பயன்படும் கருத்துக்கள். இலங்கை இசையிலுள்ள இந்தக் குறைபாட்டை நீக்க இந்தியாவின் நெருங்கிய தொடர்பு உதவும் அப்பொழுது இலங்கையின் இசையிலும்நடனத்திலும் மறுமலர்ச்சி ஏற்படும். அது என் உறுதியான நம்பிக்கை-' என்று இவ்வாறு முடிக்கிருர் விஜயதுங்கா.

இந்துசமுத்திரத்தில் ஒரு முத்தாக ஒளிரும் நமது அழகான இலங்கை அதன் சுதந்திர பொன்னுளைக் கொண்டாடும் இம்மாதத்தில் நாம் வாழும் - சகோதர இனமான சிங்களமக்கள் குயில் பாடாத பூம்பொழில்போல கான இன்பமிழந்து தமக்கென்று ஓர் இசையும் மர

(15-ம் பக்கம் பார்க்க)

# ஹோமியோபதி...

(12-பக்கத் தொடர்ச்சி)

தங்களது வீட்டிலேயே சிற்சில சிறிய நோய்களுக்கு வேண்டிய மருந்துகளை வைத்திருப்பார்கள். கூடிய நோய்களுக்கு மாத்திரமே சிறந்த டாக்டர்களிடம் செல்வார்கள். இம்மருந்துகளின் விலைகள் மிகக் குறைவானதால் ஏழை மக்களுக்கு மிகவும் வாய்ப்பளிக்கவல்லது. நோய் கண்டவுடன் பாவிப்பதானல் ஒன்று அல்லது இரண்டு வேளைகளில் பூரண குணமடையச் செய்யும். உட்கொள்ளுவதற்கு இனிமையுடையதாதலால் ஒருமுறை பாவித்த குழந்தைகள் டாக்டர்களை மாமா என்றே அழைத்து இன்னும் தரும்படி கேட்பார்கள்.

### ஔடதங்களின் விசேஷம்

ஔடதங்களின் விசேஷங்களை சொல்லப்புகின் எப்படிப்பட்ட தீராத நோய்களையும் தீர்க்கவல்ல ஊசிமூலம் ஏற்றும் மருந்து, வாயில் மென்று தின்னும் பில்லைகள் (Pilules) கலந்து குடிக்கும் திரவ மருந்துகள் (Tinctures) இன்னும் பவுடர் போன்ற மருந்துகள் (Triturations) வெட்டுக்காய மருந்துகள் போன்ற பற்பல மருந்துகளை பல நூறு வடிவில் தன்னகத்தே கொண்டது. இம் மருந்துகளின் வீரியங்கள் '3X' வீரியம் தொடக்கம் லட்சக்கணக்கான வீரியமுடைய மருந்துகளும் இவற்றிலடங்கும். பொதுவாகப் பார்க்கும்போது ஒருவகையில் ஆயுர்வேத மருத்துவ முறையை ஒத்ததாகவும் மற்றொரு வகையில் அலோபதி மருத்துவ முறையை ஒத்ததாகவும் அமையும். இவ்வைத்திய முறையை நன்கு கற்றறிந்த டாக்டர்கள் சத்திர சிகிச்சைகளையும் இலகுவில் செய்வார்களாயினும் டொன்சில், மூலமுளை, கட்டிகள் போன்ற உபத்திரவமான நோய்களை தங்கள் சிறந்த வீரியமுடைய மருந்துகளினுலேயே மாற்றிவிடுகின்ருர்கள். பெண்மணிகளுக்கேற்படும் மாதாந்தக்கோளாறுகளில் ஏற்படும் சகிக்கமுடியாத நோய்களையும், கெற்பஸ்திரீகளுக்கு பிரசவ காலங்களில் ஏற்படும் துன்பங்களையும் மிக விரைவில் நீக்கிவிடவும். சத்திர சிகிச்சையின்றி சுகப்பிரசவமாக்கும் அற்புத ஔடதங்களும் ஹோமியோபதி வைத்தியத்தில் திகழ்கின்றன. இப்படியான அவ்வரிய மருத்துவத்தை இலங்கையிலுள்ளோர் கற்றறிந்தும் போதிய ஹோமியோபதி மருந்துகள் கிடைக்கப்பெருததினுல் பிரகாசமின்றி இருக்கின்ருர்கள் இந்திய அரசாங்கம் ஹோமியோபதியை அங்கீகரித்து இருப்பதுபோல் இலங்கை அரசாங்கமும் ஹோமியோபதி என இப்போது அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. இது எமக்குப் பெரியதொரு வரப்பிரசதாமாகும்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எ. ஜி. ஆர்.
நடித்த
குடும்பத் தலைவன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பச்சை விளக்கு

REGAL JAFFNA
Daily 10-30 4-45, 7 &
9-45, p.m
Rod Taylor,
Yvette Mimieux
in
THE MERCENARIES
(Adults only)

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 2-30
அழகர்
மலைக்கள்ளன்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கே. பி சுந்தராம்பாள் - ஜெமினிகணேசன்
மற்றும் பலர் நடித்த
ஔவையார்
(புதிய கொப்பி)

தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
★ சத்தியன் ★ ஷீலா
நடித்த
ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்
செம்மீன்
(மலையாளம்)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
வெகுவிரைவில்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை
ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற
வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்


சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனேரமா
மற்றும்பலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானு மோகனம்பாள்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
ஆஷாபரேக் - ஹெலன்
நடித்த
ஷிக்கார்
(ஈஸ்மன் கலர்-ஹிந்தி)
அத்துடன் 1968-ம் ஆண்டு
டில்லியில் நடைபெற்ற
நட்சத்திரக்
கலைவிழாவும்
கலரில் காண்பிக்கப்படும்.

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
TARZAN AND THE
JUNGLE BOY
(Color & Scope)
காட்டுப் பையனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிளகாய்ப்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காலியாயிருந்தது. நான் ஏங்கிப் போனேன். கடைக்காரனைக்கேட்டேன் 'மிளகாய் தா' என்று. அவன் என்னை அருவடுப்பாக நோக்கிவிட்டு 'ஏனம்மா, மிளகாய் இல்லாமல் சமைக்கத்தெரியாதா? வெள்ளைக்காரன் மிளகாய் தின்கிருனே? மிளகோடு வேலையை முடித்து விடுகிருன். வடஇந்தியாவில் மிளகாய் என்ன மாதிரி உபயோகிக்கிருர்கள்? இந்த ஆந்திராக்காரரும் தமிழ் நாட்டாரும் அந்த தோஷத்தால் நீங்களும்தானே மிளகாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுகிறீர்கள். ஏன் வீணுக வாயையும் வயிற்றையும் கெடுத்துக் கொள்ளுகிறீர்கள்? காந்தி மகாத்மாவே சொல்லியிருக்கிருரே மிளகாய் அதிகம் சாப்பிடக் கூடாதென்று' என்று அந்தப்பேதை உரைத்தாள். அவளை அப்படியே ஒரு கோபப்பார்வை பார்த்து சாபம் போட்டேன். ஒன்றும் பலிக்கவில்லை.

'வீட்டுக்குத் திரும்பும் வழியில் அழுது வழியும் என் முகாரவிந்தத்தைக் கண்டு ஒரு பெண்மணி 'ஏன்பிள்ளை மிளகாய் கிடைக்கவில்லையா அதற்கு ஏன் அழவேண்டும். பேசாமல்போய் வீட்டிலே ஒரு கொச்சிமிளகாய்ச்செடி உண்டாக்கிவிடு. அது வருடக்கணக்காக நின்று மிளகாய் தரும். அந்த மிளகாயின் காரம் அகோரமானது. என்றெல்லாம் ஆறுதல் மொழி கூறினுள்.

'எனக்குத் தெரியாதா அந்தக் கொச்சிமிளகாயை. அது உன்னைப்போலப் பெரியதல்ல. சிவந்ததல்ல. ஊசி மிளகாய் என்றும் அதைச் சொல்வார்கள். ஊசிஅளவு தானிருக்கும். நிறம் வெள்ளை நல்ல காரமானதுதான், ஆனல் உன்னைப்போல குழம்புக்கு அதை அரைத்துப் போடலாமா? இரசத்திற்குத் தட்டிப்போடலாமா? சாம்பார், சட்னி செய்யலாமா? முடியவே முடியாது. ஆகையால் என்அருமை மிளகாயே! நீ எப்பொழுதுதான் திரும்பி வரப்போகிருய்? எப்பொழுது? எப்பொழுது? நீ எங்கே மறைந்து விட்டாய்? எங்கே, எங்கே?

நீ மறைந்ததற்கு காரணம் என்ன? என்ன? என்ன?

## குயில் பாடாத பூம்பொழில்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பும்கூட இல்லாதிருப்பதை எண்ணிப்பார்த்தால் ... ... ... 'சகோதரவருணி; கிராமத்துக்குத் திரும்புங்கள்' என்பதைத்தவிர இத்தருணம் அவர்களை நோக்கி நல்லதாக வேறென்ன சொல்ல இருக்கிறது?

நவை தவிருணர்வாளுய்
நமதேர் வலியாளுய்
நவில்சுதந்திரமாளுய்
நமோ நமோ மாதா!

### பிரபலஎழுத்தாளர்

விஜயதுங்கா பிரபலமான எழுத்தாளர். ''இலங்கைத் தீவு'' என்ற நூலைப்போல ஆங்கில மொழியில் வேறும் பல நூல்கள் எழுதியிருக்கிருர். அவருடைய சிறுகதைகள் சிங்கள சமுதாயத்தை, கால மாறுதலுக்குட்பட்டு படிப்படியாக மாற்றமடைந்து வரும் சிங்கள கிராமிய வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவன. 'என் கால்களுக்குப் பசுந்துளிர்' என்ற தலைப்புடன்.

விஜயதுங்கா எழுதிய ஒரு நூலை இலங்கையில் சில காலம் கவர்ணர் துரையாக இருந்த ஒருவெள்ளைக்காரப் பிரபு இங்கிலாந்தில் வைத்துப் படித்துப் பார்த்த போது 'எப்பொழுது இலங்கைக்குப்போவேனே!' என்ற ஆசை அவரைப்பிடரியில் பிடித்துத்தள்ளியதாம். அப்படி ஒரு கதை அந்த கவர்ணரே கூறியதாக.

ஒரு சமயம் விஜயதுங்காவின் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்க்க விரும்பி அவரது கதைகளை வெளியிட்டுக்கொண்டிருந்தஇலங்கைப் பத்திரிகை ஒன்றினிடம் அனுமதி கோரி கடிதம் எழுதினேன். அதற்குப்பதிலளித்து அந்தப்பத்திரிகைக் காரியாலயம் அனுப்பிவைத்த எழுத்தாளரின் முகவரி எனக்கு வியப்பூட்டுவதாயிருந்தது. 'சுவாமிநாதன் மேற்பார்த்து ஸ்ரீ விஜயதுங்கா-சென்னை' என்று அவரது விலாசம் எனக்குத் தரப்பட்டது!

ஸ்ரீவிஜயதுங்கா இலங்கைச் சிங்களவராளுலும் வாழ்நாளில் பெரும்பகுதி இந்தியாவிலும் இந்திய நண்பர்களுடனும்தான். பிரபல இந்தியப் பத்திரிகைகளும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் கூட அவரது கட்டுரை, கதைகளை வரவேற்றுப் பிரசுரித்திருக்கின்றன.

### சிங்களத்தில் தமிழ் சிறுகதை

தென்னிலங்கை இலும்பே மகாவித்தியாலய அதிபரும் சிங்கள ஆசிரியருமான டி. டி. நாணயக்காரா, ராஜாஜி சிறுகதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துக்கொண்டிருக்கிருராம். அத்துடன் காவியசேகரம் என்ற சிங்கள இலக்கியத்தைத் தமிழிலும் மொழிபெயர்க்கப்போகிருராம்.

கொழும்பு நகரில் நடைபெறும் தமிழ் விழாக்களில் தமிழில் உரையாற்றும் அபூர்வமான சிங்களக் கல்விமான்களில் திரு. நாணயக்காராவும் ஒருவர்- இன்று முன்வரிசையில் நிற்பவர், தமிழ்மொழிச் சிறப்பையும் தமிழர் பண்பாட்டையும் சிங்கள மக்களிடையே ஒரு கலாசாரத்தூதுவர்போலப் பரப்பி இலங்கைவாழ் மககளின் ஒற்றுமைகளும் சமாதான சகவாழ்வுககும் பாலம் அமைத்து உதவும் நாணயககாரா சுன்னுகம் கந்தவரோதயக கல்லூரிககுப்பெருமை தேடித்தரும் அககல்லூரிப் பழைய மாணவர் ஆவர். இங்குதான் அவர் தமிழ் கற்ருர்.

'நாணயமிகு சேவை ஆற்றும் திரு. நாணயககாராவின் பணி உயர்ந்தோங்குக!' என அன்னுருககுப் பாராட்டுவிழா கொண்டாடிய ஸ்கந்தா ஆசிரிய மாணவருடன் சேர்ந்து நாமும் வாழ்த்துவோம்.

## தளிர்விரல் —

(13ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு நகம் வெள்ளைப்புள்ளிகளையுடையனவாகக் காணப்படும். நகத்தின் அடுக்குகள் சரியாக இணையாததாலும் உடல்நோய், ரத்த ஓட்ட நோய் ஆகியவற்ருலும் இவ்வாறு வெள்ளைப்புள்ளிகள் ஏற்படுகின்றன.

### நகப்பூச்சு

இன்று அநேகமானேர் நகத்துக்கு கடைகளில் விற்கும்நகப்பூச்சுகளை வாங்கிப் பூசுகின்றனர். இதன்காரணமாகத்தான் கைகளிலும் முகத்திலும் கரப்பான்வருவதாக டாக்டர்கள் கூறுகிருர்கள் இவைதோலைமென்மையாக்கி நகத்தைக் கெடுத்துவிடும் எனவும் அதனல் நகமுறிவு ஏற்படுகிறதெனவும் அவர்கள் கூறுகிருர்கள். இவர்கள் இவ்வாறு கூறினுலும் வைட்டமின் 'ஏ' குறைவதினுலும் மேற்கூறிய நோய்கள் ஏற்படுகின்றன. இளஞ்சூடான எண்ணெயில் விரல் நகங்களைச் சிறிது நேரம்வைத்திருந்தால் நகங்கள் பளபளப்பாகக் காட்சியளிப்பதோடு முறிவுபடாமலும் இருக்கும். முற்காலத்தில் மங்கையர் மருதாணி என்னும் ஒருவகைச்செடியின் இலைகளை அரைத்து விரல்நகங்களுக்குப் பூசிவந்தனர். இது நகத்துக்கு குளிர்ச்சியையும் அழகையும் கொடுத்தது. இன்றும் நாட்டுப்புறங்களில் சிலர் இதைப் பூசிவருகிருர்கள்.

## குரக்கன்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புராணமுமன்றே பொருத்தமற்றது. அப்படியாயின் அவர் வேதாகம புராணப் புரட்டராகின்ருர். முருகன் திருவிளையாடல்களுக்குக் காலம் வகுக்கும் இவரின் அறிவென்னே இருந்தபடி.

'கீரிமலை வரலாறு' அத்தலத்தின் மகிமையைக்கூற எழுந்தது, அத்தலத்தோடு தொடர்புடைய மாருதப் புரவீகவல்லி வரவழைத்த சாங்கேயனது விக்கிரகம்வந்திறங்கிய துறைமுகத்தின் பூர்வ வரலாறு ஆராயப் படவேண்டியது ஆங்கு அவசியமின்று: எடுத்துக் கொண்ட தலத்தின் பெருமையை விரித்துத் தொடர்புடையவற்றைச் சுருக்கியுங் கூறுவனவே தலபுராணங்கள். அப்படிப்பட்டனவே கீரிமலை வரலாறும் கும்பாபிடேக மலருமாம்.

[16ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

சூரியமூர்த்தி—
பேபி கிருஷ்ணவேணி

மந்திகை வர்த்தகர் ஆறுமுகம் கந்தையா தம்பதிகளின் மூத்த புதல்வனும் 'ஈழநாடு' பத்திரிகை நிருபருமான திரு. ஆ. க. சூரியமூர்த்தி அவர்களுக்கும் மந்திகை அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த குமரேசு துரைசிங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வி செல்வி பேபி கிருஷ்ணவேணி அவர்களுக்கும் 7-2-1970 சனிக்கிழமை காலை 6 மணிக்கும் 7-30 மணிக்கு மிடையில் வரும் சுபவேளையில் புருப்பொறுக்கி பிள்ளையார் கோயிலில் திருமணம் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மணமக்கள் அன்புடன் அழைக்கின்றனர். 1938


## விற்பனைக்கு

காணி:

அளவெட்டி வடக்கில் தண்ணீர்வசதியுள்ள லொறி போக வசதியுள்ளதும், பயிர் செய்ய நல்ல மண் உடையதுமான 25 பரப்பு பனை மரங்களும், மா, முருங்கையும் உள்ளது. விபரங்களுக்கு சி சிவஞானம், வெள்ளியம்பத்தை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 1818

## அமி ஜோன்சன்—2

[இருபத்தேழே வயதில், இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான 18 ஆயிரம் மைல் தூரத்தை, திறந்த விமானமொன்றில் தன்னந்தனியனுக- வெற்றிகரமாகப் பறந்து கடந்த அமி ஜோன்சன் என்ற வீரப் பெண்மணியின் கதை இது. இதன் முற்பகுதி சென்ற வார 'ஈழநாடு' வாரமலரில் வெளியாயிற்று.]



சிரியாவிலிருந்து பக்தாத் நகருக்குப் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் பழுது ஏற்பட்டு பாலைவனத்தில் திடீரென இறங்கவேண்டியிருந்தது. பாலைவனத்தில் சுழன்றடிக்கும் புயற்காற்று விமானத்தைத் தூக்கிச்செல்லாதிருக்க, விமானத்தைத் தரையோடு சேர்த்துப்பலமாகக் கட்டிவைக்கவேண்டியிருந்தது. காற்ருேடு கலந்து வரும் மண்ணும் தூசியும் என்ஜினுள் நுழைந்துவிடாமல் என்ஜினையும் கன்வஸ் ஒன்றினுல் பாதுகாப்பாக மூடிவைத்துக் காத்தார். பின்னர் எப்படியோ மீண்டும் பறந்தார்.

பக்தாத்தில் வந்திறங்கிய போது, அமி ஜோன்சனின் விமானஅடிப்பாகம் இரண்டு தனித்தனிப் பாகங்களாகப் பிளந்து விழுந்தது. இதைக் கண்டு அஞ்சா நெஞ்சுடைய அமி ஜோன்சனே அசந்துவிட்டார்! இதோடுதமதுபயணம் நின்றுவிடுமோ என்று அஞ்சினுர், சஞ்சலப்பட்டார்! ஆனல் விமான நிலையத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் விமானத்தைச் சீர்செய்யும் பணியில் வெகுமும்முரமாக ஈடுபட, அமி ஜோன்சனைப் பத்துப் பன்னிரண்டு பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொண்டு கேள்விக்கணைகளைத்தொடுக்க ஆரம்பித்தனர்.

இப்பொழுது அமி ஜோன்சனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பான வரவேற்பு காத்திருந்தது. பாகிஸ்தானிலுள்ள கராச்சி விமான நிலையமே விழாக்கோலம் பூண்டது அமி ஜோன்சனை ஆர்வத்துடன் வரவேற்க! ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அலகாபாத் (இந்தியா) விமானநிலையத்திற்கு புறப்பட்டு ஆங்கில விமானப்படை விமானங்கள் பாதுகாப்பாக கூடவர' கழுத்தில் மணக்கும் மலர் மாலையுடன்போய் இறங்கினுர் அமி ஜோன்சன்.

இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட எட்டு நாட்களில் ஆறு ஆயிரம் மைல்களைக் கடந்துவிட்டார். இதே வீரப் பெண்மணி கல்கத்தாவிலிருந்து வங்காளவிரிகுடா மேலாகப்பறந்து சென்ற போது பெரு மழையில் அகப்பட்டுக்கொண்டார் அமி. விமானமோ அல்லோலகல்லோலப்பட்டது. பெரு மழையோடு சுழன்றடித்த பேய்க்காற்றில் அமியின் விமானம் சிக்கித் தடுமாறியது. ஆனுலும் நிலை தவருது தொடர்ந்து ஓட்டிச் சென்ருர் அமி ஜோன்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

மாணவர்கள் பள்ளிகளில் எதைப் படிக்கிறார்கள், எதைப்படிக்கவில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு நிபந்தனை அசாதாரண சூழ்நிலையில்கூட அச்சமின்றி உண்மையைப் பின்பற்றுபவனே சிறந்த மாணவன். உண்மையைப் பின்பற்றுபவனே ஆண்மை பெறுகிறான்.

0 0 0

மனம், உடல், செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கும் மாணவனே பிறருக்குத் தொண்டு செய்யும் தகுதி பெறுகிறான். இம் மூன்று தூயகுணங்களும் ஒரு மாணவன் வாழ்க்கையில் அமையுமானால் அவன் வாழ்க்கை வெற்றி பெறுவது திண்ணம்.






# நாளை 6 லட்சம் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

## வாரத்தில் ஆறு நாள் வேலைக் கோரிக்கை

(நமது நிருபர்)

ஆறுலட்சம் தோட்டத் தொழிலாளர் நாளை வேலை நிறுத்தத்தில் குதிக்கிறார்கள். வாரத்தில் ஆறுநாள் வேலைகோரி இந்தவேலை நிறுத்தத்தை மேற்கொள்கிறார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச்சேர்ந்த மூன்றரை லட்சம் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தை வாரத்தில் 6 நாள் வேலை கோரிக்கைக்காக மேற்கொள்வார்கள். ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸும், மற்றும் சமசமாஜ கட்சி யூனியன்களும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளப்போவதாக இப்போது அறிவித்துள்ளன.

தோட்ட முதலாளிமார் சங்கத்துக்கு வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துவிட்டதாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தபிரமுகர் ஒருவர் தெரிவித்தார். தொழில் அமைச்சருக்கும் இதனை அறிவித்துவிட்டதாக அவர் கூறினார்.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியனும், தேசிய தொழிலாளர் யூனியனும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

வாரத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஆறுநாட்கள் வேலை செய்வதற்கான திட்டத்தை தொழில் அமைச்சர் கொண்டுவரவேண்டு வேண்டுமென்றும் வாரத்தில் 6 நாட்களுக்கு வேலைத்திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ள தொழிலாளர் காங்கிரஸ் இதற்கு மாற்றுத்திட்டமாக ஒருயோசனையையும் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது. துறைமுகத் தொழிலாளர்களுக்கு வழங்குவது போன்ற குறைந்த பட்சம் மாதாந்த சம்பளத்தை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

வேலைநிறுத்தத்தின்போது எவ்வித அசம்பாவிதமும் நடக்காதிருக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மத்தியபகுதி பொலிசார் மகாநாடு ஒன்றை நேற்று நடத்தி நிலைமையை ஆராய்ந்தனர். தேசிய பாதுகாப்புசபையும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(சி. பி. ஏ)

## வேலையற்ற பட்டதாரிகள் அரசியலில் ஈடுபடுவர்?

(நமது மல்லாகம் நிருபர்)

மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் ஒரு அரசியல் பிரசார இயக்கத்தை பரந்த ரீதியில் அமைப்பது குறித்து அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க வடபிரதேசக்கிளையின் பாதுச்சபை இன்று காலை யாழ்ப்பாணத்தில் ஆராயவிருக்கின்றது. சங்கத்தலைவர் திரு. க. சிவசுப்பிரமணியம் பொதுச்சபைக்கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

சங்கத்தின் கடந்தகால சாதனைகளை மதிப்பிடுவதுடன் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது பற்றிய முடிவையும் தீர்மானிக்கவிருக்கின்றனர். தற்போது ஒத்திவைத்துள்ள உதவிப் பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தை உடனே மேற்கொள்ளுமாறு பிரதமரையும் கல்வி மந்திரியையும் கோரும் பிரேரணையும்நிறைவேற்றப்படும். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிக்கொடுப்பதற்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புத்தேடும் பகுதியின்வேண்டுகோளுக்கு அமைய ஆலோசனைகளை வழங்கவிருக்கும் சங்கம் வேலைவாய்ப்பு ஆலோசனைக் குழு ஒன்றினையும் அமைக்கவிருக்கின்றது.

## இனத்தோடு இனத்தை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உணர்ச்சியினால் நாட்டுமக்கள் பிரதமர் திரு'டட்லியை ஆட்சிபீடம் ஏற்றினர்.''

மனிதருடைய உடல்இரத்தத்தினால் இயங்குகின்றது. இதுபோலவே தமிழர்-சிங்களவர்களின் இரத்தத்தினால் அமைந்தது இலங்கைப் பூமி. பிறப்பிலே வித்தியாசம் காணப்படுவது கிடையாது. நாம் மனிதத் தன்மைக்கு மதிப்புக்கொடுத்து வாழப்பழகவேண்டும். நாம் இறந்தபின் எங்கே பிறப்போம், எந்த இனத்தில் பிறப்போம் என்று எவராலுமே இப்போது நிச்சயிக்க முடியாது.

பழையசம்பவங்களை நாம் படிப்பினைகளாகக் கொண்டு எமது எதிர்காலப்பாதையைச் சரியாக அமைத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் திட்டங்களை அனுபவிப்பவர்கள் பொது மக்கள்தான். ஆதலினால் அரசாங்கத்தின் திட்டங்களுக்குப்பொதுமக்கள் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கவேண்டும்.''

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் சரிவர நடக்கவேண்டும் வரிப் பணங்களை அபிவிருத்தித் திட்டங்களின்மீது கையாளும்போது ஏற்கவே நன்கு திட்டமிடப்பட்டுச் சிக்கனமான முறையில் செலவிட வேண்டும். சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வது பொதுமக்கள்தான். ஆதலால் உறுப்பினர்கள் பொது மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக்கொடுத்து நடக்கவேண்டும்.

நான் திட்டமிட்டுள்ள சகல அபிவிருத்தித்திட்டங்களும் பூர்த்தியடைந்ததுமே நிம்மதி அடைவேன். பின் தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்தில் உள்ளூராட்சி அமைச்சு விசேட கரிசனம் காட்டிவருகின்றது. எனது சுற்றுப்பயணங்கள் வெற்றியை அளித்துள்ளன. கிராமங்களின் குறைகளை நேரில் அறியவும்குறைகளைப் போக்குவதற்கான உத்தரவுகளை உடனடியாகப்பிறப்பிக்கவும் எனது இச்சுற்றுலா பயனளித்துள்ளது.

பிரச்னைகளைப் பெருப்பிப்பதால் நாம் நன்மைஅடையப்போவதில்லை. வடமராட்சியில் நான் பெரிதும் அக்கறை செலுத்திவருகிறேன். கரவெட்டி அத்துளுக்குள குழாய் நீர்த் திட்டத்தை கரவெட்டி கிழக்கின் (யார்க்கரு, தெடுத்தல்) [illegible] திக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

### தவறிவிட்டது

நெல்லியடி பட்டினசபை காரியாலயத்தின் திறப்பு கோர்வை ஒன்று சந்தைக் கடுகாமையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பட்டினசபை செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

1650

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குரக்கன்துறை . .

[15ம் பக்கத் தொடர்ச்சி]

பின்வரலாற்று நூலாசிரியர்கள் சொல்லாதன பிழையென்பது சரியல்ல. வரலாறென்பது ஆராயுந்தோறும் புதுமை காணப்படுவது. முதற்கணத்தே சரியெனக் காணப்பட்டதுபிற்கணத்தே பிழையெனக் காணப்படுகிறது. ஆதலின் செவிவழி, நூல்வழி, சாசனவழி, கல்வெட்டுவழி இவற்றின்வழி [illegible] லாற்றையும் சமயத்தையும் [illegible] நிறுவோம்.

## சுவீப் முடிவுகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 01 E 0389 | 03 R 0329 |
| 34 W 0198 | 32 Y 0350 |
| 04 T 0754 | 14 M 0353 |
| 07 N 0478 | 14 X 0857 |
| 10 R 0750 | 05 R 0053 |
| 02 Z 0867 | 33 G 0416 |
| 04 Y 0176 | 27 P 0362 |
| 06 X 0250 | 29 O 0219 |
| 29 A 0719 | 08 N 0023 |
| 28 H 0407 | 14 Q 0578 |
| 10 P 0947 | 23 Y 0693 |
| 15 J 0833 | 10 T 0106 |
| 18 G 0376 | 03 X 0923 |
| 26 F 0725 | 04 T 0590 |
| 20 T 0305 | 24 E 0009 |
| 03 D 0990 | 20 N 0786 |
| 25 M 0168 | 19 G 0438 |
| 22 [illegible] 0459 | |
| 07 B 0515 | 19 E 0684 |
| 22 F 0740 | 23 F 0837 |
| 08 P 0640 | 19 F 0946 |
| 10 W 0997 | 25 M 0011 |
| 25 D 0240 | 18 B 0829 |
| 19 D 0145 | 23 K 0229 |
| 14 O 0792 | 08 F 0050 |
| 01 F 0924 | 03 N 0175 |
| 24 U 0285 | 17 A 0781 |
| 17 Y 0003 | 22 M 0290 |
| 03 Z 0403 | 04 M 0527 |
| 21 O 0383 | 06 D 0294 |
| 06 X 0195 | 18 D 0996 |
| 20 Z 0006 | 29 K 0056 |
| 22 S 0189 | 15 P 0245 |
| 21 W 0889 | 29 L 0848 |
| 03 U 0526 | 14 O 0048 |
| 32 D 0581 | 33 O 0268 |
| 28 U 0960 | 26 O 0624 |
| 24 A 0834 | 13 G 0099 |
| 11 Z 0279 | 22 M 0972 |
| 20 E 0970 | 18 L 0935 |
| 27 P 0914 | 04 X 0806 |
| 09 H 0443 | 17 L 0983 |
| 03 U 0265 | 08 D 0184 |
| 22 K 0499 | 24 W 0682 |
| 15 L 0829 | |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டியவை.)

## தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகின்றனர்?

கோட்டை, வியாழன்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களில் மூன்றிலொருபங்கினரே வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளதாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். துறைமுகத்தில் வேலைக்கு திரும்பும் தொழிலாளர்கள் தொகை அதிகரித்து வருவதாகவும் இதனால் துறைமுகத்தில் வேலை செய்துவரும் இராணுவத்தினர் அப்புறப்படுத்தப்படுவதாகவும், சுமார் 12,332 பேர் வரையில்வேலைசெய்து வருவதாகவும் துறைமுக சரக்குக்கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். தனியார்துறையில் வேலைநிறுத்தம் செய்துவரும் வர்த்தகசங்கஊழியர்களில் சுமார் அறுபதுசதவிகிதத்தினர் வேலைசெய்து வருவதாகவும் தெரியவருகிறது.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை வித்துவான் திரு. க.கி. நடராஜன் பெரியபுராண விரிவுரைத்தொடரில் 'அப்பர் அரன்அடி அடைந்தமை' என்னும் பொருள்பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org